# சிரித்திரன்




— பொன் மொழி —

—o—


நாட்டின்
பொருளாதார உயர்வுக்கு
உழைக்காது
பொருளை அனுபவிப்பதற்கு
உனக்கு எவ்வித
உரிமையும் கிடையாது
மற்றவர்களை
மகிழ்ச்சிப்படுத்தாது
நீ மட்டும் —
மகிழ்ந்திருப்பதற்கு
உனக்கு எவ்வித
உரிமையும் கிடையாது.

— பெர்னாட்ஷா —

ஆண்டு மலர்
டிசம்பர்-76
விலை 2.50

*

பாடல்
றெக்கோடிங்
செய்வதற்கும்



மோட்டார்
றிவைன்டிங்
வேலைகட்கும் சிறந்த இடம்

**விக்ரர் அன் சன்ஸ்**
100, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

HOONA ARTS



அந்தக் கஞ்சப் பிரபுவான முதலாளியிடமிருந்து உன் கணவருக்கெப்படி 'இன்கிறிமென்ட்' கிடைத்தது?

அவர் 'கோமாளிகள்' பார்த்துவிட்டு குஷி மூட்டில் இருக்கையில் கேட்டார் கிடைத்துவிட்டது!

- மரிக்காரின் நடிப்பு ஜாதி
- உபாலியின் அக்டிங் ஹரிஷோக்
- ஐயர்-மிஸிஸ் ஐயர் பிரமாதம்.
- அப்புக்குட்டி நல்லமுசுப்பாத்தி

'கோமாளிகை' நிறைந்து விட்டது.

கோமாளிகள் கும்மாள மிடும் படமாளிகைகளும் நிறைந்துவிட்டன.

— அமர்ஜோதி மூவிஸ் அளிக்கும் —

எஸ். ராமதாஸின்

# கோமாளிகள்

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில்
உயரும் உன்பெருமை அயல்நாட்டில்....

**விவசாயிகளே!**

உங்கள் விவசாய அபிவிருத்தியைத்
துரிதப்படுத்தும்

- களை கொல்லிகள் (WEEDICIDES)
- காளான் அகற்றிகள் (FUNGICIDES)
- கிருமிநாசினிகள் (PESTICIDES)

மற்றும் சகலவித உரவகைகளுக்கும், விவசாய
இரசாயனப் பொருட்களுக்கும்
உகந்த இடம்.

**அக்ரோ விலாஸ் (AGRO VILAS)**

நிதான விலை

நிறைந்த சேவை

# அக்ரோ விலாஸ்

## AGRO VILAS

Prop, S. R. KANDASWAMY

இடைக்காடு, அச்சுவேலி. IDDAIKADU, ATCHUVELY.

WITH THE BEST COMPLIMENTS

NEW CITY TRADERS

No. 4, Adamally Buildings
COLOMBO-13.

## கல்விச் செல்வி வெளியீட்டு விழா

ஆண்டுதோறும் கலைமகளுக்கு விழா எடுத்து வரும் கல்வி அமைச்சின் இந்து மன்றம் இவ்வாண்டு இந்த விழாவில் 'கல்விச் செல்வி' என்னும் சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளது. பல்துறையைச் சேர்ந்த அறிஞர்களினதும் படைப்புகளைத் தாங்கி வெளிவந்துள்ள இம்மலரை மன்றத் துணைத் தலைவரும், சிறந்த எழுத்தாளருமான திரு. வை. அநவரத விநாயகமூர்த்தி அவர்கள் உருவாக்கியுள்ளார்.



படத்தில் 'கல்விச் செல்வி' முதற்பிரதியை பிரதிக் கல்வி மாஅதிபதி திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் அவர்களிடமிருந்து பிரபல வர்த்தக நிறுவனமான சின்னத்துரை அன் பிரதர்ஸின் நிர்வாக அதிகாரி திரு. கந்தையா-குமாரசாமி அவர்கள் பெறுகிறார். மத்தியில் நிற்பவர் துணைத்தலைவரும் மலராசிரியருமான திரு. அநவரத விநாயகமூர்த்தி அவர்கள்.

## 'பஞ்சமர்' தென்னிந்தியாவில் மறுபிரசுரம்.

பஞ்சமர் என்ற 1963-க்கான இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசிலைப் பெற்ற நாவல், அதன் இரண்டாம் பகுதியையும் உள்ளடக்கி தென்னிந்தியாவில் மறுபிரசுரமாகிறது. மதுரையைச் சேர்ந்த P. A. M. என்ற பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்று இந்த மறுபிரசுரப் பணியை ஏற்றுள்ளது. விரைவில் இந்தியாவில் இரண்டு பாகங்களையும் கொண்ட 'பஞ்சமர்' விரைவில் வெளியிடப்படும்.

## சிரிப்பு

### சங்கீதச் சிரிப்பு!

பெண்குயில்: பொப் இசை கேட்கக் கூடாது என்று சொன்னேன் கேட்டீங்களா?

ஆண் குயில்: ஏன் இப்போ என்னாச்சு?

பெண் குயில்: உங்க சங்கீதம் அபஸ்வரம் பேசுதே!

— ஜோக்கிரட்டீஸ்

★

ஏன் பாப்பா அம்மாவோடு சண்டை போடுறாய்?

இன்றைக்கு ஜண்டை வரிசை படித்தனன்!

— சிற்சி

---

டிரைவர்: ஏன்டா நட்ட முருங்கைத் தடியை ஆட்டிறாய்?

மகன்: கார் ஓட்டுவதற்கு "கியர்" போட்டுப் பழகுகின்றேன்!

●

என்ன வீட்டிற்கு வெளியால் மழையில் நனைந்தபடி நிற்கிறீர்கள்?

மனைவி வீட்டைப் பூட்டிவிட்டுப் படம் பார்க்கப் போய்விட்டாள். வரும்வரை காத்து நிற்கிறன்!



கருத்திற்கு இனியது சிரித்திரன்
கண்ணுக்குஇனியது லலிதா நகை

தங்க நகைகளுக்கு
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்.

# லலிதா ஜுவலறி

உரிமையாளர்:
செல்லையா இந்திரசித்து
இல. 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பல்சுவை ஏடு பல்லாண்டு வாழ.....

16-6-76

ஆசிரியர், ''சிரித்திரன்"
(நகைச்சுவை ஏடு) யாழ்நகர்.

என் இனிய சிவா அண்ணன்,

நீண்டநாட்களின்பின் ''சிரித்திரன்" படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கொஞ்சமும் அரசியல் கலப்பற்ற தரமான நகைச்சுவை ஏடாக சிரித்திரன் வெளிவருகிறது.

சிரித்திரனின் சென்ற ஆண்டுமலர் அருமையான ஒரு படைப்பு. விளம்பரங்கள் பிரமாதம். ''அரியதரமான சிரித்திரனும் கிடைக்கும்'' என்ற சாப்பாட்டுக்கடை விளம்பரம், சிரித்திரனின் சொல் விளையாட்டுக்கு ஒரு விளம்பரம். பெல்பொட்டம் ''மைனர் மச்சான்'' பலே. ''ஈழத்தின் தலைசிறந்த சஞ்சிகை'' என்ற சொற்களால் சிறைப்பிடிக்கமுடியாத திறமை அதனிடம் உண்டு. சொற்களால் வரையமுடியாத திறமை சிரித்திரனின் எழுத்துக்களிடம் உண்டு.

ரசிகன், சுதர்சன்

ஃ ஃ

எனக்கு சிரித்திரனை மிகவும் பிடிக்கக் காரணம்; அது அரைத்த மாவையே அரைக்கும் யந்திரமல்ல. அதன் நகைச்சுவை இரண்டு மூன்று நாட்களுக்குக்கூட நினைத்து, நினைத்துச் சிரிக்க-சிந்திக்க வைக்கும் நகைச்சுவைப் பெட்டகம். எனக்கொரு ஆசை; சிரித்திரனை இந்த ஆசியாக் கண்டத்திலேயே தலைசிறந்த நகைச்சுவை ஏடாகப் பிரகடனப்படுத்தப் படவேண்டும் என்பதே. நிறைவேறுமா?

செல்வி. M. இந்து, கொழும்பு-12

ஃ ஃ

186, Avisavella Road,
Kotiyakumbura. 17-9-76

அன்பின் சிரித்திரன் ஆசிரியருக்கு,

நான் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு அங்கு விஞ்ஞான ஆசிரியனாகத் தொழில் புரிகின்றேன். உங்கள் சிரிப்பினூடே சமுதாய மறுமலர்ச்சிக்காகவேண்டிப் போராடும் சிரித்திரன் ஏட்டை ஏறத்தாழ 10 வருட காலமாகப் படித்து வருகிறேன். ஏனைய சஞ்சிகைகள் விசேடமாக புரட்சிக் கருத்துக்களை அள்ளி வீசி திடீரென்று புற்றீசல் போல் கிளம்பி மடிந்துவிடுவது ஈழத்து வழக்கு. தாங்கள் யதார்த்தவாதி. ஆனல் அதிதீவிரவாதியல்லர். இதனுற்றுன் எந்தச் சமூகத்தை நீங்கள் நாடுகின்றீர்களோ அதே சமூகம் உங்களை ஏற்றுக்கொள்கின்றது. வாழ்க உங்கள் தொண்டு. வளர்க மகுடி ஞானம்.

சிரித்திரன் இலங்கைக்கு மட்டுமல்ல தென் கிழக்காசியாவுக்கே தனித்துவம் மிக்க ஓர் பத்திரிகையாக வளரும் நாளை எண்ணிக் காத்திருக்கும்

உங்கள் அபிமான வாசகன்

# சிரித்திரனுக்குச் சிறப்புக்கொடுத்த சிருஷ்டியாளர்கள்.

சிரித்திரனின் பதினுன்காண்டு சரித்திரத்தை உருவாக்குவதில் ஊக்கமும் உத்வேகமும் அளித்த சிருஷ்டியாளர்கள் நூற்றுக்கணக்கானோர் அனைவரும் நன்றிக்குரியவர்கள். சிரித்திரனின் பெருமைகளுக்கெல்லாம் மூலவர்கள். சாதனையைச் சாதிக்கச் சாதனமானவர்கள். அவர்களைச் சிரித்திரன் தன் வாசக அன்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் மகிழ்வும் கௌரவமும் அடைகிருன்.

★ பிரம்மஞானி (ஸ்ரனிஸ்லொஸ்)

தத்துவமும்-தனித்துவமுமிக்க சிறுகதை அமுதங்களைச் சிருஷ்டித்த புதுமைப்படைப்பாளி. மனேதத்துவக் கட்டுரைகள் மூலம் உளவியல் உண்மைகள் மக்கள் மத்தியில் பரவக் காரணமானவர். சிரித்திரனில் இவர் எழுதிய மனேரதங்களை யாரால்தான் மறக்கமுடியும். இன்று லண்டனில் உளவியல் நிபுணராகப் பலரின் மனக்கவலைகளைத் தீர்த்துவரும் இவர் கடல் கடந்து வாழ்ந்தாலும் சிரித்திரனில் பற்றும் பாசமுமிக்கவர்.

★ அமரர் அ. ந. கந்தசாமி

அமரர் கந்தசாமி ஈழத்திலக்கியத்துறையின் உதய ஞாயிருகத் திகழ்ந்தவர், சிரித்திரன் ஆரம்ப காலம் முதல் அவன் வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். சிரித்திரனின் முதற் தொடர்கதையான 'சங்கீதப்பிசாசு' நவீனத்தை அற்புதமாக எழுதிய அமரகலைஞர்.

★ அகஸ்தியர்

'நம்நாட்டுக் கதாபாத்திரங்கள்' என்ற தொடரைச் சிரித்திரனில் எழுதிய அகஸ்தியர் எல்லார்க்கும் தெரிந்தவரே.

★ சி. கே. சிவா

'நடுநிசி' என்ற தொடரை எழுதி வாசகரை நடுநடுங்க வைத்த சிவா சிறந்த எழுத்தாளர். அடிக்கடி எழுதாவிட்டாலும் அற்புதமாக எழுதும் ஆற்றல் மிக்கவர்.

★ திக்கம், எஸ். கே. பாலா

சிரித்திரனுக்குபல சுவையான விஷயங்களை அளித்து வந்த திக்கம் பாலாவை யார்தான் மறக்கமுடியும்.

★ அமிர்தஞானம்

சிரித்திரன் ஆரம்பகாலம் முதல் தனது சிரிகதைகளின் மூலமும் நகைச்சுவைத் துணுக்குகள் மூலமும் வாசகர்களை மகிழ்வித்து வந்தவர். இவர் எழுத்தாளர் மட்டுமல்ல, நாடகாசிரியரும் நடிகனுமாவார்.

★ திக்கவயல்

இவரும் ஒரு பல'நாமதாரி'யே. நகைச்சுவை இவருக்கு கைவந்த கலை. சிரித்திரனின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் பணி அளப்பரியது. எழுத்தாலும் செயலாலும் சிரித்திரனுக்கு சிறப்புத் தருபவர் இவர்.

★ கே. கணேஷ்

முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான திரு. கணேஷ் அவர்கள் சிறந்த மொழிபெயர்ப்பாளராவர். இவரது கவிதைகளும், மொழிபெயர்ப்புக் கதைகளும் சிரித்திரனைச் சிறப்பான இதழ்களாக்கியுள்ளன.

★ குறிஞ்சிதாசன்

ஒய்யப்பங்கங்காணியாரை யார்தான் மறக்கமுடியும். பதுளை ராகுலன் என்ற பெயரில் கவிதைகளும் எழுதுபவர் இவரேதான்.

★ கு. இராமச்சந்திரன்

வானொலியில் 'குன்றின் குரலாக' ஒலிக்கும் இந்த சுறுசுறுப்பான இளைஞர் எழுத்தோவியங்கள், மொழிபெயர்ப்புகள், துணுக்குகள் ஒவ்வொரு சிரித்திரனையும் சிறப்பாக்கி வருகின்றன. சிரித்திரனுக்கு இயக்க பூர்வமான பணிபுரியும் படைப்பாளி.

★ செங்கை ஆழியான்

சிரித்திரன் வாசகர்களுடன் தன் படைப்புகள் மூலம் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திய செங்கை ஆழியான் இலக்கிய உலகில் பலவகையிலும் பிரபல்யமானவர். சிரித்திரன் வளர்ச்சிக்கு அவர் அளித்துள்ள பங்கு குறிப்பிடத் தகுந்தது. இவரது 'மயான பூமி' 'கொத்தியின் காதல்' ஆகிய நவீனங்கள் வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றவை.

★ சா. ரா. பா.

இந்த மூன்றெழுத்துக்குள் மட்டுமல்லாது இன்னும் பல்வேறு பெயர்களுள்ளும் புகுந்து அவதாரம் எடுத்து வருகின்ற சா. ரா. பாலகிருஷ்ணசர்மாவின் சிரிகதைகளும் துணுக்குகளும் வாசகர்களை எப்படிக் குலுங்கச் சிரிக்க வைக்கின்றன என்பது உங்களுக்கே தெரிந்ததுதானே.

★ இளங்கீரன்

'அன்னை அழைத்தாள்' நாவலின் உங்களின் இதயங்களோடு உறவாடி வரும் இளங்கீரனை அறியாதவர் ஈழத்திலக்கிய உலகின் அதன் செழுமையை அறியாதவரே. அரசியல் படைப்பிலக்கிய ஆக்கபபணிகளுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்துவரும் 'கீரன்' சிரித்திரன் வளர்ச்சியில் காட்டும் அக்கறை அளப்பரியது

★ காசி ஆனந்தன்

மகாகவி பாரதியாரின் பரம்பரையில் வந்த உணர்ச்சிக் கவிஞரை நாடு நன்கறியும், அற்புதமான கருத்துக்களை மாத்திரைக் கதைகளாக்கி சிரித்திரன் வாசகர்களுக்கு ஊக்க மாத்திரைகளாகத் தந்தவர், அறிஞர் அண்ணா பற்றியும், மார்ட்டின் லூதர்கிங் பற்றியும் சிரித்திரனில் அவர் எழுதிய கவிதைகள் காலத்தை வென்று வாழும்.

★ இரசிகமணி கனகசெந்திநாதன் — து. வைத்திலிங்கம் — சசி. கிருஷ்ணமூர்த்தி —டானியல் அன்ரனி முல்லை மணியன் — சிவலிங்கராஜா — க. பாலசுந்தரம் — கங்கா—மருதூர் அலிக்கான் — செ. யோகநாதன் — பெனடிக்ற் பாலன் — வெ. ஜெ. போஸ் வ. ஐ. க. ஜெயபாலன்

சிறுகதைகளுக்கொரு சிரித்திரன் என்ற கௌரவத்தைச் சிரித்திரனுக்குப் பெற்றுக்கொடுத்த சிறந்த சிறுகதையாளர்கள். இவர்களின் கதைகள் ஒவ்வொன்றும் அற்புதமான சிருஷ்டிகளே. ஆமாம், கதை அமுதங்கள்தாம்.


★ குமார் தனபால்


குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் சிரிகதைகளின் மூலம் சிரித்திரன் வாசகர்களை தன்வசப்படுத்தியுள்ள குமார் தனபால் நாடறிந்த நல்ல நகைச்சுவை நடிகனுமாவார். அவரது படைப்புகள் சிரித்திரனை அடிக்கடி அலங்கரிப்பனவாகும்.

★ தியாகு

சிரித்திரன் சிரிகதைப் போட்டியில் பரிசைப் பெற்றதன் மூலம் சிரிகதையாளராக இலக்கிய உலகில் வந்தவரான இவரது படைப்புகள் சிரித்திரன் வாசகர்களை சிரிக்கவைத்து வருகின்றன. சிரித்திரனின் சிறப்பில் அக்கறை கொண்டவர்,

ஏனைய சிருஷ்டியாளர்களின் விபரங்கள் சிரித்திரனில் தொடர்ந்து வெளிவரும்.


அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



டார்லிங் நீங்க சாப்பிடாவிட்டால் இதிலே ரிக்கிறதுக்குப் போட்டிடுவேன்

# நீங்கள்


உயிரோடு இருக்கும் போது என்னை வாழ வைக்கவில்லை... இறந்தபின்பு விழா


தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி

# ரசித்தவை!



# ஆராய்ச்சிமணி

## எழுத்தாளன் கோடியில் நடிகன் கோடி மேல்!

இன்றைய தமிழ்த் திரைப்படங்களின் அடிநாதமாகத் திகழ்வது திரைக்கதைகளே. நல்ல கதாம்சம் உள்ள படங்களே வசூல் உட்பட எல்லா அம்சங்களிலும் வெற்றிபெறுகின்றன. எழுத்தாளர்களின் சிறந்த படைப்புக்களை அவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி (சிலவேளைகளில் திருடியும்) அவற்றின் உரிமைகளைப் பெற்று படமாக்கி அதன்மூலம் லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் படாதிபதிகளும்-நடிகர்களும் எத்தனைபேர். இத்தனைக்கும் அந்தப் படங்களின் மூலக் கதைகளின் படைப்பாளிகள் டைட்டிலில் தங்களின் பெயர்களைப் பார்த்துத் திருப்திகொள்வதுதான். (சில வேளைகளில் அதுவும் இல்லை) கண்டமிச்சம் அவர்களில் ஒருசிலரைத் தவிர பலரின் வாழ்க்கைத்தரம் எந்தவிதத்திலும் உயர்ந்ததாக இல்லை. மாறாக திரைப் படங்களால் அழிக்கப்பட்ட அற்புத சிருஷ்டியாளர்களின் பட்டியல் மிக நீண்டது. போலிக் கதை வசன கர்த்தாக்களான பிரபலங்களால் அவர்கள் ஏப்பம் விடப்பட்டுவிட்டார்கள்.

ஒருகாலத்தில் திரைக்கதை-வசனம் பாடல்கள் என்ற துறையில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்திய கவிஞர் 'கம்பதாசன்' இன்று வாடுவதும் வாழுவதும் வறுமையில்தான்.

மறக்கமுடியாத படங்களான பொன்முடி, ராஜமுக்தி போன்ற பல படங்களின் திரைக்கதை வசனகர்த்தாவான சிறுகதை மன்னன் 'புதுமைப்பித்தனை' அழித்தது சினிமாதான்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவரது ஒரே லட்சியமான அவரது 'பாண்டியன் பரிசு'ஐ படமாக்கமுடியாமல் அவரதுபணத்தினை விழுங்கிக்கொண்டு அவரை மனக்கவலையால் வாடவைத்துக் கொன்றது அவரால் உயர்வடைந்த தமிழ்ப்படவுலகம்தான்.

மற்றுமோர் சிறுகதை மன்னன் 'விந்தன்' திரைக்கதை வசனத்துறையில் புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியவர். இப்போது ஆள் எந்தக் கோடியிலோ?


இன்னும் மணிக்கொடி கால எழுத்தாளரான பி. எஸ். ராமையா, சமீப காலத்துச் சிறந்த எழுத்தாளர்களான பிலஹரி, தூயவன் போன்றவர்கள் எந்த உயர்வையும் அடைந்ததாக இல்லையே. மாறாக தங்கள் சிருஷ்டி இலக்கிய வல்லமையையும் சினிமாக் களத்திற்குப் பலிகொடுத்தவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால் இவர்களது சிருஷ்டிகளைப் படமெடுத்த படாதிபதிகளும், பாத்திரப் படைப்புக்களால் உயர்வடைந்த நடிகர்களும் இருக்கும் நிலை இவர்களுடன் ஒப்பிடுகையில் கோபுரத்திற்கும் குப்பைமேட்டிற்கும் உள்ள வேறுபாடுதான்.

அவர்கள் வாழ்க்கையில் 'கோடி'யைக் கண்டவர்கள்-அனுபவிப்பவர்கள். இவர்கள் வாழ்க்கையில் கோடியில் வாழ்பவர்கள்-அனுபவிப்பவர்கள்.

நல்ல கதாசிரியர்களை அழித்ததுடன் வெறும் கதை விடுபவர்கள் பலரை உருவாக்கியதால்தானோ என்னமோ இன்று தமிழ்ப்படங்கள் கதையம்சம் சிறிதுமின்றி வெறும் 'உதை' அம்சத்துடன் வெளிவருகின்றன. ★

● ''ஆராய்ச்சி மணி'' பகுதிக்கு வாசகர்களிடமிருந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குரிய விஷயங்கள் வரவேற்கப்படுகின்றன.



சிரித்திரன்

நவ. 1976

நகை: 14

செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம் —

# ஒரு சுவடியின் சுவடு!

சிரித்திரன் இன்று பதினுன்காவது பராயத்தில் காலடி எடுத்து வைக்கின்ருன். சந்திரனில் காலடி எடுத்து வைத்தது விஞ்ஞான உலகில் பெரும் சாதனை. ஈழத்தில் ஒரு தமிழ்ச் சஞ்சிகை காலடி எடுத்துவைத்து முன்னேறுவதென்ருல் அதுவும் மாபெரும் சாதனை என்றுதான் கூறவேண்டும்.

சிரித்திரன் ஆரம்பித்த காலம் தொடக்கம் நானும் சிரித்திரன் ஆசிரியரை நிழல்போலத் தொடர்ந்து வருகின்றேன். இந்தச் சமயத்தில் அத்தொடர்பில் ஏற்பட்ட பல சுவையான ஞாபகங்கள் மனக்கண்ணில் நிழலாடுகின்றன.

சிரித்திரன் ஆசிரியர் கட்டிட இலாகாவில் உத்தியோகம் புருஷ லட்சணம் என்று தம்மை மற்றவர்கள் நினைப்பதற்காகக் கடமையாற்றிய காலமது. அங்கு வேலை பார்த்த மற்றுமோர் உயர்பதவித் தமிழ் உத்தியோகத்தர் அவரைப் பார்த்து ''தம்பி... நீ பம்பாய் பத்திரிகைகளிலெல்லாம் 'கார்ட்டூன்கள்' கீறித் தள்ளினனீ... ஏன் அரசாங்கசேவையில் சேர்ந்து உம்மாண்டியாக இருக்கிருய், உத்தியோகத்தைத் தூக்கி எறிந்து போட்டு ஒரு கார்ட்டூன் பத்திரிகை தொடங்கினுல் என்ன?" என்று அடிக்கடி அவருக்கு ஐடியா கூறுவார். அவர் உபதேசத்தைக் கேட்டாலும் உத்தியோகத்தைத் தூக்கிஎறியாது இருந்து வந்த ஆசிரியர் 'சிங்களம் மட்டும்' சட்டம் அமுலாகியதும் பதவி துறந்து அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டு 'சிரித்திரன்' சஞ்சிகையை ஆரம்பித்தார். முதல் இதழ் வெளியானதும் ஒரு பிரதியை ஆசிரியர் எடுத்துக்கொண்டு பத்திரிகையை ஆரம்பிக்க 'ஐடியா' கொடுத்த 'கர்த்தரை' அடைந்து ''ஐயா! பத்திரிகை ஆரம்பிக்கச் சொன்னீர்கள். 'சிரித்திரன்' என்ற பெயரில் நகைச்சுவைப் பத்திரிகை ஆரம்பித்திருக்கின்றேன். ஒரு 'சந்தா' தந்து ஆசீர்வதிக்கவேண்டும்" என வேண்டினுர். அவரோ ''தம்பி... எனக்கு இரண்டு பெட்டையள்... மூத்தவள் 'பேசும்



படம்' இளையவள் ராணி' உன்னுடையதை யாருக்கு வாங்குவது சொல்லு பாப்பம்'' எனத் திருவாய் மலர்ந்தருளினுர். ஆசிரியர் பதட்டப்படவில்லை. ''இல்லை ஐயா... நீங்கள்தான் பத்திரிகை ஆரம்பிக்கத் தூண்டினீர்கள், அதனுல்தான் உங்களிடம் வந்தேன்... சரி சேர் உங்களிடம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை... நீங்கள் பாதையைக்

### வெயில்வாகனத்தார்

காட்டிவிட்டீர்கள், நான் நீண்ட தூரம் போகவேண்டும்... போய் வருகிறேன்" என விடைபெற்றேகினுர்.

இந்தப் பிரமுகரின் நடத்தையே சிரித்திரன் சஞ்சிகையின் இன்றைய வீறுநடைக்குக் காரணம். 'உதை ஆருக்கு வாங்குவது' என்று கேட்டார் அவர் அன்று... இன்ரு சிரித்திரன் யார் கைகளில் இல்லையென்பது தான் கேள்வி,

மற்ருெரு சமயம் சிரித்திரன் புத்தகக் கட்டுடன் ஆசிரியர் காலி வீதி வழியாக வெள்ளவத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார். அவ்வழியே நடைபயின்ற தமிழ் கசடறக் கற்ற ஒரு தமிழ்ப் பித்தர் அவரை நோக்கி ''ஓய், சிரித்திரன் ஒரு தமிழ்ச் சொல்லா மலையாளமா?" என ஆவேசம் பொங்க அளந்து கொட்டினுர். அதற்கு ஆசிரியர் அமைதியாக ''இது ஒரு யாழ்ப்பாண மண் வாசனைச் சொல்... சிரித்து இரு என்பதை சிரித்திரன் என்று சொல்வார்கள் — சிரித்திரன் ஆசிரியருக்கு வெய்யில் சூடு படவே கொஞ்சம் சூடும் ஏறியது. 'ஏனையா வெள்ளைக்காரன் அணுவைப் பிளந்து ஆயிரம் ஆக்க வேலைகளைச் செய்கிருன். நீங்கள் சொல் பிளப்பதால் என்னத்தைச் சாதித்தீர்கள்? அது இருக்சட்டும் நீங்கள் நாலு விளம்பரம் எடுத்துத் தந்திட்டு விருப்பிய பெயரைச் சொல்லுங்கள் அந்தப் பெயரில் பத்திரிகை வெளியிடுகின்றேன்'' என்ருர்.

உது சரி... தமிழ் வியாபாரிகளிடம் விளம்பரம் எடுப்பது தணலில் தண்ணி பிழிந்தெடுத்த மாதிரித்தான்" என்று கூறி நழுவி

வீட்டார் தமிழ்ப்பித்தர். சில காலத்தின் பின்னர் அதே தமிழ்ப் பித்தர் ஆசிரியரைச் சந்தித்து சிரித்த முகத்துடன் ''சிரித்திரன் என்ற பெயர் இப்போ எனக்கொரு கலைச்சொல்லாகத் தெரிகிறது" என்று விளம்பினர்.

இன்று சிரித்திரன் என்ற இந்த யாழ்ப்பாணப் பெயர் உலகெங்கும் பரவியிருக்கின்றது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி மலேசியாவெல்லாம் இந்தப் பெயர் ஒலிக்கின்றது. ஹைதராபாத்தில் மேற்படிப்புப் படித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் 'ஜெஸீமா பிக்சர் பலெஸ்' அதிபரின் மகன் சிரித்திரனைத் தவறுது பெற்றுப் படிப்பதாக நேற்றைய தினம் எனக்குக் கூறினர்.

திருக்குடும்பக் கன்னியர் பாடசாலைகளில் மாணவிகள் புனிதமான பண்பான புத்தகங்களையே வாசிக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுண்டு. ஒரு சமயம் ஒரு மாணவி வகுப்பில் புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள். அதைக் கவனித்த வண-மாதா அந்த மாணவியை ''என்ன புத்தகம் வாசிக்கிருய்?" எனக் கேட்டார். மாணவி பயத்தால் விதிர் விதிர்க்க அந்தப்புத்தகத்தை வண மாதாவிடம் கொடுத்தாளாம். அதைப் படித்த மாதா பயந் தொடுங்கி நின்ற மாணவியை நோக்கி ''இந்தப் புத்தகத்தின் பழைய பிரதிகளை எங்கே வாங்கலாம்?'' எனக் கேட்டாராம். அன்று மாலை அந்த மாணவி சிரித்திரன் காரியாலயம் வந்து பழைய பிரதிகளை வாங்கிச் சென்று மாதாவிடம் கொடுத்தாள்.

சிரித்திரனின் புனிதமான புதுமையான, புரட்சிகரமான பணிக்கு இது ஒரு எடுத்துக் காட்டு என ஆசிரியர் அடிக்கடி கூறுவார்,

இப்படி எத்தனையோ சுவையான சம்பவங்கள் சிரித்திரனின் நீண்ட பயணத்தில் நடந்துள்ளன. ஒவ்வொன்றும் சிரித்திரனின் வரலாற்றில் ஒவ்வொரு அத்தியாயங்கள் என்று சொல்லும் ஆசிரியர் — ஈழமண்ணின் இனிய விருட்சமாக சிரித்திரன் வளர உரமூட்டும் வாசகப் பெருமக்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கிருர்,

★

## ரேடியோ நிலையத் தம்பதிகள்



''உங்கள் விருப்பம்'' படி நகை நட்டு. சாரியெல்லாம் வாங்கித் தருகின்றேன்.

''நீங்கள் கேட்டவை" யெல்லாம் நானும் சமைத்துப் போடுகிறேன்.

— சிற்சி

காதலன்: உன் கையால் விஷம் தந்தாலும் அமிர்தமெனப் பருகுவேன்.

மறைவிலிருந்த காதலியின் தந்தை: பிள்ளை... கிருமிநாசினி கொஞ்சம் வார்த்துக்கொடு.



பேப்பரா ரேடியோவா வீட்டிற்கு அவசியம்?

ரேடியோவால் பாண் சுத்த முடியாதே!

□

மாரிகாலம் ரோட்டில் கார் ஓட்டமுடியவில்லை. மேடும் பள்ளமும். வெள்ளமும்.

சந்திரனைப் பார்த்திட்டு வந்து பூமியையும் அப்பிடி வைத்திருக்க விரும்புகிருர்கள் போல!

## மனையிலில்லாள்.



கணவன்: தியேட்டருக்குள்தான் உன் வாழ்க்கை போகுது.

மனைவி, உம்முடைய ஒழுகுகிற வீட்டிலிருந்து அழுகிறதிலும் பார்க்க தியேட்டரில் சந்தோஷமாக இருக்கலாம்!

க. சுகுமாரன், திருகோணமலை.

கே. இலங்கை சுதந்திரம் பெற்றபின் வளர்ந்துகொண்டிருக்கிறதா?

ப. மழை மண்ணை வாரி கடலில்போட்டுத்தேய்த்துக்கொண்டு போகிறது. மக்கள் கட்டுப்பாடில்லாது சனத்தொகையை வளர்த்துக்கெண்டிருக்கிறார்கள்!

பொ. இராமநாதன், சுன்னாகம்.

கே. தமிழன் விஞ்ஞான அறிவுபற்றி உமது கருத்து?

ப. மழை நீரைத் தேக்கிவைக்கும் விஞ்ஞானம் தெரியாது— நிதியைத் தேக்கி வைக்கும் விஞ்ஞானம் நன்றாகத் தெரியும்!

□

சி. சுப்பிரமணியம், பருத்தித்துறை.

கே. யாழ்ப்பாணத்தவர் இன்று என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள்?

ப. வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சீட்டுக் கட்டுகிறார்கள், என்ஜினியரை மகளுக்குக் கட்டுவதற்கு!

□

க. மகேஸ்வரி, மட்டக்களப்பு.

கே. உமக்குப் பிடிக்காத பெண் எவள்?

ப. தாலி கழுத்திலிருக்க வேலியில்லாக் காணிபோல் காட்சி தரும் பெண்!

□

அ. பொன்ராசா, நுவரேலியா.

கே. நீர் சிங்காசனத்திலும் மேலாக மதிப்பது எது?

ப. சாந்தி ஆசனம்!

□

க. சோமசுந்தரம், ஆனைக்கோட்டை.

கே. பெண்புத்தி பின்புத்தி என்கிறார்களே... உண்மையா?

ப. ஆம்... கணவனுக்கு முதுகெலும்பு இருக்கிறதா என்று அடிக்கடி செக் பண்ணுபவள்!

□

சி. இராஜேஸ்வரி, சாவகச்சேரி.

கே. நம்மவர்க்கு என்ன தெரியும்... என்ன தெரியாது?

ப. கியூ வரிசையில் ஒழுங்காக நிற்கத் தெரியாது... சீர்வரிசை ஒழுங்காக வாங்கத் தெரியும்!

□

சி. தர்மகுலசிங்கம், திக்கம்.

கே. சிரிப்பின் சூட்சுமம் எல்லாம் தெரிந்த மகுடியாரே... சில சமயங்களில் உம்மைச் சோகமே உருவாகப் பார்த்திருக்கின்றேன், காரணம் என்ன?

ப, மருத்துவ விஞ்ஞானம் தெரிந்த டாக்டர் நோயாளியாவதில்லையா என்ன?

□

வீ. சேந்தன்குமார். மாத்தளை.

கே. எமது அரசியல்வாதிகளுக்கு தூரதிருஷ்டிப் பார்வையுண்டா?



ப. மாலை கண்ணுள்ளவர்களுக்கு எப்படித் தூரதிருஷ்டிப் பார்வையிருக்கும்!

□

ம, சோமசுந்தரம், முள்ளியவளை

கே. குடிப்பதற்குப் பாலிருக்க ஏன் மனிதன் கள்ளைக் குடிக்கின்...?

ப. எருமைக்கு சகதி சந்தனம்!

□

எம். விஜயன், கொழும்பு.

கே, லண்டனில் இருக்கும் யாழ்ப்பாணத்தவரைப் பற்றி நீர் சிந்திப்பதுண்டா!

ப. ஏனில்லை... அங்கும் அவர்கள் ரயில் ஏறி காய்ச்சல் சன்னியென்று சீற்றில் படுத்திருக்கிறார்களோ என்று சிந்திப்பதுண்டு!



வ. தனபால், விஸ்வமடு.

கே. தியேட்டருக்கும் வீட்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. தியேட்டரில் மேடைத் திரையில் காதல், கராட்டி எல்லாம் நடைபெறும். வீட்டில் ஜன்னல் திரைக்குப் பின்னால் காதல், கராட்டி எல்லாம் நடைபெறும்!

●

வ. சிவராசா, களுவாஞ்சிக்குடி.

கே. மூடனுக்குப் பெண் ஆசை வந்தால்?

ப. கறுப்புக் கண்ணாடி அணிந்து அமாவாசை இருட்டிலும் பெண் தேடி அலைவான்!

★

ம. பூலோகசிங்கம், காரைநகர்.

கே. திருமண வைபவத்தின் போது மணப்பெண்ணின் காலை மணமகன் அம்மியில் தூக்கிவைக்கும் அர்த்தம் என்ன?

ப. மனைவி காலால் இட்ட வேலையைக் கணவன் தலையால் செய்ய வேண்டுமென்பதைக் கற்றுக் கொடுக்கும் ஆரம்ப பாடமாக இருக்கலாம்!

●

சி. ரவி, பளை.

கே. மனைவியின் சொற்படியெல்லாம் நடக்கும் கணவன் பற்றி உமது கருத்து?

ப. மனைவியின் நட்டுவாங்கத்திற்கு ஆடும் தாண்டவக்கோன்!

□

வ. அன்னபாக்கியம், உடப்பு.

கே. கணவன் மனைவிக்குள் ஒற்றுமையில்லாவிடில் வாழ்க்கையில் முன்னேற முடியுமா?

ப. இரு இறகுகளும் ஒத்துழைத்தால் தான் பறவை உயர முடியும்!

□

தி. கனகசுந்தரம், மானிப்பாய்.

கே. பணக்காரனுக்கு அறிவுலகில் மதிப்புண்டா?

ப. அவன் எழுதும் 'செக்' புஸ்தகத்திற்கு நோபல் பரிசு கொடுப்பதில்லையே!

★

சி. அருட்பிரகாசம், அல்வாய்.

கே. ஒரு எழுத்தாளனை வாழ வைப்பது எது? மாழ வைப்பது எது?

ப. வாழ வைப்பது தாள், மை, மாழவைப்பது தாழ்மை!

□

சி. பிலோமினா. பூநகரி.

கே. எமது தமிழ்த்திரைக் காதற் காட்சி பார்க்கும்போது மகுடி மனதில் என்ன தோன்றுகின்றது?



ப. நோயாளி வைத்தியனுக்கு வாயை, கண்ணைக் காட்டும் ஞாபகம் வருகின்றது!

க. விலாசினி, விஸ்வமடு.

கே. இன்று நாம் இறந்தவர்கள் ஆவிக்குப் படைப்பதில்லையே; ஏன்?



ப. இறந்தவர்களின் கூப்பனுக்கும் சங்கக் கடையில் சாமான் எடுபடுவதாகச் சிலர் பேசுகின்றனர். ஆவிதான் கூப்பனுக்கு அரிசி, மா என்று எடுத்து தனக்குப் பொங்கிப் படைக்கின்றதோ தெரியவில்லை!

□

சி. வரதராஜன், மாங்குளம்.

கே. லண்டனிலிருக்கும் எனது தமிழ் நண்பனை ஒரு ஆங்கில மாது காதலிக்கின்றாள். ஆனால் அவர் தமிழ்ப் பெண்ணையே திருமணம் செய்ய விரும்புகின்றார். இது இனப்பற்றா அல்லது...?

ப. இனம் பற்று... ஆங்கிலப் பெண் சீதனம் கொடுக்கமாட்டாளே!

★

சி. எம். ஏ. ரஹ்மான். அக்கரைப்பற்று.

கே. கராட்டி அடி தெரிந்திருப்பது நல்லதா?

ப. கராட்டி போட தெரிந்திருந்தால் நன்மையில்லை. புள்ளடி யாருக்குப் போடவேண்டுமென்று தெரிந்திருந்தால் நாட்டிற்கு நன்மையுண்டு!

# மைனர் மச்சான்



என்ன மைனர் உன்னை ஊரிலை சுற்றித் திரியக் காணேல்லை?

ஊரிலை இப்போ கிழவிக்கும் இளம்பெண்ணுக்கும்; கல்யாணம் முடித்தவளுக்கும் முடிக்காதவளுக்கும் மட்டுமில்லை... ஆணுக்கும் பெண்ணுக்கும் கூட வித்தியாசம் தெரியேல்லை... அதுதான்!

★

ரவி: இந்தத் தேன்கிண்ணம் நிகழ்ச்சியின் இடையில்தானா ரேடியோ இரையவேண்டும்?

மாலதி: இல்லையான் ஏதாவது விழுந்திட்டுது போல... அதுதான் இரையுது!



முதல் பிரயாணி, பிரயாணம் என்பது ஒரு கலை.

மறு பிரயாணி: அதிலும் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வது தனிக்கலை!

— கேசரி



தந்தை: மாஸ்டர்... என் மகனுக்கு இனி நீங்கள் அடித்தால் பெரிய பிரச்சனை தான் வரும்.

ஆசிரியர்; யாருக்கு?

தந்தை: எனக்குத்தான்... அவன் வீட்டிலை நின்றுவிட்டால் குழப்படியைத் தாங்கேலாது!

— கேசரி



ஒரு பிச்சைக்காரன்: எனக்கு டால்ஸ்பாய் என்ற அறிஞரைத் தான் பிடிக்கும்.

மற்றப்பிச்சைக்காரன்; எதற்காக?

முதற்பிச்சைக்காரன்: நானும் அவரைப்போல் ரெயில் பிளாட்போமில்தான் சாக விரும்புகிறேன்!

— கேசரி

★



ஒருவர்: முகம்மதலீ ஒரு பெரிய வீரன்தான். ஷா... அவனுடைய ஒவ்வொரு குத்தும்... என்ன வேகம்?

மற்றவர்: அதெல்லாம் இருக்கட்டும்... உதென்ன கையில் கட்டு?

ஒருவர்: ஒரு கிழவனை சைக்கிளால் தட்டிப்போட்டன். அவன் எழும்பி வெளுத்துப்போட்டான்!

★

★

ஒருவர்: இராமாயணத்தில் கும்பகர்ணனை எழுப்பச் சங்கு, சேமக்கலம், முரசு எல்லாவற்றையும் ஒலித்தும் முடியவில்லையாம்!

மற்றவர்: அந்தக் காலத்தில் பொப்பிசை கிடையாது தானே!

— சச்சி



★

## மீசை துடிக்குதடி...



கட்டப்பொம்மன் மீசை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரத் துரைக்குமுன் கூனிக் குறுகிக் கும்பிடும்போது...



ஸ்டாலின் மீசை வைத்துக்கொண்டு முதலாளியின் முன் கையேந்தி நிற்கும்போது...



ஹிட்லர் மீசை வைத்துக்கொண்டு அயல்வீட்டுக்காரனுக்கு அடங்கி நிற்கும்போது...



பாரதி மீசை வைத்துக்கொண்டு தனி மனிதனுக்குத் துதிபாடும்போது...

# இன்றைய ஸ்பெஷல் 'கேசரி'

தோட்டக்காரன்: முந்தியமாதிரி உங்கட தோட்டத்தில் முந்திரிகைக்கொடி பாவற்கொடி ஒன்றுமில்லையே?

மற்றவர்: அதெல்லாவற்றையும் கட்சிக்கொடி தின்றுவிட்டது!

— O —

ஒருத்தி: என்னுடைய அவர் நைலக்ஸ் சாரி. நகைகள் எல்லாம் வாங்கத் திட்டமிடுவார். ஆனால் வாங்கித் தரமாட்டார்

மற்றவள்: ஏன்?

ஒருத்தி; அவர் திட்டமிடல் பகுதியில் வேலை பார்க்கிறவர்!

— O —

மலை அட்டை: நான் மனிதனுடன் ஒட்டி உறவாடி இரத்தம் குடிப்பவன்.

மூட்டை: நான் ஒழித்துவிளையாடி இரத்தம் குடிப்பவன்.



சுவாமி இவ்வளவு காலமும் தவம் செய்தும் திருவருள் கிட்டவில்லையே என்று கவலைப்பட்டீர்களே... இப்போ கிட்டி வந்துவிட்டது.

அப்படியா... எங்கே சீடா?

பக்கத்து ஊர்த் தியேட்டருக்கு 'திருவருள்' வருகிறதாம்!

'.........?'

—O—

ஒருவர்: இந்த வனத்தில் பாலை மரங்கள்தான் அதிகம்:

மற்றவர்: ஓஹோ... இதுதான் பாலைவனமோ?

—O—

தந்தை: நீ பாங்கில் காசு போட்டனியா?

மகன்: பாங்கிற்கு முன்னால் போட்டனான். தேடி எடுத்திட்டன்.

# பொம்மலாட்டம்

மேனகை

● இப்பொழுது இலங்கைத் திரையரங்குகளில் ரசிகர் கூட்டத்துடன் சேர்ந்து கும்மாளம் அடித்துக்கொண்டிருக்கும் 'கோமாளிகள்' ஈழத் தமிழ்ப்படத்தின் இசையமைப்பாளர்களான கண்ணன் நேசன் இரட்டையர்களில ஒருவரான நேசன் மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதனின் இசைக் குழுவில் பணியாற்றியவர்,

● 'புதிய காற்று' வெற்றிப் படத்தைத் தயாரித்தளித்த திரு. வி. பி. கணேசனின் அடுத்த படத்திற்கு 'நான் உங்கள் தோழன்' எனப் பெயரிட்டுள்ளனர். இப்படத்தின் கதையை பிரபல நாடகாசிரியர் கலைச்செல்வன் எழுதுகிறார். வாமதேவன் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்தை சந்திரன் டைரக்ட் செய்கிறார்.

● நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சுமீபத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் தனது நீண்டநாளைய



விருப்பமொன்றை வெளியிட்டார். அவரது நீண்டநாளைய ஆசை என்ன தெரியுமா? சுபாஸ் சந்திரபோஸாக நடிக்க வேண்டுமென்பது தான்.

● பிரபல சிறுகதை-நாவலாசிரியர் காவலூர் ராசதுரையின் 'பொன்மணி' யாழ்ப்பாணத்தில் வேகமாகப் படமாக்கப்பட்டு வருகிறது. சர்வதேசப் புகழ்பெற்ற டைரக்டர் 'பதிராஜ்' இயக்கிவரும் இப்படத்தின் மூலம் ஈழத்தமிழ்ப் படத்தின் புகழ் வெளிநாடுகளிலும் பரவும் என எதிர் பார்க்கலாம்.

● சுக்ரன் லிமிட்டெட் அளிக்கும் 'நெஞ்சுக்குத் தெரியும்' திரைப்படம் ஈழத்தின் முதல் தமிழ் சினிமாஸ்கோப் படமாகத் தயாராகவுள்ளது. பிரபல டைரக்டர் லெனின் மொறாயஸின் கைவண்ணத்தில் உருவாகவுள்ள இப்படத்தின் கதை-வசனம் பாடல்களை நல்லூர் மனோகரன் எழுதியுள்ளார்,

● இசையமைப்பாளர்கள் இரட்டையர்களாகத்தான் இருக்க வேண்டுமா? சங்கர்-ஜெயகிஷன், கல்யாண்ஜி-ஆனந்தி, விஸ்வநாதன்-ராமமூர்த்தி (முன்பு) சூலமங்கலம் சகோதரிகள், ஜெயா-விஜயா, சங்கர்-கணேஸ். எத்தனை இரட்டையர்கள் பார்த்தீர்களா? இந்த வரிசையில் நமது 'கோமளிகள்' இசையமைப்பாளர்களான கண்ணன்-நேசன் இரட்டையர்களும் சேர்ந்துகொள்கிறார்கள்.

● திரைக் கதாசிரியராக திரைப்பட உலகில் நுழைந்த ஈழத்துக் கலைஞர் குகநாதன், வசனகர்த்தாவாக உயர்ந்து, தயாரிப்பாளராக மாறி டைரக்டராகி இப்போது நடிகராகவும் மிளிர ஆரம்பித்துள்ளார். தயாராகி வரும் சில படங்களில் வில்லன் பாத்திரங்களில் நடித்து வருகிறார்.

● நிர்மலா, மஞ்சள் குங்குமம் புதியகாற்று ஆகிய படங்களில் குணசித்திர பாகங்களேற்று அற்புதமாக நடித்த எஸ். எஸ். சின்னையா சமீபத்தில் தமிழகம் சென்று தமிழ்ப்படங்கள் சிலவற்றில் நடித்துவிட்டுத் திரும்பியுள்ளார்.

● தமிழ்த் திரைப்படவுலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ஏழிசை மன்னன் தியாகராஜபாகவதர் சிலகாலம் நாதஸ்வரச் சக்கரவர்த்தி



திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளையின் சீடராக இருந்தவர். திருநீலகண்டர் படத்தில் நடிக்கும்போது அப்படத்தின் சில பாடல்களைப் பாடுவதற்கான ராகங்களை தெளிவாக்கிக் கொள்ளும் பொருட்டு சக்கரவர்த்தியிடம் மன்னன் சீடராக விருந்தார்.

## ஆரோக்கியம்!

எக்ஸ்ரே
எடுத்துப்
பார்த்தபோது
ஏழையின் வயிற்றில்
ஒன்றுமே
இருக்கவில்லை.

— ஜனமோகன்

''தியாகு''

# சோதனைமேல் சோதனை

# போதுமடா சாமி!

இவள் செல்லம்மாவுடன் மாதம் மாதம் சண்டையாக்கிடக்கு. அவள்தான் என் பத்தினித் தெய்வம். ஒரு சரியான மனுசியெண்டால் குடுக்கிறகாசை வாங்கவேணும். அதை விட்டிட்டு கணக்கு கேட்கிறா கணக்கு. ஒவ்வொரு முப்பதாந் திகதியும் கணக்கு சொல்லுறன்தானே. மறந்து போறாளோ இல்லை வேணுமென்று தான் கேட்கிறாளோ தெரியாது: ஒரு மனுசனுக்கு எத்தனை செலவுகள் இருக்கும். அதுகளைச் சொன்னால் இவளுக்கு விளங்குதோ? நான் குடிக்கிறவன்தான். அதுக்கெண்டு நூறு அல்லது இருநூறை எடுப்பன். மிச்சம் நூற்றைம்பதும் அவள் கையில்தானே கொண்டுபோய்க் குடுக்கிறன்" என்று பக்கத்துவீட்டுப் பராசக்திக்குச் சொல்லிக்கொண்டு நின்றார் வல்லிபுரத்தார்.

''உதுவும் ஒரு கதையோ? வெட்கமில்லாமல் தன்னைப்பற்றிப் புழுகிறார். ஒரு மனுசன் செய்யிற வேலையோ? ஐநூறு ரூபாய் சம்பளத்திலை என்னட்டைத் தாறது நூறு ரூபாய்தான். அதிலைதான் பிள்ளைகளின் பள்ளிக்கூடச் செலவு, சாப்பாடு, வேறும் சில்லறைச் செலவும். சொல்லு பராசத்தி அக்கா, நீ எண்டால் சமாளிப்பியோ? என்ரை தலைவிதி. இதுக்குள்ளை வந்து மாடாய் அடிச்சுக் குடுக்கிறன்'' என்றாள் செல்லம்மா.

''பொத்தடி வாய். என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்? ஒரு சொட்டுப் பொலிடோல் சொன்னது கேட்கும். அப்பதான் உனக்கும் உன்ரை ஆக்களுக்கும் என்னைப்பற்றி விளங்கும். உன்ரை கொண்ணன் குடிக்கிறதில்லையோ? கொப்பன் குடிக்கிறதில்லையோ? நான்தான் உன்ரை கண்ணுக்கை குத்துது" என்று கோடை இடி போல் வல்லிபுரம் சத்தம்போட செல்லம்மா அடங்கிவிடுவாள். அவர் மீண்டும் அதே பல்லவிதான்.

சிலவேளைகளில் கோவிச்சுக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுவிடுவார். அப்படியான நேரத்தில் பராசத்தி அக்காவின் மகன் செல்வராசாதான் அவரைத் தடுத்து ''சரி அண்ணை எல்லாம் கிடக்கட்டும் வா, மற்றவை பார்த்தால் பகிடி பண்ணுவினம். நாளைக்கு பிள்ளைகள் வளர்ந்தாலும் மரியாதை இல்லை" என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு வருவான். இது மாதம் மாதம் முப்பதாந் திகதி நடைபெறும். அப்பவும் இப்படி செல்வராசா திருப்பிக் கூட்டிவாறது அவருக்கு ஒரு வசதியாயிருந்தது.

அப்படித்தான் போன முப்பதாந் திகதியும் செல்லம்மாவிடம் சண்டை பிடித்துக்கொண்டு கிளம்பினார். உள்ளுக்கு செல்வராசா தடுப்பானென்று நினைத்துக்கொண்டு பராசத்தி அக்கா வீட்டுமுற்றத்தால் பேசிக்கொண்டுபோனார் இந்தமுறை செல்வராசா சொன்னான். ''அண்ணை! ஒவ்வொரு முறையும் கோவிச்சுக்கொண்டு போய் வழியில் திரும்பிவர செல்லம்மாக்கா உங்களை ஒரு விசரன் என்று நினைத்துவிடுவ. இந்த முறை நீங்கள் போறதுதான் நல்லது. உவவுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேணும்'' என்று சொன்னான். வல்லிபுரத்திற்கு செல்லம்மாவிலும் பார்க்க செல்வராசாவிலைதான் கோபம் கூட வந்தது. அதை வெளிக் காட்டாது வேகமாக நடந்தார். எங்கையாவது கோயில் மடத்திலை படுத்திட்டு வரலாம் என்றால் இரவாய்க் கிடக்கு. தனியப் படுக்கப் பயம். இரவு பத்து மணிவரை ஊரெல்லாம் சுற்றிவிட்டு எல்லாரும் படு



என்ன பாட்டி... பேரனில் உள்ள பற்று மகனில் இல்லையே?

பேரன்தானே சைக்கிள் ''பார்'' ரில் வைத்துப் படத்திற்குக் கூட்டிக் கொண்டு போவான்!

த்தபின் இரகசியமாக தலைவாசலுக்கை கிடந்த கட்டிலில் படுத்து விட்டார்.

காலை அவரது நாலாவது ஐந்து வயதுப் பிள்ளை கமலா தேநீர்க்கோப்பை கொண்டுபோய் நீட்டினாள். அதை வாங்கிக் கொண்டு ''இந்த முத்தம் மிதிப்பேனோ, உன்னை நினைத்துப்போட்டுத்தான் வந்தனான்'' என்று கமலாவைப் பார்த்து குசினிக்குள் இருந்த செல்லம்மாவிற்குக் கேட்கக் கூடியதாகக் கூறினார். இந்த நிகழ்ச்சி வல்லிபுரத்திற்கு மிக ஆத்திரத்தையும் வெட்கத்தையும் கொடுத்தது. அயலிலுள்ளவர்களைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. இப்படியே ஒரு மாதம் கழிந்தது. முப்பதாந் திகதியும் வந்தது.

வழமைபோல் சம்பளம் எடுத்த வல்லிபுரம் தவறணைக்குக் கொடுக்கவேண்டிய தொகையை யோக்கியமாய்க் கொடுத்து புதுக் கணக்கை ஆரம்பித்தார். தவறணைக்காரனும் கொஞ்சம் விசேஷமாகக் கவனித்து அனுப்பிவைத்தான். அவரிடம் மிகுதியாக இருந்தது நூறு ரூபாய் மட்டுமே. வீட்டை போனதும் கமலாவைக் கூப்பிட்டு இந்தா மேனை இதைக் கொண்டுபோய்க் கொம்மாவிட்டைக் குடு என்றார்.

சிறிதுநேரத்தில் பூகம்பம், எரிமலை, மண்சரிவு, வெள்ளப் பெருக்கு எல்லாம் சேர்ந்தால் எப்படியிருக்குமோ, அதைவிட விசேஷமாக வல்லிபுரம் வீட்டுக் குசினிக்குள் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பிள்ளைகள் எல்லாம் மூலைக்கு மூலை பருந்தைக் கண்ட கோழிக் குஞ்சுகள் போல் பதுங்கின.

போனமாதம் வல்லிபுரம் கோவிச்சுக்கொண்டுபோய் தானே திரும்பி வந்தது செல்லம்மாவிற்கு அவரது பலவீனம் தெளிவாகத் தெரிந்திருந்தது. இந்தமுறை இவருக்கு நல்லாய்க் குடுக்கவேணும் என்று காத்திருந்தவள்

## தெய்வக் குழந்தைகள்!

ஆடை அணிகலனில்
அடுக்கான மாளிகையில்
தேடுவது சொர்க்கமென்றால்
தெய்வங்கள் எதற்காக?

குறிபார்த்துப் பழிதீர்த்து
நிறைதேடல் நன்மையெனின்
அறியாமை இருள்நீக்கும்
அறிவொன்று எதற்காக?

அழகிய பெண்ணென்றால்
ஆயிரம் கண்தேடும்
அழகிலே இன்பமென்றால்
அன்பொன்று எதற்காக?

எளியோரை ஆழ்வதுதான்
வலிமையென்றால் வாழ்விலே
மென்மைமிகு இரக்கமெனும்
மேன்மையும் எதற்காக?

அன்போடு இரக்கமும்
அறிவும் கொண்டு வாழுவோர்
பண்பான இதயம்கொண்ட
ஆண்டவன் குழந்தைகள்.

— சிவசக்தி

போல் ''உமக்குக் கொஞ்சங்கூட. வெட்கமில்லையோ? பிள்ளைகளும் வளர வளர உமக்கும் மூளை அறுந்துபோகுதோ? இந்தப் பொரிஞ்சுபோன நூறு ரூபாயை நான் என்ன செய்ய? இதையும் கொண்டுபோய்த் தவறணைக்குக் குடும். நானும் பிள்ளைகளும் பட்டினி கிடந்து சாகிறம்" என்று வல்லிபுரத்தின் முகத்திலை அந்த நூறு ரூபாயையும் எறிந்தாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத வல்லிபுரம் முதலில் திகில் அடைந்தாரார்யினும் தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு, ''என்னடி சொன்னாய் நாயே? சீதனம் இல்லாமல் உன்னை அள்ளிக்கொண்டு வந்தது என்னிலை பிழை. உனக்குச் செய்யிறன் வேலை. நான் உயிரோடு இருக்கிறதுதான் உனக்குஇடைஞ்சலாய்க் கிடக்கு. நீ என்ரை பிரேதத்திலும் முழிக்கக்கூடாது'' என்று சொல்லி அந்த நூறு ரூபாயையும் எடுத்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினார்.

தற்கொலை செய்யவேண்டுமென்று வீட்டில் சத்தம் போட்டாரே தவிர சாவதற்குச் சரியான பயம். சும்மா விட்டாலும் உவள் என்னை மதிக்கமாட்டாள் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு நடந்தவர் செல்லையா வீட்டு வாசலில் வந்ததும் செல்லையாவைக் கூப்பிட்டார். அப்பதான் தோட்டத்தால் வந்த செல்லையாவும் 'என்ன வல்லிபுரம் இந்த நேரத்திலை?" என்று கேட்டபடி வந்தார்.

''உன்னை ஒன்று கேட்கிறன் வித்தியாசமாய் நினைக்காதை என்ரை மனுசி செல்லம் என்னைக் கொஞ்சமும் மதிக்கிறாளில்லை. வாய்க்கு வாய் காட்டுகிறாள், உவளுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேணும்" என்றார் வல்லிபுரம்.

''சும்மா போ வல்லிபுரம். அதுகள் வேலைக்களையிலை ஏதும் வாய் தடுமாறிக் கதைச்சிருக்கும். அதைப் போய்ப் பெரிசாக்கிறாய், நீ ஒரு படிச்ச மனுசன். நாலு பேரோடை புழங்கிறநீ. இப்படிச் சின்னத்தனமாய்......'' என்றார் செல்லையா.

''அப்படி ஒன்றும் வித்தியாசமாய்ச்செய்யமாட்டன். என்ரை குணம் உனக்குத்தெரியும்தானே. உவள் செல்லம்மாவை ஒருக்காப் பயப்பிடுத்திப்போட்டு விடுறது தான். நீ பழைய பொலிடோல் போத்தில் ஒண்டு தா. உண்ணாணை நான் ஒண்டும் செய்ய மாட்டன். பயப்பிடாமல் தா." என்று வல்லிபுரம் வற்புறுத்தினார். செல்லையாவும் தயங்கித் தயங்கி ஒரு பழைய போத்திலைக் கொடுத்தார்.

ஒருவாறு இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு மறுநாட்

காலை வீட்டை வந்தார் வல்லிபுரம். ஒருவரும் பார்க்காதவாறு போத்திலில் கிடந்த கொஞ்சப் பொலிடோலையும் ஊத்தி தனது கழுத்து, நெஞ்சு ஆகிய இடங்களில் பூசினார், வீட்டு வாசலுக்கு வந்து, ''எடியே செல்லம்மா! இனி நீ நிம்மதியாக இருக்கலாம் என்ரை தொல்லை உனக்கு இருக்காது'' ஒன்று சொல்லி முற்றத்தில் விழுந்தார் உறுண்டார், புரண்டு புரண்டு கத்தினார், மண்ணைக் கைவிரலால் கிளறிக் கிளறி எறிந்தார்.

வெளியே வந்த செல்லம்மா கதிகலங்கிப்போனாள். ''ஐயோ கடவுளே! இந்த மனுசன் என்னத்தையோ குடிச்சுப்போட்டுது. நான் என்ன செய்வன்? தங்கச்சி இஞ்சை ஓடிவந்து கொப்பரைப் பாரன், ஐயோ பராசத்தியக்கா! இஞ்சை ஓடிவா இந்த மனுசன் மருந்து குடிச்சிட்டுக் கிடக்குது. எனக்கு கையும்ஓடேல்லை, காலும் ஓடேல்லை. கத்தினாள், கூக்குரலிட்டாள். அயலிலுள்ள கோயில் எல்லாம் வேண்டினாள். இவள் போட்ட சத்தத்தில் அந்தக் கிராமமே திடுக்கிட்டது.

வடக்குவீதியில் சின்னமேளம் பார்ப்பதுபோல் பெரிய சனக்கும்பல் வல்லிபுரத்தின் சேட்டைகளை அவதானித்த வண்ணம் நின்றது.

அங்கு ஓடிவந்த பராசத்தியக்கா சிறிது நேரத்தில் தேங்காய்ப்பாலை அங்கு நின்றவர்களிடம் கொடுக்க அவர்கள் வல்லிபுரத்தின் வாய்க்குள் பருக்கினார்கள். அவர் திமிறினார். அவர்கள் விடவில்லை. அதோடு அரைப் போத்தல் நல்லெண்ணையையும் பருக்கினார்கள். வல்லிபுரம் திக்குமுக்காடினார். இதற்கிடையில் செல்வராசா காருடன் அங்கு வந்துசேர்ந்தான்"


சரி காருக்குள் ஏற்றுங்கோ என்று யாரோ சொன்னார்கள்.

''என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டாம்." என்னைச் சாகவிடுங்கோ. என்னைத் தடுக்கவேண்டாம்'' என்று கத்தினார் வல்லிபுரம். யாரும் காதில் போட்டதாகத் தெரியவில்லை.

இரண்டு நேரம் சாப்பிடாமல் விட்டதும், நிலத்தில் உறுண்டு புரண்டதும், ஆஸ்பத்திரிக்குப் போனால் என்ன நடக்குமோ என்று நினைத்ததும் எல்லாம் சேர்ந்து உண்மையிலேயே மயங்கி விட்டார்.

மயக்கம் தெளிந்து பார்த்த போது தான் ஆஸ்பத்திரியில் கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது. தனது வாய்க்கும் கைக்கும் குழாய் செருகிக் கிடப்பதையும் உணர்ந்தார். பயம் கூடியது. சற்று கலங்கிவிட்டார்.

இப்படி ஒரு நிலமை தனக்கு ஏற்படும் என்று கனவிலும் கருதாத வல்லிபுரம் என்ன செய்வது என்று கலங்கினார். இதிலிருந்து தப்புவதற்கு தன்னால் இயன்றளவுக்கு யோசித்தார். ஒன்றும் புலப்படவில்லை.



மாரி காலம் உனக்குப் பிடிக்குமா?

பேஷாப் பிடிக்கும்... மாரிகாலத்தில் என் வாடகை வீட்டில் மீன் பிடிக்கலாம்!

— சிற்சி

சிறிது நேரத்தில் அங்கு வந்த டாக்டர், ''நல்ல காலம் உடனே வந்தபடியால் உயிர் தப்பினீர்! இல்லாவிட்டால் நிலமை மிக மோசமாய்ப் போயிருக்கும். எங்களுக்குத் தொல்லை தாறதுக்குத்தான் நீங்கள் இப்படிச் செய்யிறது'' என்று பேசியபடி குழாய்களைக் கழட்டிவிட்டார்.

ஆண்டவன் புண்ணியத்தால் ஒருவாறு தப்பினோம் பிழைத்தோம் என்று நினைத்தவண்ணம் கட்டிலை விட்டு எழுந்தார்.

''நீங்கள்தானே மிஸ்டர் வல்லிபுரம்?''

''ஓம்... ஓம்... ஏன் ஐயா? என்ன சங்கதி?"

''ஒண்ணுமில்லை... சாகிறதற்கு மருந்து குடித்ததுதானே? உங்களைக் கைது செய்யப்போகிறேன்"

''நான் ஒரு பிழையும் செய்யவில்லை. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்னை ஒண்டும் செய்யாதையுங்கோ. உங்களுக்குச் சொன்னாலென்ன? நான் என்ரை மனுசி செல்லம்மாவை பயப்பிடுத்தவே செய்த வேலை இது. வித்தியாசமாய் ஒண்டும் செய்யவில்லை. என்னைப் பற்றி விசாரித்துப் பார்த்தால் தெரியும்'' என்றார் வல்லிபுரம்,

''என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நீர் வந்து ஸ்ரேசனில் சொல்லும்'' என்று அவரது கையில் பிடித்தார் இன்ஸ்பெக்டர்.

''கடவுளே! என்னைக் காப்பாற்ற யாரும் இல்லையா? நான் என்ன செய்வேன்? இனிமேல் பகிடிக்கும் இப்பிடிச் செய்யமாட்டன். ஐயா என்னை விட்டிடுங்கோ'' என்று அழாத குறையாகக் கேட்டார் வல்லிபுரம்

அப்போது அங்கு வந்த டாக்டர், ''சரி இன்ஸ்பெக்டர் ஆளை இந்தமுறை மன்னித்துவிடுங்கோ உண்மையில் இவர் மருந்து குடிக்கவில்லை. இவரைப் பயப்படுத்தவே நானும் சில வேலைகளை வேணுமென்று செய்தேன்" என்றார்.

டாக்டரின் வாக்குமூலத்தைக் கேட்ட இன்ஸ்பெக்டர் வல்லிபுரத்தைப் பார்த்து ''இனிமேல் இப்படிச் செய்தீரானால் கடுமையான தண்டனைதான் கிடைக்கும்'' என்று எச்சரித்துச் சென்றார்.

செல்வராசாவின் உதவியுடன் ஒருவாறு வீடு சேர்ந்தார் வல்லிபுரம்.

இந்த முப்பதாந் திகதி செல்லம்மாவின் கையில் நானூற்றி எழுபத்தைந்து ரூபாயைக் கொடுத்தார் வல்லிபுரத்தார்.




● சைனாவில் வீட்டில் நாய் வளர்ப்பதைத் தடை செய்துள்ளார்கள்.

● பாரிஸ் நகரில் நாய்களுக்குக் கூட ஜாதகம் கணிக்கிறார்கள்.

— சென்ற வருடத்தை உலகத்தோர் மகளிர் ஆண்டாகக் கொண்டாடினார்கள்.

— அமெரிக்காவிலும், ஜப்பானிலும் கடந்த ஆண்டு பிடிபட்ட திருடர்களில் அதிகமானோர் பெண்கள்தான்.

O அமெரிக்காவில் மிகவும் வயதானவர் சார்லி ஸிமித். அவரின் வயது 133.

O ரஷ்யாவில் மிகவும் வயதானவரின் பெயர் ஷிராலி மஸ்லிமாவ். இவரின் வயது 167

■ கம்யூனிஸ்ட் நாடாகிய சீனாவின் காலஞ்சென்ற ஜனாதிபதி மா ஓ சே துங் ஒரு விவசாயியின் மகன்.

■ முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஒரு விவசாயியின் மகன்.

□ சவூதி அரேபியாவில் பெண்கள் கார் ஓட்டக்கூடாது.

□ இப்போது பல அயல்நாடுகளில் தனியாகக் கார் ஓட்டிச் செல்லும் பெண்கள் பக்கத்தில் உள்ள சீட்டில் காற்று ஊதினால் முழு உருவான ஓர் ஆண் பொம்மையைக் காற்று ஊதி உடை உடுத்தி உட்கார வைத்துப் போகிறார்கள். விசிலடிப்பது வழிப்பறி இதனால் குறைந்து விட்டனவாம்.

★ நகைச்சுவைக்கு மனிதன் சிரிக்கின்றான். ஏன சிரிக்கின்றான் என்பதை ஆராய்வதற்கு இங்கிலாந்தில் ஆராய்ச்சி மகாநாடு ஒன்று நடக்கப்போகின்றதாம்.

★ ஜெர்மன் நாட்டில் பலர் எடை கூடியவர்களாக இருக்கிறார்கள். ஏன் எடை கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஆராய்வதற்கு அங்கு ஓர் கமிட்டி அமைத்துள்ளார்கள்.

★

# கலைமகள் விழா.

**இந்து கலாச்சார மன்றம்**

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், கொழும்பு.

நாடு கண்டும் கேட்டும் வரும் விழாக்களில் புரட்டாதி மாதம் பிறக்கும் நல்விழா நவவிழாவாகும்; கல்வி செல்வம், வீரம் முன்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்து இவ்விழாவை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன இந்து கலாச்சாரமன்றம் ஒக்டோபர் மாதம் 2:ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடியது.

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன இந்து கலாச்சார மன்றம் ஆரம்பிக்கப்பட்டு முப்பதே நாட்கள் தான் ஆயினும் கூட்டுத்தாபன சகல ஊழியர்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி இம்மன்றத்தின் விழாவை சிறப்புறச் செய்வதற்காக அரும்பாடுபட்டார்கள். என்றும் சமய விழாக்களில் கலந்து தெய்வீக சிந்தனையை வளர்த்துக்கொள்ள முடியுமெனவும் வரவேற்புரை கூறி விழாவை கலாச்சார மன்றத் தலைவர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பல கலைநிகழ்ச்சிகளில் மெல்லிசை, தாளவாத்தியம் நவவீணை, நடனம் முதலியன முக்கிய அம்சமாக இருந்தன. இந்நிகழ்ச்சிகள் அத்தனையையும் மண்டபத்தே கூடியிருந்த ஆயிரக்கணக்கான பல இன மக்களும் கண்கொட்டாதுபார்த்துரசித்தார்களென்றால் மிகையாகாது

இவ்விழாவின் சிறப்பம்சமாக அங்கு குழுமியிருந்தோர் சகலருக்கும் பிரசாதம்வழங்கப்பட்டதுடன் விழாவை மேலும் சிறப்பிக்கும் வகையில் ''கலைமகள் விழா மலர்'' ஒன்றும் வெளியிடப்பட்டது.

கலைநிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்கு கூட்டுத்தாபனத் தலைவர் திரு. க. சி. தங்கராசா அவர்கள் பரிசில்கள் வழங்க, இவ்விழாவினைச் சிறந்தமுறையில் நடாத்தப் பலவிதத்திலும் உதவிகள் புரிந்த சகலருக்கும் நன்றி கூறப்பட்டு விழா இனிதே நிறைவேறியது

— தகவல்: எஸ். செல்வராசா —



# செய்தி முறுவல்

★ ரஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் மாமிசப் பஞ்சத்தின் காரணமாக வியரழனன்று மாமிசம் சாப்பிடக்கூடாது.

— அப்படி அவர்கள் சைவபோசகர்களானால் அங்கு ஒரு சைவ ஹோட்டல் போட்டால் எப்படியிருக்கும் என்று கேட்கிறார் ஒரு சைவ ஹோட்டல் முதலாளி.

★ அமரர் மா சே துங் அவர்களின் இடத்தில் கொலுவீற்றிருப்பவர் ஹுவா குவாஃபெங் அவர்களின் பிறந்த ஆண்டு வயது யாருக்குமே தெரியாது

— அவர் பிறந்த தேதி தெரியாது எப்படி பிறந்த தின விழா எடுப்பார்கள்" என வியப்புடன் கேட்கிறார் பக்கம் நிற்கும் ஒரு 'பந்த' புத்திக்கார நண்பர் ஒருவர்.

★ இந்தியர்களை உகண்டாவிலிருந்து நாடு கடத்திய ஜனாதிபதி இடி அமினின் டாக்டர் ஒரு இந்தியன்.

— அரசியல்வாதிகளின் பேச்சு வேறு மூச்சு வேறு என்பதை இடிஅமீனின் செய்தி இடித்துக் காட்டுகிறது என்கிறார் எமது மத்தியில் அரசியல் வாதிகளில் அடிக்கடி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் அன்பர் ஒருவர்.

★ அமெரிக்காவில் இரண்டு வயதுக் குழந்தைகளுக்குக் கூட இருதய நோய் வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

— செய்தி

— இருதயமில்லாது விவாகரத்துச் செய்யும் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இருதய நோய் வரும்தானே என்கிறார் பேரப் பிள்ளையைப் பிரிந்திருக்கமுடியாத பாட்டி ஒருவர்.

★ யப்பானில் எழுத்தாளர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். சிலர் சம்பாதிக்கும் அளவுக்கு அங்கு பெரிய சினிமா நடிகர்கள்கூடச் சம்பாதிப்பது கிடையாது.

— கவிஞர்க்கு கூழ் ஊற்றிய பரம்பரையினரின் வழித்தோன்றல்கள் மத்தியில் எப்படி எழுத்தாளன் குபேர சொர்க்கத்தைக் காணமுடியும் என்கிறார் காணி விற்று கவிப்புத்தகம் வெளியிட்ட ஒரு கவிஞர்.

★ உயிரோடு இருந்த குழந்தை இறந்துவிட்டதாக கல்கத்தா நர்சிங்ஹோம் ஒன்றில் சர்டிபிக்கட் கொடுத்தார்களாம்.

— கரண்ட்.

— ''நோயாளியைப்பரிசோதனை செய்யாமல் 'பிறிஸ்கிரிப்ஷன்' எழுதும் டாக்டர்கள் அப்படியும் சர்டிபிக்கட் எழுதுவார்கள்தானே'' எனக் கூறுகிறார் நீண்டகாலமாக ஆஸ்பத்திரிப் படி ஏறி இறங்கும் நோயாளி ஒருவர்:

★ அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏயில் 165000 பேர் வேலை செய்கிறார்களாம்.

— செய்தி

— இந்தச் செய்திக்கு ஒன்றும் கிண்டலாக எழுதவேண்டாம் உன்னையும் பஸ்மீகரம்பண்ணி விடுவார்கள் என்கிறார் ஒரு தொடை நடுங்கி.

★ மிஸ் இத்தாலி பட்டம் பெற்ற அழகி பாவ்லா பிஸ்ஸியானு தன் கால்களை ஆறு லட்சம் டாலர்களுக்கு இன்ஸ்யூர் செய்திருக்கிறாராம்.

— செய்தி

— கால் வடிவம் போன்ற நாட்டில் ஒரு கால் அழகி தோன்றியிருக்கிறார் என்கிறார் ஒரு புவியியல் மாணவன்.

★ பிரஞ்சு மொழியில் ஆங்கில வார்த்தைகள் கலந்துவிட்டன. பிரஞ்சு மொழி தனித்தன்மை இழந்துவருவதால் அதைக் காப்பாற்றவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். — செய்தி

— ''வட் எபவுட் டமில்... டமிலிலும் நிறைய இங்கிலிஷ் வேர்ட்ஸ் கலந்துவிட்டன'' எனக் கவலை தெரிவிக்கிறார் மிஸ்ஸிஸ் டாமோடிரன்.

★ யப்பானிய மன்னர் ஆண்டுதோறும் நெல் நாற்று நட்டு விவசாயத்தை ஆரம்பித்து வைக்கிறார். அதுபோல்காலம் வந்ததும் அறுவடையையும் ஆரம்பித்து வைக்கிறார்.

— ஏன் எமது அரசியல்வாதிகள் சிலர் குரோட்டன் நடுகிறார்கள். ஆனால் அறுவடை தான் செய்யிறதில்லை எனக் கூறுகிறார் அரசியல்வாதியின் அயல்வீட்டில் வதியும் மெயில் வாகனத்தார்.

## அழிவு!

போதையில் கிறங்கி
போக்கிடம் மறந்து
வீதியில் திரியும்
விரிசடைக் கோலங்கள்
பொப்பிசைப் புயலில்
சிக்கிய பயிர்கள்.

— மௌரியன்

## சினிமாப்பாடல்களும்

குறிஞ்சிதாசன்

# ஒய்யப்பங்கங்காணியாரின் சீற்றமும்!

**மச்சானைப் பாத்தீகளா.... மலைவாழைத்தோட்டத்திலே!**

இந்த பாட்டத்தாய்யா கருப்புக்கோட்டு கணக்கப்புள்ளவூட்டு ரெண்டாவது மவ ரஞ்சிதம் பாடிக்கினே இருப்பா... இவவூட்டு மச்சான் மலைவாழைத் தோட்டத்துல இன்னுதான் செய்வானோ எனக்குத் தெரியாது! என்ன எழவோய்யா மச்சானை சந்திக்க ரஞ்சிதம் குட்டி இந்த பாட்ட பாடிக்கினே ஊருக்கு ஒலகத்துக்கு தெரியாமே 'கம்'முனு நெதம் போய்க்கினே இருந்தா... கடசியா ஒரு நாளு பாக்கக்கொல ரஞ்சிதம் குட்டி வாயும் வயிரும், வயித்துல புல்லயோட வந்து நின்னுய்யா...... அட சண்டாள பாவிகளா, மலைவாழைத் தோட்டத்துல இதுதான் செஞ்சிகினு இருந்தீகளா... யேண்டா கோமுட்டி இழிக்கிற? அவ வவுத்த நெனச்சிக்கிட்டா, அவவூட்டு அப்பன் வவுத்துல நெருப்பதான் கொட்டிக்கிட்டான். மச்சானும் மலைவாழைத் தோட்டமும். மண்ண வாறி அவ தலையில வீச... தூத் தேரிக்க... கருமம்டா... கருபம்!



அம்மா... தயவு செய்து அப்பா ஷேவ் எடுக்கும்போது திட்டாதையுங்க.

**நீ என்னென்ன சொன்னாலும் கவிதை, நீ எங்கெங்கு தொட்டாலும் இனிமை!**

என்ட மூத்த பேரப்பய செதம்பரம் இருக்காணிலியா...... அவனுக்கு இந்த பாட்டு நல்லா தெரியுய்யா... அடிக்கடி படிச்சுக்கினே இருப்பான். இந்த பாட்ட அவன் படிக்கிறத கேட்டுக்கினுதான் பெரியமாசி தோட்டத்து நடு கணக்கப்புள்ளவூட்டு சின்ன மவ சரோசா மயங்கீட்டா... அதுக்குப் பொறகுதாய்யா செலம்பரம் சரோசாவுக்கு கடுதாசி எழுதுனது... ''ஆளு கடல் வத்துனாலும் என்ட அம்புகடல் வத்தாத காதலி சரோசாவுக்கு..." அப்புடின்னு நெறய கடுதாசி எழுதி கடசில கலியாணமும் கட்டிக்கிட்டாய்யா... இப்ப நண்டும் சிண்டுமா ஐஞ்சி புள்ளக... உசுர வாங்குதய்யா... நானு கடசியா அங்க போனப்போ கேட்டேன். ''யேண்டா செலம்பரம் இப்ப அவ என்னு என்னு சொன்னாலும் கவுதையா இருக்கா? அவ எங்குட்டு எங்குட்டு தொட்டாலும் இனுமையா இருக்கா"ன்னு. அவன் ''போ... தாத்தா வவுத்தெரிச்சல கெளருமே''ன்னு சொல்லிபுட்டு போயிட்டாய்யா. இப்ப எங்கையா போச்சி அந்த புதுமையும் இனுமையும்?



**உன் ராதையைப் பார் போதையிலே கண்ணு.... நான் ராப்பகலா ஏங்குகிற பெண்ணு....!**

''யெங்கொப்பந்தன்னனே... அட ஆம்புலகதான் அப்புவாமி கிட்ட போயி கருப்பு சாராயத் தண்ணிய குடிச்சிப்பிட்டு தத்துப் பித்தூண்ணு பாடி ஊர கொழப்புவாங்கன்னு பாத்தா இப்பத்திய பொம்மனாட்டி பாடுற பாட்டுகள கேட்டீகளாய்யா? ராதா அம்மா சாராயத்தண்ணிய குடிச்சிப்பிட்டு ஆர்வாக்குல கண்ணன கூப்புடுறாகளாம். கண்ருவிடா... கண்ருவி. இந்த கலிகாலத்துல இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும். இன்னம் கொஞ்ச நாள்ள ராதா அம்மா ''கஞ்சா'' சுட்ட 'டம்' இழுத்துப்பிட்டு

கண்ணனைக் கூப்புட்டாலும் கூப்புடுவாக... இந்த பாட்ட கேக்கக் கொலரேந்துசினுதாய்யா வருதூ.

**ஒத்தக்கல்லு மூக்குத்தி**
**சிரிக்குதடி முத்தமிடும்போது**
**வந்து தடுக்குதடி....!**

பாத்துக்கையா இந்த கூத்த... இத கூத்துண்ணு சொல்றதா இல்ல கோமாளிதனமுனு சொல்றதா? அவுக ஒத்தக்கல்லு மூக்குத்தி போடுறதுனால இவுகளுக்கு முத்தங் குடுக்க முடியாமே கெடக்குதாம்! யேண்டா, யேண்டா, யேண்டா... எனக்கு சொல்றதுக்கு வாயில நல்லாதான் வருது. முண்டங்க... அவ மூக்குல இன்னு பாராங்கல்லையா இல்ல ஆட்டுக் கல்லையா வச்சிருக்கா, முத்தம் குடுக்க எடம் இல்லாமே? அட, ஒரு பேச்சிக்குத்தான் கேக்குறேன் மூக்கு குத்திய கழட்டிப்பிட்டு முத்தங் குடுக்க வேண்டியதுதானேய்யா. அதுசரிய்யா... மொகத்துலதான் இம்மாண்டு எடம இருக்கக்கொள்ள இந்த நெருப்புக்குச்சி பய யேய்யா மூக்குல போயி முத்தம் குடுக்கப்போறான்...! முதுகில அடிச்சான் பல்லு விழுந்துறீச்சுங்குற கதையாயில்லே இருக்குது... கண்றாவிடா... இது கண்றாவிடா!


**சாமிக்குத்தெரியும் பூமிக்குத்**
**தெரியும் ஏழைகள் நிலைமை**
**அந்த சாமி மறந்தாலும் பூமி**
**தந்திடும் தகுந்த பலனை!**

இதுதாய்யா நமக்கு 'சூட்ட பல்லாகுற' பாட்டு. இததாய்யா மக்கள் பாட்டு. தொழிலாளர் பாட்டுன்னு சொல்றது. இப்புடி நம்ம கஷ்டத்தையும் கண்ணீரையும் வச்சி பாட்டு பாட்டு எழுதுறவுகதாய்யா மக்கள் கவிஞர்ன்னு சொல்றது. நம்ம மாதிரி ஏழ பாட்டாளிகட ஆத்மா துடிப்ப பாடுண அந்த கவிஞர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் மவராசன் இப்ப செத்துப் பூட்டாரு. என்னதா இருந்தாலும் அவிரு மக்கள் கவிஞர்தாய்யா... நம்ம மாதிரி ஏழ பாட்டாளிகளூட்டு கவிஞர்தாய்யா...!

## புன்னகை விருந்து,

**சி. சண்முகம்**

பஸ் ஸ்ராண்டில் ராமசாமி வரும்போது ஏகப்பட்ட கூட்டம். அதோ ராமசாமின் ஆபத்பாந்தவன் வந்துகொண்டிருக்கிறார். குஞ்சு வாடா குஞ்சு; இரண்டுவயதுக்குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு வந்த தாய் ராமசாமியை வியப்புடன் பார்க்கிறாள். ராமசாமி அந்தக் குழந்தையை ஆசையோடு வாங்குகிறான். எனக்கு குழந்தைகள்என்றால் சரியான ஆசைஅம்மா. தாய்க்கு ராமசாமி மீது ஒரு பிடிப்பு குழந்தையைக் கொடுத்துவிட்டு அவனை அன்புடன் பார்க்கிறாள். பஸ் வருகிறது. பஸ்ஸுக்குள் ஏகப்பட்ட கூட்டம் எப்படியோ முண்டியடித்து ராமசாமி குழந்தையுடன் பஸ்ஸுக்குள் ஏறிவிட்டான். தாயும்கூடத்தான்! குழந்தையையும் ராமசாமியையும் கண்ட ஒரு அன்புள்ளம் எழுந்தது. ராமசாமிக்கு இருக்க இடம் கொடுத்தது. ராமசாமி உட்கார்ந்து குழந்தையைத் தன் மடியில் வைத்துக்கொண்டான். பஸ் நகர்ந்தது. ராமசாமி இறங்கவேண்டிய இடம் வந்தது. ராமசாமி குழந்தையைத் தாயிடம் கொடுத்துவிட்டு இறங்கினான். ராமசாமிக்கு இடம் கொடுத்த அன்புள்ளம் கேட்டது. ''ஏன் நடுவழியில் இறங்கிவிட்டார்?'' ''எனக்குத் தொயாது. அவர் யாரென்றுகூட எனக்குத் தெரியாது" இறங்கிய ராமசாமி பாக்கெட்டைப் பார்த்தான். பாக்கெட்டுக்குள் இருந்த 'பாக்கர்' பேனாவைக் காணவில்லை. குழந்தையிடம் விளையாடக் கொடுத்த ஞாபகம் வர பஸ்ஸை விட்டுக் கலைக்கத் தொடங்கினான் ராமசாமி. 'நாசமறுப்பு, இத்தனை நாளா குழந்தைகள் சாட்டில ஹாயாய் இருக்க இடம் கிடைச்சுது, இண்டைக்கு இந்தச் சின்னப் பயல் என்னைப் பின்னால ஓட வைச்சிட்டானே'' ராமசாமி சொல்லிக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தான். ★



## வெறுப்பு!

பாலைவனத்தின்
வெறுமையில் பளிச்சிடும்
கதிரவனின் பிரகாசம்
உயிர்ச் செடிகளை வாழ்விக்க
பிரசவ வேதனை கொள்கின்றன

காட்டில் எரிகின்ற
வெண்ணிலவின் பால் மழை
என் ஓட்டைக் குடிசையின்
குழித் தரையில்
நிறையாதா என
ஏங்கும் அப்பாவி உள்ளங்க்ள்
தூக்கத்தை
காசுக்குக் கேட்கின்றன.

வெப்ப மலர்களைக்
கொய்து
குன்ர் மலையின் மேல்
தழுவச் செய்வதனால்;
அதன் மேகச் சூடுகள்
தணிகிறதா என்ன?

அடுப்பைப் பார்க்கிறேன்!
அதில் பொங்கிய
கஞ்சிக் குடத்தின்
கழுத்தைத் தழுவ
முயலும் கைகளின் வெறுமை
பாலை நிலத்தை
நினைவில் இருத்த முயல்கின்றன
அடுப்பைப் பார்க்கிறேனே!
அடுப்பையே பார்க்காத
முகங்களைப் பார்க்க
என் உள்ளங்கள்
ஏன் மறுக்கின்றன.

— கலைவாதி கலீல்

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் ''இங்குள்ளவர்களில் பாதிப்பேர் முட்டாள்கள்'' என்று காரசாரமாகப் பேசும்பொழுது சொல்லிவிட்டார்.

இதைக்கேட்டு ஆத்திரமடைந்த ஆளுங் கட்சி உறுப்பினர், ''எதிர்க்கட்சி உறுப்பினர் பாராளுமன்ற விதிகளை மீறிப் பேசிவிட்டார். அவர் கூறியதை வாபஸ் பெற்றுக்கொண்டு வருத்தம் தெரிவிக்கவேண்டும்'' என முழக்கமிட்டார்.

சபாநாயகரும் அவ்விதமே பணித்துவிட்டார்.

உடனே எதிர்க்கட்சி உறுப்பினர் எழுந்து ''நான் அவ்வாறு கூறியதற்கு வருந்துகிறேன். நான்சொன்னவற்றைத்திரும்பப்பெற்றுக்கொண்டு இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்—இங்கே இருப்பவர்களில் பாதிப்பேர் அறிவாளிகள்'' என்றார்.

— ரஞ்ஜனி

# மலையக மக்களே வாரீர்!

**— அல்வைச் சுந்தரன் —**

மலையக மக்களே வாரீர் — உங்கள்
வாழ்வு வளம்பெற வழியொன்று சேரீர்;
(மலையக...)

காலைக் கருக்கல் எழுந்து — நெஞ்சில்
கனக்கின்ற துயரோடு கூடை சுமந்து
மாலை வரைக்கும் கொழுந்து — கொய்து
மாண்புயர் வாழ்வெதிர் பார்த்துளம் நொந்து.
(மலையக)

உயர்மலை தனிற்பனி மூட்டம் — அதில்
உடல்வளைத் துழைத்தவர் எத்தனை வாட்டம்
உயர்வடைந் திருப்பதோர் கூட்டம் — உங்கள்
உதிரத்தி லேயவர்க் கெத்தனை நாட்டம்!
(மலையக)

எம்மைநா முணர்ந்திட வில்லை — பிறர்
ஏய்த்தெமை யாள்வதை உணர்ந்திட வில்லை
செம்மைசேர் அறிவொளி யில்லை — எனில்
செங்கதிர் வாழ்வினில் தோன்றிட வில்லை!
(மலையக)

கையெழுத் திடஎவர் கற்றீர் — உங்கள்
கைப்பெரு விரல்தனை நம்பியே கெட்டீர்
பொய்த்துயர் நிரம்பிடப் பெற்றீர் — நித்தம்
பிள்ளைகள் அல்லாமல் வேறென்ன பெற்றீர்?
(மலையக)

முழுமனம் கல்வியில் வேண்டும் — உங்கள்
மூடிய மலர்விழி திறந்திட வேண்டும்
தழுவிய தரித்திரம் ஓடும் — உங்கள்
சந்ததி வாழ்ந்தொரு சரித்திரம் தேடும்!
(மலையக)



# மலர் மொழிகள்!

★ செடியில் மலர் இருக்கும்போது மலர் அழகாக இருக்கிறது. பெண்ணிடம் மலர் இருக்கும்போது அவள் அழகு பெறுகிறாள். இறைவனிடம் மலர் இருக்கையில் இரண்டுமே அழகாய் இருக்கின்றன.

★ மலருக்குப் பேசத் தெரிந்தால், ''என் ஒருநாள் வாழ்விற்கா இத்தனை புகழுரைகள்" என வியக்கும்.

★ வண்டுகள் மீது குற்றமில்லை. அவைதாம் நாளும் வருகின்றனவே! மலர்கள் தாம் காத்திருப்பதில்லை.

★ மணமில்லாத பல மலர்கள் நீண்ட நாட்கள் வாழ்கின்றன.


★ மலரைக் கையில் கொடுத்ததும் அதை முகர்ந்து பார்க்காத மனிதர் ரசனை இல்லாதவர்.

★ மலரோடு வண்டு வந்து சேர்ந்தாலும் மலரின் புகழ் வண்டுக்குக் கிடைப்பதில்லை.

★ ரோஜாவின் முள், ரோஜாவின் இதழ்களைக் கிழிப்பதற்காக அல்ல!

★ பகலில் பூக்கும் தாமரையும், இரவில் மலரும் அல்லியும் ஒரே குளத்தில் தான் வாழ்கின்றன.

"ரஞ்ஜனி"



என்னவீட்டிலிருந்து கூட்டத்திற்கு படகுக் காரில் வந்து அழைத்துப் போனாங்க... இப்போ சைக்கிளில் கொண்டுவந்து விட்டிட்டுப்போறாங்க?

கூட்டத்தில் ''டாப்பீக வாழ்வு கொண்டு வரும் தாழ்வு'' என்ற விஷயம் பற்றிப் பேசினேன் இப்படியாப் போச்சு!

# குடும்பங்கள்

**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கிறோம். அநீதாவின் விழிகளில் ஒரு மெல்லிய நகைப்பு நெளிந்து மறைகிறது. நான் மெல்லியபெருமூச்சுடன் தேநீரை ஊற்றுகிறேன்.

குழந்தைகள் மூவரும் போடும் சத்தத்துடன் ரேடியோவின் சத்தமும் எனக்கு எரிச்சலை உண்டாக்குகிறது. அநீதாவைக் கடைக் கண்ணால் பார்க்கிறேன். அவளுடைய பொன்னிறத் தலை கடைந்தெடுத்த சந்தனக் கட்டைகள் போன்ற அவளுடைய தோள்களில் புரண்டு செல்லம் கொஞ்சுகிறது. நீலக் கருவிழிகள் ஜன்னலுக்கப்பால் ஆடிக்கொண்டிருக்கும் அழகிய ரோஜாக்களில் படிந்திருக்கிறது.

குழந்தைகளுக்குத் தோடம்பழத் தண்ணீரைக் கொடுத்துவிட்டு கையில் தேநீரை எடுத்துக்கொண்டு அநீதாவுக்கு முன்னால் உட்காருகிறேன்.

என் மௌனம் அவளுக்கு எரிச்சலையுண்டாக்கியதோ என்னவோ ''ராஜேஸ்! நீர் எனக்காக ஒன்றும் துக்கப்படத் தேவையில்லை'' நான் சட்டென்று அவள் முகத்தைப் பார்க்கிறேன்.

வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. மனம் சொல்கிறது. ''உமக்காகத் துக்கப்படவில்லை. அந்தக் கள்ளம் கபடமற்ற குழந்தைகளுக்காகத் துக்கப்படுகிறேன்''

திரும்பத் திரும்ப ஒன்றையே கதைக்க விரும்பவில்லை. கதையை எங்காவது திருப்பவேண்டும் போல் இருக்கிறது. குழந்தைகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

மூவரும் ஒரு விளையாட்டுச் சாமானைக் கேட்டுச் சண்டை பிடிக்கிறார்கள். அநீதா பொறுமையின்றித் தன் குழந்தைகளை அதட்டுகிறாள். ''குழந்தைகள் தானே கொஞ்சநேரம் சண்டை பிடிப்பார்கள். பின்னர் சமாதானப் படுவார்கள்'' நான் பொறுமையாகச் சொல்கிறேன். ''என்னவென்றாலும் ஒரு பொறுமை இருக்கவேண்டும். குழந்தைகளை இந்த வயதில் அடக்கிவைக்காவிட்டால் அவர்கள் தலைக்கு மேலே ஏறிவிடுவார்கள்''

அநீதா கைப்பையைத் தூக்கிக்கொண்டு எழும்ப ஆயத்தமாகிறாள். ''சரி, சரி கெதியாய்க் கடைக்குப் போட்டு வாரும். நான் பார்த்துக்கொள்கிறேன்.''

அவள் என் குசினி மூலையில் மாட்டியிருக்கும் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துத் தலையைச் சரிசெய்தபடி உதட்டுச் சாயத்தை மெல்லமாகத் தடவுகிறாள். விலையுயர்ந்த சாயம், பெரிய அளவிலான புதுச் சாயம். என்ன விலையிருக்கும்? என்னை அறியாமல் அவள் மகன் டேவிட்டைப் பார்க்கிறேன். குழந்தைகள் சமாதானமாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். டேவிட் என் மகனின் புத்தகத்தை ஆசையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறான். அதுபோல் ஒரு புத்தகம் தனக்கு வேணுமென்று போனகிழமை அவன் தாய் அநீதாவிடம் அழுதபோது ''காசு இல்லை'' என்று வெருட்டியது ஞாபகம் வருகிறது. அந்தப் புத்தகத்தின் விலை பதினாறு பென்ஸ். அவளின் உதட்டுச் சாயத்தின் விலை கிட்டத்தட்ட எண்பத்தைந்து பென்ஸ்!

அவள் போய்விட்டாள். அவளில் மணத்த பிரான்ஸ் நாட்டு ''சென்ற்'' என் அடுப்பில் கொதிக்கும் கோழிக் கறிக்கு மேலாக என் மூக்கில் தடவிப் போகிறது. மெல்லிய பெருமூச்சுடன் கறி அடுப்பைப் பார்க்கிறேன்.

★

லண்டனில் மிக நெருக்கமான தென்கிழக்குப் பகுதியில் ஒரு பெரிய வீட்டில் மேல்மாடியில் நானும், கீழ்வீட்டில் அநீதா குடும்பமும் வாடகைக்கு இருக்கிறோம். அநீதாவும் அவள் கணவன் பிரான்சிசும் இளம் வயதினர். கிட்டத்தட்ட இருபத்திரண்டும், இருபத்துநாலும். இளமையிலேயே கல்யாணம் செய்யும் ஆங்கிலேயர்களைப் போல அவர்களும் கல்யாணம் செய்துகொண்டவர்கள். இரண்டு குழந்தைகள். டேவிட் கிட்டத்தட்ட ஐந்து வயது. வில்லியம் இரண்டு வயது. (எனது மகன் நிர்மலன் மூன்று வயது.)

நாங்கள் அந்த வீட்டுக்குக் குடிபுகுந்து கொஞ்சநாள் வரைக்கும் ஒரு தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை. அப்போது என் மகன் கைக்குழந்தை. பனிக்காலம் முடிந்து வெயில் அடிக்கும் நாளில் பின்னேரங்களில் குழந்தையைப் ''பிராமில்'' வைத்துவிட்டு வாசலடியில் கொஞ்சநேரம் கணவர் வரும் வரையும் இருப்பேன். டேவிட் அப்போது

---


பத்திரிகையாளரைப் பற்றி வி. கே. கிருஷ்ணமேனன்

''நான் வாழைப்பழத்தைச் சாப்பிட்டால்; பத்திரிகையாளர் என்னை வாழைப்பழம் சாப்பிட்டு விட்டது என்று எழுதுவார்.

---

வான் கதைக்கப் பழகிக்கொண்டிருந்தான். வில்லியம் பிறக்கவில்லை.

டேவிட் சிலவேளை ''பிராமில்'' கிடக்கும் என் மகனைப் பார்த்து ஏதோ சொல்லிச் சிரிப்பான். அழகியபூனைக்கண்கள் நானும் அந்தக் குழந்தையிடம்



பிரதம லிகிதர்: இந்த இலாகாவில் வேலை செய்யும் பெண்களில் நீ ஒருத்திதான் ஆபீஸ் டெலிபோனை பாவிப்பதேயில்லை. மற்றவர்கள் எல்லாம் தங்கள் சொந்த டெலிபோன் மாதிரி எடுக்கிறார்கள். அதுபற்றி தான் உன்மீது சந்தோஷப்படுகிறேன்.

பெண், அப்படியல்ல. உங்கள் டெலிபோனில் நீங்கள் பாவிக்கும் சுருட்டு நாற்றம் தாங்கமுடியவில்லை. அது தான்.

ச. ரா. பா.

கதைப்பேன். நாள் செல்லச் செல்ல அநீதாவும் நானும் ''குட்மோர்ணிங், குட் ஈவினிங்" மட்டும் சொல்வதோடு மட்டுமில்லாமல் கொஞ்சநேரம் கதைப்போம். வெள்ளைக்கார வழக்கப்படி சுவாத்தியத்தைப் பற்றித்தான் முதலில் கதைப்போம். பின்னர் நான் ஏன் சேலை கட்டுகிறேன் பாகிஸ்தானியப் பெண்கள்போல் சர்வாணி போடுவதில்லை என்பன போன்ற கேள்விகள் கேட்பாள்.

மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. நாங்கள் நெருங்கிய சிநேகிதிகள். அவளுக்கு இரண்டு குழந்தைகள். பெரும்பாலும் நான் வேலைக்குப் போகாத நாட்களில் குழந்தைகளுடன் மேலே வருவாள். எனது குழந்தைக்கும் பராக்கு, மூன்று குழந்தைகளும் ஒன்றாக விளையாடுவார்கள்.

ஒரு ஆறு மாதங்களுக்கு முன்னால் சொன்னாள்; வீட்டையும் குழந்தைகளையும் எந்தநேரமும் பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது? ஒரே எரிச்சல் எரிச்சலாக வருகிறது என்றாள். அவர் வேலைக்குப் போவதில்லை.

எனக்குச் சிரிப்பாக வந்தது. ''அநீதா! குழந்தைகளுடன் இருக்கக் கொடுத்து வைத்திருக்கே என்று சந்தோஷப்படாமல் ஏன் எரிச்சல்படவேண்டும்? என்னைப் பார்; காலையில் விழுந்தடித்து வேலைக்குப் போகிறேன். பின்னேரம் வந்தவுடன் சமைக்கவேண்டும், உடுப்புக்கள் தோய்க்கவேண்டும். கணவர் குழந்தை என்றால் சுகமா? அதுதானே குடும்பப் பெண்களின் கடமை''

அவள் என்னை அலட்சியமாகப் பார்த்தாள். உம்முடைய அபிப்பிராயங்கள் உமக்குச் சரியாக இருக்கலாம், என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட சுதந்திரம் எனக்கில்லை. எந்தநேரமும் சமையல். தோயல். துப்பரவு செய்தல். ஓ, தட் இஸ் ஏ ஹெல்''

அவளோடு கதைத்துப் பிரயோசனம் இல்லை.

மூன்றாம் நாள் ஒரு மாத்திரைப் பெட்டியுடன் என்னிடம் வந்தாள். தனக்கு எரிச்சல் குணமாக இருக்கிறது என்று டொக்டருக்குச் சொல்ல டொக்டர் கொடுத்த குளிசைகளோடு மேலே வந்தாள்.

மேல்நாட்டு நாகரிகம்! நாய் குலைத்தால் நாய்க்கு மருந்து. குழந்தை அழுதால் குழந்தைக்கு மருந்து, எரிச்சல் குணமாக இருந்தால் அதற்கு மருந்து, இயற்கைகளை அடக்க மருந்து, மருந்து, மருந்து!

நான் நேர்ஸ். குளிசைப் போத்தலைப் பார்த்தபடி ''மன எரிச்சலுக்குக் குளிசை எடுப்பதை ஒரு சாதாரண காரியம் என நான் ஒப்புக்கொள்ளுவதில்லை.'' என்கிறேன்.

''விழல் கதைக்கவேண்டாம். இப்படி ஒரு அலுப்பான வாழ்க்கை இருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்'' அவள் முகம் சிவக்கச் சொல்கிறாள்.

''டேவிட் கெதியில் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிவிடுவான். வில்லியத்தை யாரும் பார்க்க ஒழுங்கு செய்தால் நீர் ஏதும் பார்ட்ரைம் வேலை செய்யலாமே''

''ஓ! என்ர புருஷனை உமக்குத் தெரியாது. நான் நினைக்க இல்லை. விடுவாரெண்டு"

''மருந்து அடிமையாகிறதை விட புருஷனை அன்பாகக் கேட்டு ஒரு வழி பார்ப்பது நல்லதுதானே'' நான் அமைதியாகச் சொல்கிறேன்.

## விதி!

அதி பிரகாசமான
மின்குமிழைச் சுற்றி
— சுகமாக
சுழன்று விளையாடும்
விட்டில் பூச்சிகள்
மிக மங்கலான
குடபி விளக்கின் —
ஒளியினைச் சுற்றுகையில்
எரிந்து —
சாம்பலாகின்றன.

— மௌரியன்



என்ன பொக்கட்டில் கடிதம்?

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஒரு கடிதம்... பள்ளிக்கூட பஸ் சேர்விஸ் மாதிரி ஒரு டியூட்டரி பஸ் சேர்விஸ் ஆரம்பிக்கச் சொல்லி கடிதம் எழுதிக் கொண்டு போறன்.

எப்படியோ அனுமதி கேட்டு ஒரு சின்னக் கொம்பனியில் வேலை. டேவிட் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிவிட்டான், வில்லியத்தை ஒரு பெண்மணி பார்க்கிறாள். அநீதா பெரிய சந்தோஷம்.

ஒரு கொஞ்ச நாள்தான். வேலை தொடங்கி கொஞ்ச நாளாக நாளாக அவளின் நடை உடையில் மாறுதல், கவர்ச்சியான உடைகள், அயல்நாட்டு வாசனைத் திரவியங்கள்.

ஆனால் டேவிட்டுக்கு உருப்படியாக ஒரு விளையாட்டுச் சாமான் இல்லை. பாடசாலை முடிய விழுந்தடித்துக்கொண்டு என்னிடம் வருவான் நிர்மலனுடன் விளையாட. "'நான் உழைக்கிறேன், நான் எனக்குச் செலவழிக்கிறேன். குழந்தைகளைப் பார்ப்பது தகபபனின் வேலை'' என்றாள் அந்தோ ஒரு நாள். என்ன பாசம்!

சட்டென்று இரண்டு கிழமைக்கு முன் சொன்னாள்: தான் கணவனை விவாகரத்துச் செய்யப் போவதாக, எனக்கு தலையில் ஏதோ அடிப்பதுபோல் இருந்தது என்னை அறியாமல் குழந்தைகளைப் பார்த்தேன். கள்ளம் கபடம் அறியாமல் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

என்ன காரணம் என்று கேட்டேன். ''நான் விரும்புகிற மாதிரி என் கணவன் இல்லை. நான் சொல்லிவிட்டேன். நான் அவரோடு இருக்கப்போவதில்லை என்று. அவரும் சம்மதித்துவிட்டார். இன்று வழக்கறிஞர்களைப் பார்க்கப்போகிறேன்'' அவள் ஒரு பதட்டமுமில்லாமல் சொன்னாள்.

நான் பதில் பேசவில்லை. கீழே வரும்போது ஒருநாள் அவளுடைய கணவனைக் கேட்டேன். ''குழந்தைகளின் எதிர்காலம் என்ன? இருவரும் இப்படிச் சுய நலவாதிகளாகவே இருக்கிறீர்களே. சமாதானமாக இருந்தால் என்ன?"

அவள் கணவன் அலட்சியமாகச் சிரித்துவிட்டுச் சொன்னான் ''தாய்மார்களல்லவோ குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படவேணும்" நான் ஒன்றும் பேசவில்லை.

●

அநீதா குழந்தைகளை விட்டுவிட்டுக் கடைக்குப் போய்விட்டாள். அவர்கள் சத்தம் போட்டு விளையாடுகிறார்கள். என் கணவர் தான் வைத்த ஏதோ புத்தகத்தைக் காணவில்லை என்று கத்துகிறார். நான் ''அடுப்பில் கறி கிடக்கிறது, இப்போதைக்கு என்னால் வரமுடியாது'' என திருப்பிக் கத்துகிறேன். குழந்தை டேவிட் பயத்துடன் என்னைப் பாக்கிறான். தமிழில் நாங்கள் சண்டை பிடிப்பது அவனுக்கு விளங்காவிட்டாலும் நானும் என் கணவரும் கோபமாயிருப்பது விளங்குகிறது. குழந்தை டேவிட் மெல்லமாக வருகிறான். என் முகத்தைப் பார்த்தபடி ''நீங்கள் நிர்மலனின் அப்பாவில் கோபமா?'' என்று கேட்கிறான். ''ஓம்" என்கிறேன். ''என்னுடைய அம்மா அப்பாவைப் போகச் சொன்னது போல் நீங்களும் நிர்மலனின் அப்பாவைப் போகச்சொல்லப் போகிறீர்களா'' குழந்தை வேதனையுடன் கேட்கிறான். என் கண்கள் கலங்குகின்றன. அணைத்துக் கொள்கிறேன் குழந்தையை. ''நாங்கள் வேறுவிதமான மனிதர்கள். நாங்கள் எங்கள் உடம்பை நேசிப்பதில்லை. கணவனை, குழந்தையை, குடும்பத்தை நேசிக்கிறோம்'' என் மனம் சொல்கிறது. என் கண்கள் அழுகின்றன.

★

## ஜிமி கார்ட்டர் விஷயம்!

- ''அமெரிக்கா அமுதசுரபியாக இருப்பதை விட இன்று ஆயுத வியாபாரியாக திகழ்கின்றது." — ஜிமி கார்ட்டர் அமெரிக்க ஜனாதிபதி.
- பிரபல நடிகரும், படத்தயாரிப்பாளரும், நடிகை நர்கிஸின் கணவருமான சுனில் டத் அமெரிக்கஜனாதிபதியான ஜிமி கார்ட்டரைச் சந்தித்து இந்திய லுங்கி (சாரம்) யைப் பரிசாகக் கொடுத்தார். ஜிமி கார்ட்டர் லுங்கியைப் பெற்றுக்கொண்டு; ஆண் உடுப்பதா அல்லது பெண் உடுப்பதா என்று புன்முறுவலுடன் வினவினார்.
- அமெரிக்க ஜனாதிபதி ஜிமி கார்ட்டரின் அன்னை இந்திய வர்த்தகத் தலைப்பட்டினமான பம்பே நகரில் நேஸாக (தாதி) பணிபுரிந்திருக்கின்றார்.

பாடுபட்டுழைத்த பணத்தைப் பத்திரமாகச் செலவளிக்க நல்ல பாத்திரமாக வாங்கிப்போடுங்கள். அவை வீட்டிற்குழைக்கும்....

உங்களின் தெரிவிற்கேற்ற
எவர்சில்வர்-வெண்கல-அலுமினிய
கண்ணாடி பாத்திரங்கள் அனைத்திற்கும்

# ஸ்ரீ ராஜா டிரேடர்ஸ்

226-228, காஸ்வேக்ஸ் வீதி, கொழும்பு-12.

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி

★

விழா வைபவங்களுக்கேற்ற
விதவிதமான ஜவுளி வகைகளுக்கு
நாடுங்கள்

## கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

55-56, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

புடவை உலகின் புதுமையைக் காண....
நாடுங்கள்

## பூமா ரெக்ஸ்

(மத்திய சந்தைக்கு முன்பாக)
பஸ்நிலையம், நெல்லியடி, கரவெட்டி.

நமது தொடர் நாவல்

முதலாம் பாகம்

அத்தியாயம். 9

# அன்னை அழைத்தாள்

**—இளங்கீரன்**

தங்கள் வரலாற்றை இவ்வளவு நேரமும் நின்ற நிலையிலேயே சொல்லிக்கொண்டிருந்த கண்ணம்மா, அதை இடையில் நிறுத்திவிட்டு ''கால் வலிக்குது'' என்று சொல்லியவாறு தரையில் உட்கார்ந்தாள்,

''கதைகேட்கிற ஆர்வத்திலே உன்னை இருக்கச் சொல்றதுக்கு மறந்துபோனன்'' என்று லேசாய்ச் சிரித்தபடி கூறிய ரவி, பேக்கைத் திறந்து பிஸ்கட் பெட்டியை எடுத்து உடைத்து அவளுக்கு எதிரில் வைத்து ''சாப்பிடு'' என்றான்.

கண்ணம்மா இரண்டு பிஸ்கட்டுகளை எடுத்து ஒன்றை வாயில் வைத்து மென்றவண்ணம் மற்றதை ரவியிடம் நீட்டினாள்'

அதை வாங்கிக்கொண்ட ரவி ''அம்மா சொன்னதைக் கேட்டு மலைச்சுப்போனதாய்ச் சொன்னியே, அவ அப்படி என்னதான் சொன்னா?'' என்று கேட்டான்.

''நீங்கள் சரியான ஆள்தான். எங்க கதை முழுவதையும் கேட்காமல் விடமாட்டீங்கள் போலிருக்கே?'' என்றாள் சிரித்தபடி.

''எப்பிடி விடுவதாம், நான்தான் எழுத்தாளனாச்சே?''

''எழுத்தாளர்கள் இந்த விஷயத்தில் ரொம்பவும் காரியக்காரர்கள் போலிருக்கு''

''நாங்கள் இந்த விஷயத்தில் காரியக்காரர்களாயிருக்கிறோம். மற்றவர்களோ வேறு விஷயங்களில் காரியக்காரர்களாயிருக்கிறார்கள்''

''சரி, சரி உங்களோடு பேசி வெல்ல முடியாது. பாக்கிக் கதையையும் சொல்லிவிடுகிறேன்.''

''ம்... தொடரட்டும்''

''ஊரில் பெரிய பணக்காரக் குடும்பத்தையும் உயர்ந்த சாதியையும் சேர்ந்தவர் என் அப்பா, அவர் குடும்பத்திலே பண்ணைக் கணக்குப்பிள்ளையாக இருந்தவர் மகதான் அம்மா. எப்பிடியோ அம்மாவுக்கும் அப்பாவுக்கும் காதல் ஏற்பட்டிருச்சு. ஆனா ஏழைக்குடும்பத்தில் பிறந்த அம்மாவை அப்பா கல்யாணம் கட்டிக்கிறதுக்கு அவங்க சம்மதிக்கலே. அதுமட்டுமில்லாம, அப்பாவுக்கு வேறொரு இடத்திலே தங்க அந்தஸ்துக்கு ஏற்றமாதிரி சம்பந்தம் ஒழுங்குபண்ணிப் போட்டாங்க. அப்பாவுக்கு என்ன செய்யிறதுன்னு தெரியல்லே. 'எனக்காக உங்க அப்பா அம்மாவையோ குடும்பத்தையோ பகைச்சுக்கவேணாம். அவங்க ஏற்பாடு பண்ணிய பெண்ணையே கட்டிக்குங்க' என்று அம்மா கண்ணீரோடு சொன்னாவாம் ஆனா அப்பா கேட்கல்லே. 'இந்த ஜென்மத்திலே மட்டுமென்ன, எந்த ஜென்மத்திலேயும் உன்னைத் தவிர இன்னொரு பெண்ணை என் மனசிலே வைச்சிருக்கமாட்டேன்'னு உறுதியாய்ச் சொல்லிட்டாரு''

''அந்தளவுக்கு அப்பாவுக்கு அம்மா மேல் இறுக்கமான காதல் இருந்திருக்கும். ம்... பிறகு...?''

''ஊரிலே இருந்தா தன்ர காதல் நிறைவேறாதுன்னு நினைச்சு கடைசியாய் அம்மாவையும் கூட்டிக்கொண்டு மலேயாவுக்குக் கப்பல் ஏறிட்டாரு, அங்கு வந்தபிறகுதான் ரெண்டுபேருக்கும் கல்யாணம் நடந்தது. தங்கள் வாழ்க்கையையும் ஆரம்பிச்சாங்க. அதுக்கப்புறம் ரெண்டுபேரும் ஊருக்கே போகேல்ல. ஆனா ஊரிலே அப்பாவுக்குச் சேரவேண்டிய சொத்துக்கள் நிறைய இருந்தது. என்னிக்காவது ஒருநாள் ஊருக்குப் போய் அச்சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்து எடுத்துக்கிட்டு மெட்ராசுக்குப் போய் அங்கேயே வாழவேணும், என்னைக் காலேஜிலே படிக்கவைச்சு, என்னைப் பெரிய இடத்திலே கட்டிக்குடுக்கவேணும்'னு அப்பா சொல்லிக்கிட்டிருந்தாராம்.''

''அது எப்பிடி முடிஞ்சிருக்கும்? உனக்கும் பக்கத்துவீட்டுக் குமாருக்கும்...''

''ஆமா, அப்பிடி நடந்திருக்காதுதான். ஆனா, குமாருக்கும் எனக்குமுள்ள உறவை அப்பாவோ, அம்மாவோ வித்தியாசமா நினைக்கல்லே. அதனாலே அப்பாவும் அம்மாவும் ஊரைப்பத்தி நினைச்சுக்கிட்டுத்தான் இருந்தாங்க.

---

ஓயாத விக்கல் வியாதியால் அவதிப்படுவோருக்கு ஒரு இனிப்பான செய்தி.

விக்கல் ஏற்படும் பொழுது ஒரு தேக்கரண்டி சர்க்கரையை எடுத்து வாயில் போட்டு மெல்லுங்கள். உங்கள் விக்கலைச் சர்க்கரை வாங்கிவிடும்.

---

அதுக்குள்ள திடீர்னு யுத்தம் வந்திருச்சுது. அப்பாவின் மனக்கோட்டையெல்லாம் இடிஞ்சுபோச்சுது. கடைசியாய் அவரும் எங்களை விட்டுட்டு நிரந்தரமாப் பிரிஞ்சிட்டாரு. ஆனு அவர்ர சொத்துக்களெல்லாம் ஊரிலே இருக்கத்தானே செய்யும்? அதுக்கு வாரிசு நான்தானே? தன்ர கண்ணுக்கு அப்புறம் என் நிலைமை என்ன ஆகுமோ, அதனுல ஊருக்குப்போய் எங்களுக்குச் சேரவேண்டிய சொத்துக்களையெல்லாம் எடுத்துக்கிட்டு எனக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைச்சுட்டா, சாகிறபோது நிம்மதியாச் சாகலாம்னு அம்மா நினைச்சா. அதனுல ஊருக்குப் போகணும், ஊருக்குப் போகணும்னு அலட்ட ஆரம்பிச்சிட்டா.''

''அம்மா கூறிய இத்தகவலைக் கேட்டதும் உண்மையிலேயே நான் திகைச்சுட்டேன். அதுவரைக்கும் நான் ஒரு செல்வச் சீமானின் மகளென்று எனக்குத் தெரியாது. ஆனு அதை நினைச்சு எனக்குப் பெருமையோ, சந்தோஷமோ ஏனே ஏற்படேல்லே. எனக்கே அது ஆச்சர்யமாய்த்தான் இருந்துது. அதே சமயத்தில அப்பாவின் குடும்பத்தாரையும், ஊரையும் பார்க்கவேணும்கிற ஆசை எனக்கும் வளர்ந்தது. ரெண்டு மாதத்துக்கு முன்னே ஊருக்குக் கப்பல் ஏறிட்டோம்.


ஊருக்குப் போனதும் நாங்க எதிர்பார்த்தபடி ஒண்ணும் நடக்கல்லே. அப்பா அம்மாவை அழைச்சுக்கிட்டு மலேயாவுக்கு வந்ததும் அவங்க அப்பாவைத் தலைமுழுகிட்டாங்க. அதுமட்டுமில்லாம, அப்பாவுக்குச் சேரவேண்டிய சொத்துக்களையும் அவர்ர அண்ணனும் தம்பியும் எப்பிடியோ தங்களுக்குள் பங்கு போட்டு உரிமையாக்கிட்டாங்க. எங்களை அவங்க கணக்கிலே எடுக்கல்லே. வீட்டு வாசல்ல கூட மிதிக்கவிடாம திட்டிவிரட்டிட்டாங்க. அம்மா ஊர்ப் பெரியவங்கிட்ட முறையிட்டா, ஆனு அவங்க எங்களுக்காக நியாயம் சொல்ல முன்வரல்லே. அம்மாவைப் பெத்தவங்களும் இறந்து போனதால் ஊரிலே எங்களுக்கு ஆதரவுகாட்ட யாருமில்லே. எங்களுக்கு ஏமாற்றமும், துக்கமும் மனசைத் துளைச்சு கண்ணீரைக் கொட்டச்செய்தது. ஆத்திரத்தால் மனம் குமுறினேம்''

> ஸமஸ்கிருதம் பாரதநாட்டின் ஆத்ம பாஷை, இருப்பினும் அங்கு அப்பாஷைக்குரிய அந்தஸ்து கவனிக்கப்படாமலேயே இருக்கிறது. ஆனல் ஜெர்மனியில் சமஸ்கிருதம் ஓர் உயர்ந்த மொழியாகக் கௌரவிக்கப்படுகிறது. உதாரணம்: ஜெர்மனியின் 'தூத் ஷேவல்' என்ற ஒலிபரப்புச் சேவையில் மாதமிருமுறை சமஸ்கிருதத்தில் செய்திகளை ஒலிபரப்புகிருர்கள்.

''ஏன் கோட்டிலை வழக்குப் போடலாமே?''

''அம்மா அதுக்கும் முயற்சி செய்தா. ஆனு ஊரிலே எந்த வக்கீலும் எங்க கேஸுக்கு ஆஜராக விரும்பவில்லை. அவங்களைப் பொறுத்தவரையில நாங்க அந்நியர்கள். யாரோ, எங்கேயோ இருந்து வந்தவங்க. எங்களுக்காக ஊரிலே செல்வாக்கோடே அப்பாவின் சகோதரர்களையும், இனபந்துக்களையும் பகைச்சுக் கொள்ள அவங்க இஷ்டப்படுவாங்களா? கேஸ் நடத்துறதுக்கும் எங்ககிட்ட அவ்வளவு பணவசதியில்லை. பணமும் செல்வாக்குமுள்ள அவங்களை எதிர்த்து, அனுதைகளான ரெண்டு பெண் ஜென்மங்கள் ஜெயிக்கமுடியுமா? அதனுல கேஸும்வேணும். சொத்தும் வேணும், இந்த ஊரே வேணும். சொந்தச் சகோதரங்களையே வஞ்சிக்கிற, இம்மியும் ஈவிரக்கமில்லாத இவங்க கண்ணிலேயே முழிக்கக்கூடாது. ஊரிலே என்ன இந்த நாட்டிலேயே இருக்கவேணும். திரும்பவும் மலேயாவுக்குப் போயிடுவோம்னு நான் அம்மாவுக்குத் தீர்மானமாச் சொல்லிட்டேன். அம்மாவுக்கும் கசப்பும் வெறுப்பும் ஏற்பட்டுப் போச்சு! என் முடிவை அவ ஏத்துக்கிட்டா. திரும்பவும் வந்த வழியை நோக்கி இப்ப போய்க்கொண்டிருக்கிறேம்.''

இடையிடையே குரல் கம்மிக் கரகரக்க தங்கள் கதையைக் கூறி



ஏம்மா? வீட்டு வாடகை பாக்கி இருக்கிறது. உன் கணவர் குடித்துவிட்டுத் திரிகிருரே அவரும் ஒரு மனிதனு? எங்கே அவர் இப்போ?

''அவன்தான் மனிதன்'' பார்க்கப் போய்விட்டார்.

— ச. ரா. பா.

★ நான் இரண்டே இரண்டு முறை மட்டுமே வாழ்க்கையில் நாசமாகப் போயிருக்கிறேன். வழக்கில் தோல்வியுற்றபோது ஒருமுறை. வழக்கில் வெற்றிபெற்றபோது மறுமுறை.

முடித்ததும் கண்ணம்மாவின் கண்கள் கலங்கிவிட்டன. தலையைக் குனிந்துகொண்டு கண்ணீரைத் தரையில் பாயவிட்டாள்.

ரவி அவளை மிகுந்த அனுதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணம்மா கூறிய கதை அவனுடைய மனதில் ஒரு சோகத்தை ஏற்படுத்திய அதேவேளையில் அவளுடைய அப்பாவின்மீது அவனுடைய சிந்தனை அலைகள் பாய்ந்தன.

செல்வத்தாலும், ஊர்ச்செல்வாக்காலும் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த கண்ணம்மாவின் தந்தை தன்னைவிடத் தாழ்ந்த கண்ணம்மாவின் தாயாரைக் காதலித்ததோடு அவளுக்காகவும் காதலுக்காகவும் தன் பெற்றோர், உற்றார், உறவினர், சொத்து, சுகம், பிறந்த ஊர் எல்லாவற்றையும் துறந்து, ஏகாக்கிரச் சித்தத்தோடு தன்னை நம்பியவளுடன் பிறநாட்டுக்குக் கப்பலேறிய அவர் சாமானிய மனிதரல்ல. காதலுக்காக எல்லாவற்றையும் துறந்தவர், நாட்டின் விடுதலைக்காகவும் தன் காதல் மனைவியையும், ஒரே மகளையும் கூடத் துறந்து, அதற்காகத் தனது உயிரையே அர்ப்பணித்திருக்கிறார் என்றால் உண்மையிலேயே அவர் உயர்ந்த மனிதர்

# நொருவலும்  முறுவலும்

★ ஆபீசுக்குப் போகாமல் கணவன் வீட்டிலேயே இருந்துகொண்டு மனைவியுடன் சண்டை பிடிப்பதால்தான் ஞாயிற்றுக்கிழமைக்கு ''சண்டே" என்று பெயர் வந்தது'' என்று ஒரு பத்திரிகையில் படித்தாகக் கூறுகிறார் மனைவியுடன் சண்டை பிடிக்கும் ஒரு பேர்வழி.

● சண்டை பிடித்த மண்டை வலியுடன் திங்கள் ஆபீசுக்குப் போகவேண்டியிருப்பதால்தான் திங்களுக்கு ''மண்டே'' யெனப் பெயர் வந்ததாகக் கூறுகிறார் இன்னுமொரு குடும்பஸ்தர்.

□

★ நடிகை வாணிஸ்ரீயின் வீட்டு நாய்க்குட்டியின் வாலின் நீளம் ஒன்னேமுக்கால் அங்குலம், அகலம் கால் அங்குலம் என செய்தி படித்ததாகக் கூறுகிறார் பக்கத்திலிருக்கும் நண்பரொருவர்.

● ஷ! நாய்க்குட்டிமேல் இருக்கும் மயிரின் தொகையைக் குறிப்பிடவில்லையேயெனத் தேம்புகிறார் ''படார்" படப் பைத்தியம் ஒன்று.

□

★ ''அஸ்பெஸ்டஸ்'' கூரையில் நெருப்புப் பிடிப்பதில்லை. கட்டும் வீட்டை ''அஸ்பெஸ்டஸ்'' கூரையாகக் கட்ட வேண்டுமென்று கட்டளையிடுகிறாள் அடுப்பெரிக்காது பணம் சம்பாதித்த ஒரு நண்பரின் சம்சாரம்.

● இராவணன் காலத்தில் 'அஸ்பெஸ்டஸ்'' கூரை வீடுகள் இருந்திருந்தால் லங்கா ''தகனம்" நடைபெற்றிருக்காதே என விமர்சிக்கின்றார் ஒரு இலக்கிய நண்பன்.

□

★ கையில் செப்பு வளையம் போடுவது இன்றைய இளைஞர்களின் நாகரீகம். செம்பு உடலில் படுவதால் இரத்தத் தடை நோய்கள் ஏற்படாது என்று அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். — செய்தி

● இந்தச் செய்தியைப் படித்த ஒரு கைதி தமக்குப் போடும் விலங்கைச் செம்பால் செய்தால் நல்லது எனச் செப்புகின்றார்.

□

★ கட்சிகள் எல்லாம் இணைந்தால் நாட்டிற்கு நல்லது என்கிறார் ஒரு ஒற்றுமை விரும்பி.

● ஆற்றலில்லாக்கட்சிகள் பிரிந்திருந்தாலென்ன, இணைந்திருந்தாலென்ன ஒன்றுதான். ஆறுகள் இணைந்தால் நன்மையுண்டு என்கிறார் விவசாய நண்பர் ஒருவர்.

□

★ ''சுரண்டல் ஒழிக" ''சுரண்டல் ஒழிக'' என்று அந்தக் காலம் தொடக்கம் கத்துறுங்க. ஆனால்?

● ஆனால் என்ன?

★ சுண்டல்தான் ஒழிந்தது. சுரண்டல் ஒழியவில்லை! சுண்டலை நினைக்க நா ஊறுது.

★ சக்திக்கேற்ற வேலையை அடைந்தவன் இறைவனின் முழுமையான அருளைப் பெற்றவனாவன். ●

தான். தியாக உணர்ச்சி மிகுந்த பிறவி.

இவ்வாறு எண்ணியதும், அடக்கமும், பணிவும், திடசித்தத்தைக் காட்டும் ஒருவராக கண்ணம்மாவின் தந்தையைக் கற்பனை செய்து பார்த்தான்.

மனிதரின் தாகத்தையும் வயலின் தாகத்தையும் தீர்க்கும் ஆற்றுநீர் ஆரவாரம்செய்வதில்லை அது அமைதியாகவே ஓடிக்கொண்டிருக்கும். கண்ணம்மாவின் அப்பா மட்டுமென்ன; இன்னும் எத்தனையோ பேர் ஆற்றுநீரைப் போன்றவர்கள்தான். அவர்கள் ஆரவாரமில்லாமல் பெருந்தியாகங்களை அமைதியாகச் செய்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி உலகத்துக்கு ஒன்றுமேதெரியாது. ஆனால் தாகத்துக்கோ, வயலுக்கோ பயன்படாமல் அலை எழுப்பி பலத்த ஆரவாரம் செய்யும் கடலைப் போன்றவர்களைத்தான் உலகம் பார்க்கிறது, சிந்திக்கிறது, பரபரப்படைகிறது.

ரவியின் சிந்தனை இவ்வாறு நீண்டுகொண்டேயிருந்தது. அதே சிந்தனையோடு மெல்ல எழுந்து நடந்தவன், கப்பல் சுவரில் குனிந்து சாய்ந்தபடி கடலைப் பார்த்த வண்ணம் மீண்டும் சிந்தனைவயப் பட்டான்.

— தொடரும்.



என்னப்பா! சிறு கைத்தொழில் ஆரம்பித்திருப்பதாகக் கூறுகிறாயே. என்ன அது?

உங்கள் பொக்கற்றுக்குள் மணிபர்ஸ் இருக்கிறதா என்று பாருங்கள். அதுதான்!

— ச. ரா. பா. —

# சோப் சிரிப்பு



தூதுவன்; பிரபோ! இன்று ராமசாமி மனைவியின் உயிரைக் கொண்டுவரவேண்டிய தினம். ஆனால் முடியவில்லை.

யமன்: ஏன்?

தூதுவன்: இன்று அந்தப் பெண் சோப்பு வழுக்கி கிணற்றுக்குள் விழும்படி ஆகித்தான் உயிர் எடுக்கவேண்டும். சோப்புத் தட்டுப்பாட்டால் முடியவில்லை.



அந்தக் குளத்தங்கரையில் ஏன் அவ்வளவு கூட்டம், யாராவது நீரில் மூழ்கிவிட்டார்களா?

இல்லை, ஒருவரின் சோப்புக் கை தவறி தண்ணீருக்குள் விழுந்துவிட்டதாம். அதைத்தான் சுழியோடிகளைக் கொண்டு தேடுகிறார்கள்!

□

டாக்டர்: படுபாவி எவனோ நோயாளி போல நடித்து கொன்சல்டேஷனுக்குப் பிறகு நான் கை கழுவ வைத்திருக்கும் சோப்பைத் திருடிவிட்டான்.



உங்கள் மனைவி ஏன் கவலையாக இருக்கிறா'

சோப் கிடைக்கவில்லை என்று

சோப் இல்லாவிடில் அரப்புத் தேய்த்துக் குளிக்கலாமே?

நீங்க ஒண்ணு. அவளுக்கு சோப்பை விடச் சோப்பு உறைகள்தான் வேண்டும். பரிசுப் போட்டிகளுக்கு அனுப்ப!

□

சீடா! இந்த உடல் நிலையில்லாதது. ஆகவே இந்த உடல் இருக்கும்போது நம்மால் ஆனவரை......

சோப்புப் போட்டுக் குளித்துவிடவேண்டும்!

? ? ?

ச. ரா. பா. சர்மா

பிரார்த்தனைக்கு உடனே பலன் கிடைக்கக்கூடாது. அப்படிக் கிடைத்துவிட்டால் அவை கடிதப் போக்குவரத்து மாதிரி ஆகிவிடும்.

■ சிறுகதை

"குமார் தனபால்"

# இது ஒரு துப்பறியும் கதை!

தினமும் நடுச்சாம நேரத்தில் கோழிகளின் அவலக்குரல்களைத் தொடர்ந்து அயல் ஜனங்கள் பொல்லுகள், அரிக்கன்லாம்பு ரோச்லைட் சகிதம் "கள்ளனைப் பிடியுங்கோ... கள்ளனைப் பிடியுங்கோ" என்று வளவு முழுவதும் ஓடுவதும், அந்தக் கள்ளனைப் பிடிக்காமல் ஏமாற்றறதுடன் திரும்புவதும் இப்போது மூன்று நாட்களாக இந்த அயலுக்குள் தொடர்ந்து நடக்கும் சங்கதி.

இன்று மூன்றாவது வெற்றிகரமான நாளாக எங்கள் அயலுக்குள் கோழிக்களவு நடந்திருக்கிறது. முந்தநாள் முத்து வீட்டு இருபத்தைந்து ரூபா பெறுமதியான சேவல் களவு. மறுநாள் வேலாயுதம் வீட்டு விருத்திற்குப் பதமான ஒரு சோடிக் குஞ்சு. நேற்றிரவு வைரமுத்துக் கிழவியின் அழகான கறுத்த வெள்ளைப் புள்ளிக்கோழி. இதுவரை எழுபத்தைந்து ரூபா பெறுமதியான கோழிகள் களவுபோய்விட்டன.

நான் இரவு எட்டு மணிக்கு மேல் வேலையால் வந்து படுத்தால்... பிறகென்ன... மறுநாட் காலை எட்டு மணிக்குமுன் என்னைப் புரட்டி எழுப்ப அந்தப் பிரமாவாலும் முடியவே முடியாது. இந்த விறுத்தத்தில் நடுச்சாமத்தில் எழும்பிக் கள்ளனைப் பிடிக்க நான் ஓடுவேனா' மூன்று நாட்களாக மனைவியின் அர்ச்சனை மிக மிக விசேஷம்.

"எங்கள் அயலுக்குள் தினமும் கோழிகள் களவுபோகிறதே! அயல் ஆம்பிளைகளெல்லாம் கள்ளனைப் பிடிக்க நித்திரை முழித்து ஓடித்திரிகிறார்களே, நீங்களும் அவர்களுடன் சேர்ந்து இரவிரவாத வளவு முழுவதும் ஓடித் திரிந்தால் என்ன" பதில் எதுவுமின்றி அவள் தந்த சாயத்தையும் பனங்கட்டியையும் ருசிபார்த்துக்கொண்டிருந்தேன்.

"நான் இப்படிப் பேசுகிறேனென்று உங்களுக்கு ரோஷமாவது வருகிறதா?"




இதைக் கேட்டதும் என் ரோஷ நரம்பு ரியூன் கொடுக்கத் தொடங்கியது.

"எடி பேச்சி! ஊர் ஓடினா ஒத்து ஓடத்தான்வேணும். அதுக்காக இரவிரவாக வீணாக நித்திரை முழித்து ஓடித்திரிந்து கள்ளனைப் பிடிக்காமல் திரும்புவதா? ஆனா நான் இந்த விஷயத்தில் இறங்கினால் வெற்றிதான். நான் ஒரு பழைய துப்பறியும் சிங்கம்!" இப்படி மனைவியிடம் கொஞ்சம் சூடேற்றிக்கொண்டிருந்தபோது,

"என்ரை கோழியியைப் புடிச்சவங்களின்ரை கையில பாம்பு கொத்த... அவங்களைக் கார் அடிக்க... லொறி அடிக்க... இண்டைக்கு அந்தோனியார் கோயிலில இழைக் கட்டிப்போட்டுத்தான் மற்ற வேலை."

முன்வீட்டு வைரமுத்துக் கிழவி இப்படி ஒப்பாரி வைத்துக்கொண்டு எங்கள் வீட்டுப் படலையைத் திறந்தாள்.



என்னய்யா இது. மாவின் விலை குறைந்தபிறகும் இடியப் பத்தின் விலை இன்னமும் குறைய வில்லையே?

இடியப்பத்தை விட சம்பார் தான் நிறையக் குடிக்கிறீர்கள். மிளகாய் இப்போ விலைகூட!

— ச. ரா. பா.

''தம்பி... சோக்கான கறுத்த வெள்ளைப் புள்ளிச் கோழியடா... இப்பவும் கண்ணுக்கை நிக்கிற மாதிரிக் கிடக்கடா.''

''ஆச்சி... இப்ப மூண்டு நாளா தொடர்ந்து அயலுக்கை கோழி களவு போகுது. ஒவ்வொரு நாளும் இவையும் கள்ளனை விட்டுத் துரத்தினம் தான், இன்னும் கள்ளனைப் பிடிக்கேல்லை''

''பாத்தியேடா தப்பி! இந்தக் கண்கெடுவாங்கள் செய்யிற வேலையை'' கிழவியின் கண்கள் கலங்கிவிட்டன.

''ஆச்சி... பிலத்துக் கத்தாதை. எங்கடை அயலுக்கை இப்பிடித் துணிஞ்சு தொடர்ந்து களவெடுக்க பிறத்தியார் வர மாட்டினம், இது எங்சடை அயலுக்கை இருக்கிறவன்கள்தான் செய்யிற வேலை. நாளைக்கு விடியிறதுக்கிடையிலை அந்தக்கோழிக் கள்ளனை நான் பிடிச்சுத் தாறன். எத்தனையோ துப்பறியும் கதைப் புத்தகங்களைப் படிச்சுத் தள்ளிய எனக்கு இது ஒரு தூசு.''

''தம்பி... இந்தக் கோழிக் கள்ளனை நீ புடிச்சுத் தந்தியெண்டா வாற ஞாயிற்றுக்கிழமை உன்ரை முழுக்குக்கு நான் ஒரு கோழி காச்சித் தருவன்''

''எணேய்... என்ரை அம்மா இப்பவும் சொல்லுவா, மூத்தவன் அந்த நேரம் எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணியிருந்தா ஒரு இஞ்சுப்பற்றர் சி. ஐ. டி. யா வாற மூளைப் பவர் இருக்கெண்டு. எஸ். எஸ். ஸியிலை இந்த 'ஸி' எல்லே 'கீ' விட்டிட்டுது.''



''இஞ்சருங்கோ! நீங்கள் இந்த விஷ்யத்திலை தீவிரமா இறங்குங்கோ. ரெண்டு நாளைக்கு வேலைக்குப் போகாட்டியும் பரவாயில்லை. சிலவுக்கு நான் உண்டியலுக்கை சேர்த்து வைச்சிருக்கிற காசு அவ்வளவையும் தாறன்''

ஆகா! என் படிதாண்டாப் பத்தினியே இப்படி ஆசீர்வதிக்கும்போது, இப்போதுதான் உண்மையான சுதந்திரமடைந்த இலங்கையில் உலாவுவது போன்ற பிரமை. கொடுக்குக் கட்டாத குறையாக இருக்கையை விட்டு எழுந்து உஷாரானேன்!

இரண்டு நாட்கள் வேலைக்குப் போகவேண்டாமாம், செலவுக்குக் காசாம். என் மனைவியா இப்படி உரைத்தாள்? நான் துப்பறிந்து இன்றிரவு அந்தக் கோழிக் கள்ளனை மடக்காவிட்டால்..... முஷ்டியை மடக்கி மீசையை முறுக்கலாம் என்ற எண்ணத்தில் கை வைத்தபோது போனவாரம் அதைக் கட்டையாக வெட்டிக் குறைத்த ஞாபகம்வரவே வெறும்


பாலாடையிலும் பார்க்க
வெண்மையாக
உங்கள் நூலாடைகளை
மிளிரச் செய்வது




மில்க்வைற்சோப்
தொழிற்சாலை
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: 79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 11


● கோழை பலமுறை செத்துப் பிழைக்கிறான், ஆனால் வீரன் ஒரே முறைதான் சாகிறான்.

— ஷேக்ஸ்பியர்

சொண்டை மாத்திரம் தடவிய படி கையை எடுத்தேன்.

போனமாதம் எங்கள் வீட்டில் உடைத்து வைத்த பாதித் தேங்காயைக் காணவில்லை. குலரத்தினம் வீட்டுக் குட்டைநாய் தான் அதைக் கல்விச் கென்றது என்பதை எவ்வளவு ஆதாரத் தோடு துப்பறிந்து மனைவிக்குக் கூறினேன்.

---



நான் புலி வாழும் காட்டில் பேய் வாழப்போகிறேன்.

என்ன! புலி வாழும் காட்டிலா?

ஓம்... அங்கு மனிதன் வரான்!

— அதிமதுரம்

---

பின்பு ஒருநாள் மனைவி கூப்பன் எடுத்து கடகத்தோடு குந்தில் வைத்த அரிசியில் அரைக் கொத்து மறைந்துவிட்டது. அந்தோனிப்பிள்ளை வீட்டு ஆடுதான் அதைத் தின்று தீர்த்தது என்பதை எப்படி எப்படி ருசுப்படுத்தினேன்.

அந்தநேரம் என்னவள் அந்தோனிப்பிள்ளை வீடு, குலரத்தின வாத்தியார் வீடுகளுடன் மல்லுக்கு நின்றபோது எவ்வளவு அல்லற்பட்டு அவளை அடக்கினேன் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அத்தோடுதுப்பறியும் என் வேலைகரு முழுக்குப்போட்ட எனக்கு மீண்டும்ஒரு சோதனையா?

சோதனைகள், வேதனைகள் எல்லாம் துப்பறியும் எங்களுக்குச் சகஜம். இப்படியான துப்பறியும் சிங்கம் இந்த அயலுக்குள் இருக்கும்போது தொடர்ந்து கோழிகள் களவு போவதா? அவமானம்! அவமானம்!!

''ஆச்சி! அந்தோனியார் கோயிலிலை இழைக் கட்குறதில்லையோ, மை போட்டுப் பாக்கிறதில்லையோ இந்தக் காலத்திலை வேலையில்லை. நேரடி நடவடிக்கைதான்! எணேய்! உனக்கு இந்த அயலுக்கை சந்தேகமான ஆளைச் சொல்லு நாளைக்கு விடியமுன்னம் ஆதாரத்தோட பிடிச்சுத்தாறன். கெதியாகச் சொல்லு'' கிழவியைத் துரிதப்படுத்தினேன்.

''எனக்கு உவன் இரத்தின சிங்கத்திலைதான்சந்தேகம். அவன் தான் இப்ப கொண்டக்ரர் வேலையாலும் தட்டுப்பட்டு ஊர் சுத்தித் திரியிருன். ஆரையன் தெண்டித் தெண்டிக் கள்ளுக் குடிக்கிறதும் வாய்க்கு ருசியா ஊர்க் கோழிகளைப் புடிச்சுத் தின்னிறதும். உவனுக்குக் கொண்டக்ரர் வேலையும் இல்லாமல் போனது ரிக்கற் குடுக்காமல் காசை மடக்கினதாலைதானும். கிழவி காதிற்குள் குசுகுசுத்தாள்.

''உவ்வளவும் காணும். நீ போய் வீட்டிலையிரு. நான் மிச்ச அலுவலைப் பாக்கிறன்''

''தம்பி! விடியமுன்னம் ஆளைப் புடிச்சுத் தராட்டி அந்தோனியார் கோயிலிலை இழைக் கட்டிறதைத் தவிர வேறை வழியில்லை'' கிழவி புறுபுறுத்தபடி திரும்பி நடந்தாள்.

இவ்வளவு நேரமும் பக்கத்திலை நின்று ''இரண்டு நாளைக்கு வேலைக்குப் போகாட்டியும் பரவாயில்லை. சிலவுக்கு உண்டியல் காசைத் தருகிறேன்'' என்று வீரகர்ச்சனை எழுப்பிய மனைவி இப்போது எங்கே போனுள்?

மனைவிக்கு மறுபெயரான ''இஞ்சரப்பா'' என்று குரல் விட்டேன். ''வாறன் பாருங்கோ' என்றபடி வேலியைப் பிய்த்து அடுத்தவீட்டு அன்னம்மாவுடன் ''என்ரை அவர்தான் ராவைக்குள்ளை கோழிக்கள்ளனைப் பிடிக்கிறனெண்டு திமிறிக்கொண்டு நிக்கிறுர்.'' என்ற கடைசி வார்த்தையை என் காதிலும் விழும்படி கூறிவிட்டு என்னை நோக்கி வந்தாள்.

---

ஏய்! திரும்பாதே. உயிர் மேல் ஆசையிருந்தால் நான் சொல்கிற இடத்திற்கு விமானத்தை இறக்கு.

உன் இஷ்டப்படி எந்த இடத்திலும இறக்கமுடியாது.

ஏன்?

விமானத்தில் யந்திரக்கோளாறு ஏற்பட்டுப் பின்னுக்கு தீ பிடித்திருக்கிறது.

— ச. ரா. பா.

---

அடிப்பாவி! நானு திமிறிக் கொண்டு நிக்கிறன். இரண்டு நாள் வேலையில்லாவிட்டாலும் பரவாயில்லை, உண்டியல் உடைத்து நான் செலவுக்குக காசு தாறன் என்று நீ சொன்ன வார்த்தைகளெல்லோ என்னை அலவாங்கு போட்டுத் தெண்டுகிறது. எது எப்படியிருந்தாலும் அவள் சொன்னுல் சொன்னதுதான்.

''இஞ்சருங்கோ! அடுத்த வீட்டு அன்னம்மாவும் உவன் கொண்டக்ரர் ரத்தினசிங்கத்திலை தான் சமசியப்படுகிறுவாம்''

---

● உண்மைக்காக எதையும் இழக்கத் தயாராக இருங்கள். ஆனல் எதற்காகவும் உண்மையை இழக்காதீர்கள்.

— அண்ணல் காந்தி

சிரித்திரனின் சீரியசேவை
மென்மேலும் சிறப்புற
வாழ்த்துகின்றேம்.

கருணு அஸ்கோ மேசைலாம்பு குக்கர்,
மற்றும் இனுமல், அலுமினிய, பித்தளை
சாமான்கள் யாவும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

விஜயம் செய்யுங்கள்

# கருணு டிரேடிங் சென்ரர்

29, டாம் வீதி, கொழும்பு-12.

● மற்றவனிடம் கடனுக வாங்கிய பணத்தை மறந்து விடுவதில் மாத்திரமே மனிதன் அதிக ஞாபகமுள்ளவனுக இருக்கிருன்.

## ஒட்டக்கூத்தர் ஒடிந்து நின்றார்!

ஒரு தடவை ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் புகழேந்தி என்னும் புலவரை மட்டம் தட்டும் வகையில் ''எங்கள் சோழ அரசர் முதுகுக்குக் கவசம் அணிவதில்லை, ஏன் தெரியுமா? அவர் புறமுதுகிட்டு ஓடுவது கிடையாது'' என்று சொன்னார்.

உடனே புகழேந்தி ''உங்கள் சோழ அரசர் முதுகுக்குக் கவசம் போடாமல் இருப்பதன் இரகசியம் அதுவல்ல. அவர் எங்கள் பாண்டிய அரசர் மீது கொண்டுள்ள நம்பிக்கைதான் காரணம். அதாவது புறமுதுகு காட்டி ஓடுகிறவர்கள் மீது பாண்டியர்கள் வேல் எறிய மாட்டார்கள்'' என்று கூறினார்'

ஒட்டக்கூத்தர் பதில் கூற முடியாது திகைத்து நின்றார்.

''பேந்தென்ன... புறா பண்ண உவ்வளவு பேரும் இருந்தாக் காணும். என்ரை துப்பறியும் வேலை மிகச் சுலபமாக முடியும்.''

''நான் ரத்தினசிங்கம் வீடு மட்டும் சும்மா குசலம் விசாரிக்கப் போகிறமாதிரி போய் ஆளை ஒரு நோட்டம் விட்டுக்கொண்டு வாறன். நீ உண்டியலை உடைச்சுக் காசை எண்ணி வைச்சிரு. அதுக்கு முன்னம் ஒரு பனங்கட்டிச் சாயம் கொண்டு கெதியா வா'' என்று மனைவியைக் குசினிப் பக்கமாகத் துரத்தினேன்.

திடீரென்று ரத்தினசிங்கம் வீட்டை போகப்படாது. அவனும் ஒரு அமுசடக்குக் கள்ளன் சந்தேகப்படுவான். சின்னத்துரை வீடு, சிவலிங்கம் வீடு எல்லாம் போய்விட்டுத்தான் அங்கு போக வேண்டும். உவன் ரத்தினசிங்கம் முந்தி ஒரு வேலித் தகராறிலை என்னோடை முண்டினவர். இன்றிரவு பழிக்குப்பழி தீர்த்துக்கட்டிறன்.

மனைவி அன்று காலை இரண்டாவது தடவையாக கொண்டோடி வந்து தந்தது வெறும் பனங்கட்டிச் சாயமல்ல. அசல் சீனி போட்ட சுத்தமான கமகம கோப்பி! இரண்டு மிடறிலை அதை மடக் மடக்கென உறிஞ்சித் தள்ளி; கைகளை உதறி விட்டபடி வீட்டுப் பனைமட்டைப் படலையைத் திறந்து படாரென மூடினேன்,

சிவலிங்கம், சின்னத்துரை வீடு எல்லா இடமும் போய் கடைசியாக ரத்தினசிங்கம் வீட்டுப் படலையைத் திறந்தபோது... அந்த அதிகாலையிலேயே இரண்டு போத்தில் காய்வெட்டிப் பனங்கள்ளுடன் தேகத்திற்கு எண்ணை பூசிக்கொண்டிருந்தவன் என் வரவைக் கண்டதும் கள்ளுப்போத்தல்களைத் தூக்கி தட்டி மறைவுடன் வைப்பதை எடுத்த எடுப்பிலேயே என் துப்பறியும் கண்கள் கிரகித்துக்கொண்டன.

''வா தம்பி வா! என்ன விடிய இந்தப் பக்கம்?'' என்றார்.


''என்னண்ணை இண்டைக்கு முழுக்குப் போலை?'' என்றேன் நளினச் சிரிப்புடன்.

''ஓம் தம்பி! விடியப்புறமாக கொழும்புத்துறைக்குப் போய் களங்கண்டிக் கலவாய்'மீனெண்டு வாங்கியந்தனான். அதுதான் ஒரு சின்ன முழுக்கு'' என்று இழுத்தார்.

உது களங்கண்டிக் கலவாய் மீனின் சின்ன முழுக்காக எனக்குப் படவில்லை. இது வைரமுத்துக் கிழவியின் க. வெ. பு. கோழி, அதாவது கறுத்த-வெள்ளைப் புள்ளிக்கோழியின் பெரிய முழுக்காகவே பட்டது. மச்சான் என்னிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

அவர் மனைவி அமுதமோ என்னைக் கண்டதும் எட்டிக் குசினிப் படலையை இழுத்து மூடி மும்முரமான சமையல் வேலையில் ஈடுபடுவதையும் ஓரக் கண்ணால் கவனித்துவிட்டேன்.

சரி, சரி. க. வெ. பு. கோழி சட்டிக்குள் போய்விட்டது. தொடர்ந்து மூன்று நாட்களாக இவன்தான் கோழிகளைப் பிடித்திருக்கிறான். சனங்கள் பொல்லுகள், தடிகளுடன் ரோட்டுப் பக்கமாக ஓட இவன் மிகச்சுலபமாக குப்பைக் கிடங்கால் ஓடி வந்து வீட்டிற்குள் படுத்துவிடுகிறான். இவ்வளவு நாளும் திருடன்



ஒருவர்; இன்று பெருவெள்ளம்...மாணவர்கள் பாடசாலைக்கு வந்தார்களா?

ஆசிரியர்: ''ஷோர்ட்ஸ்'' அதாவது கட்டைக் களிசான் அணியும் மாணவர்கள் வந்தார்கள்... ''பெல்பொட்டம்'' அணிபவர்கள் வரவில்லை.

— அதிமதுரம்

● தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விடத் தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்தில் முன்னேற முடியும். — ஆபிரகாம்லிங்கன்



ஒருவர்: என்ன தலையில் காயம்?

மற்றவர்: நான் அடித்து வளர்க்காதபடியால் தான் கெட்டு விட்டேன் என்று என் மகன் அடித்துவிட்டான்.

பிடிபடாததற்குக் காரணம் இது தான். கோழி ருசி ஆளை விடாது இன்றிரவும் ஆள் வரத் தப்பாது. பிளான் போட்டு ஆளைப் புடிக்க எனக்குத்தான் தெரியும்.

''என்ன தம்பி! வீடு தேடிக் கதைக்க வந்திட்டு பேசாமல் இருக்கிறீர்?" துப்பறியும் சிந்தனையில் சுழன்று கொண்டிருந்த என்னை ரத்தினசிங்கம் படாரென அறுத்துவிட்டார்.

''ஒண்டுமில்லை... உங்களிட்டை ஒரு காசு பத்து ரூபா கடனாய் மாறுவமென்று வந்தன்" என்று அந்தநேரம் வந்த பொய்யை விட்டேன். வாய்ச்சால் வாய்க்கட்டுமே என்ற எண்ணம்.

''தின்னவேலிச் சந்தேக்கை ஒராள் காசு தரவேணும், நாளைக்கு வாரும் பாப்பம்"

ஆகா! நேற்றும் அதற்கு முதல்நாளும் பீடித்த 'கோழிகள் விற்பனையாகிவிட்டன. இன்று பிடித்த வைரமுத்துக்கிழவியின் க. வெ. பு, கோழிதான் கறியாகி இருக்கிறது. இவன்தான் கோழிக் கள்ளன் என்பதற்கு இதைவிட வேறு விஷயம் வேண்டாம். மச்சான் இண்டைக்கு இரவைக்கும் கோழி வேட்டைக்கு வராமல் விடார். என்னட்டை வகையாக மாட்டுப்படுவார். பேந்தென்ன வாற ஞாயிறு கோழிக்கறியுடன் நான் ஒரு டபிள் முழுக்கு!

''என்ன பேந்தும் யோசிக்கிறீர்?'' மீண்டும் ரத்தினசிங்கம் என்னை உலுப்பிவிட்டார்.

''ஒண்டுமில்லை. அப்ப நான் வாறன்'' என்றபடி எழுந்து நடையைக் கட்டினேன்.

இன்று பகல் நான் வீட்டில் நிற்கக்கூடாது? வேலைக்குப் போவதுபோலப் போய் இரவு பத்து மணிக்குப் பின் ஒருவருக்கும் தெரியாமல் அந்தக் குப்பைக் கிடங்குக்குள்மறைந்திருந்து ஆளை மடக்கவேணும்,

என் துப்பறியும் வேலையை மனதிற்குள் வரிசைப்படுத்திக் கொண்டு மனைவியிடம் உண்டியலில் இருந்து கிளப்பிய ரூபாயில் பத்தைப் பெற்றுக்கொண்டு வீதியில் ஏறும்போது.

''என்ன ஒண்டும் பேசாமல் போறியள்?'' மனைவிதான் கேட்டாள். இந்தத் திருடனைப் பிடிக்கும் படலத்தில் ஒரு 'திறிலிங்' வேண்டும். என் திட்டத்தை மனைவிக்கோ மற்றவர்களுக்கோ மூச்சும் விடக்கூடாது என்பது தான் என் திட்டம். பேசாமல் படலையைத் திறந்து வீதியில் ஏறி மறைந்தேன். பகல் முழுவதும் என் சிந்தனை மாட்டுடன் எங்கெல்லாமோ அலைந்தேன்.

இப்போது இரவு ஏழு முப்பது!

இப்படியான துப்பறியும் வேலைக்கு ஒரு சின்ன 'டோஸ்' அடித்தால் வேலை துரிதமாக இருக்குமென்ற எண்ணத்தில் நெடுங்குளம் சந்தித் தவறணைக்குள் இறங்கினேன்.


புது வண்ணங்களிலான புதுமைப் புடவைகளுக்கு

சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு

டைமா

நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு.

தொலைபேசி; 20875


● செந்தாமரை சேற்றிலே இருக்கிறதே என்று கவலைப்படுவது அறிவீனம். சேற்றில் செந்தாமரை இருக்கிறதே என்று சந்தோஷப்படுவதே அறிவு.

சொல்லி வைத்ததுபோல் அங்கு கொண்டக்ரர் ரத்தினசிங்கம் அளவான வெறியுடன் யாரோடோ அலம்பிக்கொண்டு நின்ருன். ஓகோ! இவன் தினமும் தவறணையில் வயிற்றை நிரப்பிக் கொண்டுதான் கோழிக் களவுக்கு வருகிருனு? வா, வா, இன்று உன்னை மடக்கி மண்டையை உடைக்கிறேன்.

''என்ன தம்பி! நீரும் இப்ப பப்பிளிக்காகத் தவறணைக்குள் இறங்கிவிட்டீர்?'' ரத்தினசிங்கம் என்னைக் கண்டுவிட்டான். அலுவல் பிழைக்குமுன்பு வெளியேற வேண்டும்.

இண்டைக்கு இரவைக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு அது தான் கொஞ்சம் உஷார் ஏத்திறன். அதிகம் நின்று தாளிக்காமல் ஆளைக் காய் வெட்டி வெளியேறினேன்.

நேரம் ஒன்பது மணி.

முன்னேற்பாடாக வேலிக்குள் மறைத்து வைத்திருந்த மண்வெட்டிப் பிடியைச் சத்தப்படாமல் இழுத்தெடுத்தேன். மெதுவாக ரத்தினசிங்கம் வீட்டு வேலிக்குப்பக்கத்திலுள்ள குப்பைக்கிடங்கிற்குள் பதுங்கினேன். 'கள்ளன் கள்ளன்'' என்று ஆட்கள் கத்தும்போது மச்சான் வீட்டிற்குள் பூர உந்தக் குப்பைக் கிடங்கைத் தான் தாண்டவேண்டும்.

நேரம் பத்து...

பதினொன்றரை...

பன்னிரண்டு...

அதோ கோழிகளின் அவலக் குரல், மரண ஓலம்!

தொடர்ந்து ''கள்ளன்... கள்ளன்'' என்ற அயலவர்களின் பின்னணி. மண்வெட்டிப் பிடியைக் கையில் இறுக்கிப் பிடித்தபடி நன்ருகப் பதுங்கிக்கொண்டேன்.

''கோழிக் கள்ளன்... பிடியுங்கோ... கள்ளன்...'' மீண்டும் குரல்கள் அரிக்கன் லாம்பு, ரோச் வெளிச்சங்கள் எனக்கு நூறு யார் தூரத்தில் துல்லியமாகத் தெரிந்தன. அசல்! மச்சான் நான் நினைத்ததுபோலக் கோழியுடன் இந்தப் பக்கமாகத்தான் ஓடியாருர். கொடுக்கை இன்னும் இழுத்துக் கட்டிக்கொண்டேன்.

இதென்ன... திடீரென என்னைச் சுற்றி ரோச் லையிற் அரிக்கன் லாம்பு வெளிச்சங்கள்!

''இந்தா... இந்தக் குப்பைக் கிடங்கிற்குள் பதுங்கியிருக்கிருன் கோழிக்கள்ளன்! குரல் ஒன்று பலமாக ஒலித்தது. உன் முகத்திற்கு நேரே ரோச் ஒன்று கர்ணகடூரமாகப் பிரகாசித்தது! என் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

''ஆளைப் பிடியுங்கோடா... ஓடாதை. ஓடினுல் கால் முறிப்பம்!''

ஐயோ! என்ன அநியாயம்! என்னைச் சூழ்ந்து ஓடிவந்த நாலைந்து பேர்கள் கோழியை ஈரச்சாக்குப் போட்டு அமத்துவது போல அமத்திப் பிடித்தார்கள்,

''அது நானப்பா... என்னை விடுங்கோ...'' நான் திமிறினேன்.

''ஆளை வெளியாலை இழுத்தெறியுங்கோ'' என் முகத்தைச் சுற்றி ரோச் லைட் வெளிச்சங்கள்.

அயல் ஜனங்கள் எல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்.

''காலமை 'இழைக் கட்ட வேண்டாம், நான் கள்ளனைப் பிடிச்சுத் தாறன்' எண்டு தடுக்கேக்கையே நான் நினைச்சனுன் இவன்தான் எங்கடைகோழியெல்லாம் புடிக்கிருனெண்டு'' இது வைரமுத்துக் கிழவி,

''பின்னேரம் தவறணைக்குள் கள்ளடிக்கேக்கை சொன்னவன் இரவைக்கு முக்கியமான அலுவல் ஒண்டிருக்கு அதுதான் உஷார் ஏத்திறனெண்டு.'' இது கொண்டக்ரர் இரத்தினசிங்கம்.

''எட, பாவி! நீயே இவ்வளவு நாளும் இந்தக் கோழியெல்லாம் பிடிச்சனி'' இது அயலவர்களின் ஒருமித்த குரல்.

''வடுவா ருஸ்கல் இவ்வளவு நாளும் புடிச்ச கோழியளை மரியாதையாகத் தா. இல்லை... வட்டியும் முதலுமாகக் காசைத் தா. அயல் பெடியன் எண்டு பாக்கிறம். பிறகு பொலிசுக்கு இழுபட வேண்டி வரும்''

ஐயகோ! அப்பாவிக் கொண்டக்ரர் ரத்தினசிங்கத்தில் திருட்டுப்பட்டம் சூட்ட சந்தேகப்பட்ட எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். ரெனிஸ் பந்து போன்ற உறுண்டை ஒன்று என் தொண்டையை அடைத்தது அவ்வளவுதான், நான் மயங்கி...

ஒரு வாரத்தின் பின்புதான் இந்தக் கோழிக் களவின் மர்மம் விடுபட்டது. திருடர்கள் ஒருவரும் கோழிகளைப் பிடிக்கவில்லை. எங்கள் கிராமத்தில் இன்னும் சில இடங்களில் தொடர்ந்து கோழிகளை ருசி பார்த்து வந்த மரநாய் ஒன்றைக் கோழியுடன் அயலவர்கள் அடித்துக் கொன்ருர்கள்! ★



பிரயாணி: என்னப்பா! உனது காரில் சாமான்களைப் போடலாமென்ருல் டிக்கியைக் காணேம்?

டிரைவர்: இப்போவெல்லாம் சாரதிகளை டிக்கியிலே கட்டிப் போடுகிறதா பேப்பரில் வருகிறது அதுதான்!

— ச. ரா. பா.

● ஒரு மரத்தின் பலன் எப்படி அதன் கனிகளைப் பொறுத்திருக்கிறதோ. அப்படித்தான் ஒரு மதத்தின் பலன் அதைப் பின்பற்றும் மக்களின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது.

சிரிப்புக்கும் சிந்தனைக்கும்
விருந்தூட்டும்

சிரித்திரனின்

பல்சுவைச் சேவை தொடர
எமது மனமுவந்த நல்லாசிகள்.

# விமல் அன் கோ.

1, டாம் வீதி, கொழும்பு-12.

● நல்லவர் நன்மொழி உரைப்பார். ஆனல் நன்மொழி உரைப்பவரெல்லாம் நல்லவர் ஆகார்.

— கன்பூஷியஸ்

# ஈழத்து மங்கல இசைஞர்



**நவாலியூர், நா. சச்சிதானந்தன்**

எமது வாத்தியங்களில், கையாள்வதற்கு மிகக் கடினமானது நாகசுரம். அதே நேரத்தில் எமது இசையின் அதிநுணுக்கமான அம்சங்களையெல்லாம் அச்சொட்டாகத் தரக்கூடியதும் இந்த வாத்தியந்தான்.

நமது சாரீரத்தின் மூலமோ. அல்லது நமது சரீரத்தின் மூலம் இயக்கப்படும் வேறெந்த வாத்தியத்தின் மூலமோ பெறமுடியாத நிறைவையும், பூரணத்துவத்தையும் நாகசுர வாத்தியத்தின் மூலம் நாம் பெற்று விடுகிறோம். வாழ்க்கையை ஆரம்பிக்கும் மங்கல நாளான திருமண வைபவத்தைத் தொடக்கி வைக்கும் காரணத்தாலோ என்னவோ இதை மங்கல வாத்தியம் (மங்கள வாத்தியம் எனினும் ஒரே கருத்துத் தான்) என்று கூறுகிறோம்.

இலங்கையில் இன்றுவரை எத்தனையோ கலப்பு இசைகளின் ஊடுருவல்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து, எமது இசை மரபு வாழ்ந்துகொண்டிருக்கிறதென்றால் அதற்கு இந்த நாகசுரமும் அதற்கு அனுசரணை வாத்தியமான தவிலுந்தான் முக்கிய காரணங்களாகும்.

கர்நாடக சாஸ்திரீய இசையை ஒருவர் வாயினால் இசைக்கும்போது சிலருக்குச் சலிப்புத் தட்டுகிறது. ஆனால் அதே சாஸ்திரீய இசையை நாகசுரத்தில் இசைக்கும்போது இசை நுணுக்கம் விளங்காத பாமர மக்களும் இந்த அவசரமிக்க வாழ்க்கைக்கிடையில், பல மணித்தியாலங்கள் வரை விரும்பிச் சுவைக்கிறார்கள். ஆதலால் பிழை இசையின் மேலில்லை. அந்த இசையை நாம் கேட்கும் சாதனந்தான் எல்லாவற்றுக்கும் காரணம்.

எமது நாட்டில் மற்றைய சிறந்த வாத்தியங்களான புல்லாங்குழல், வீணை போன்றவை நாகசுரத்தைப் போல் ஜனரஞ்சகமாக வரமுடியாமைக்குக் காரணம் அவற்றின் மூலம் இசையைப் பரப்பும் கலைஞர் போதாமையும், இருக்கும் ஒரு சில கலைஞர்கள் அதை முழுநேரத் தொழிலாகக் கொள்ளாமையுமாகும்.

நாதம் என்பது ஓசை (Tone) யும் ஒலி (Rhythm) யும் சேர்ந்தபூரணப் பொருளையே. இந்த ஓசையும், ஒலியும் எமது உடலில் இரு நாசிகளின் வழியாகவும் செல்வதும், மீள்வதுமாயிருக்கின்றன. இதையே பிராணன் என்கிறோம். இந்த ஓசையும் ஒலியுந்தான் சுருதி, லயம் என்று பெயர் பெறுகின்றன.

நாம் பாடும்போது இந்த நாதம் வாயின் மூலமாக வருகிறது. ஆனால் புல்லாங்குழலையோ, நாகசுரத்தையோ வாசிக்கும்போது வாயினால் வெளியேறும் நாதம் கைவிரல்களினாலும் ஒழுங்குபடுத்தப்பட்டு இரு மடங்கு மெருகுடன் வெளிப்படுகிறது.

இவ்வளவு மகத்தான நாகசுர வாத்தியத்தின் மூலம் எமது இசையைப் பேணி வளர்த்து வரும் ஆத்மாக்களைப் பற்றி நாம் சிறிது சிந்திப்பது பொருத்தமாகும்.

ஏறத்தாழ சென்ற முப்பது வருடங்களாக நான் நாகசுர இசை கேட்டு வருகிறேன். ஏன்? எமது இசையை நான் நன்கு அறிந்து அனுபவிக்க வழிகாட்டியதும் இந்த நாகசுரக் கலைஞர்களே என்று கூறினால் அது மிகையாகாது.

பங்குனி மாதத் தொடக்கம், ஆவணி மாதம் வரை திருவிழாக்களும், திருமணங்களும் நடைபெறும் காலமாகும். இந்த வைபவங்களிற்தான் நாகசுர இசை முக்கிய இடம்பெறுகிறது. சென்ற ஏழெட்டு ஆண்டுகட்கு முன்புவரை இந்தியாவிலிருந்தும் நாகசுர, தவில் கலைஞர்கள் இங்கு வந்து தங்கியிருந்து உள்ளூர் நாகசுர, தவில் கலைஞர்களுடன் சேர்ந்து இசைக் கச்சேரிகள் நடாத்திவந்தார்கள். இவ்விருசாரார்களிலும் பெயர்பெற்ற கலைஞர்களிலிருந்து சாதாரண கலைஞர்

---

பத்திரிகைக்காரர்: பார்த்தீர்களா? ''தந்திகள் தபாலில் செல்கின்றன'' என்று போட்டிருக்கிறது.

எழுத்தாளர்: தாங்ஸ் சார். எனது கதைக்கு தலைப்புக் கொடுக்க மண்டையை உடைத்தேன். இதையே தலைப்பாகப் போட்டுவிடுகிறேன்... லேடஸ்ட் மாடலில்!

— சா. ரா. பா.




---

● வாய்மை ஆண்டவனின் சொத்து. அதைத் தொடர்ந்து வருபவை எவையோ அவைதாம் மனிதனுக்கு நிலையான சொத்துக்கள்.

— ஒரு மகான்

அழகுணர்வே ஆனந்தமானது.

அரிவையரின் அழகுக்கு அழகூட்டி
லக்ஷ்மிகரமாகத் திகழவைக்கும்
தனித்துவமும் தரமும் மிக்க
தங்க வைர நகைகளுக்கு



# அன்னலக்ஷ்மி நகைமாளிகை

137, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

வரை எத்தனையோ பேரின் இசையை நாம் கேட்டு வந்துள்ளோம்.

இவர்களுள் எனக்கு விபரம் தெரிந்த காலத்தி லிருந்து இதுவரை நான் கண்டு, கேட்டு அனுபவித்த கலைஞர்களுள் அதுவும் இன்று இலங்கையில் இருக்கும் கலைஞர்களைப் பற்றி மாத்திரமே இங்கு குறிப்பிட எண் ணியுள்ளேன். அப்படிக் குறிப்பிடும்போது எந்தக் கலை ஞரின் பெயராவது குறிப்பிடப்படாமல் இருப்பின், அத்தவறை மன்னிப்பதுடன், கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவது குறைகளிருப்பின் அவற்றை யும் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்,

**மாவிட்டபுரம், திரு. இராசா**

இவர் பெயர் பெற்ற பழம் பெருங் கலைஞர். எளிமையான உடை, பண்வான பேச்சு, இவற்றி னுள்ளே ஆழ்ந்த இசைஞானம் மறைந்து கிடக்கிறது; அவர் நாகசுரக் கலைக்கே ஒரு இராசா. மென்மையான வாசிப்பு; ஆனல் அதனுள்ளே பொதிந்து கிடக்கும் ஆழமோ அளவிடமுடியாதது.

**மாவிட்டபுரம், திரு. உருத்திராபதி**


இவரும் பழம்பெரும் கலைஞர்களுள் ஒருவர். வயது சென்றாலும் இளமையான தோற்றத்துடன் வாசித்து வருகிறார். காதில் கடுக்கன், அரையில் சரிகை வேட்டி சால்வை, இவற்றுடன் அமைதியான பேச்சும் நடையும் கொண்ட இவருடைய வாசிப்பும் அமைதி யானதுதான். அதை ஓரிரு முறையே கேட்டுள்ளேன். 1974-ம் ஆண்டு வல்லிபுராழ்வார் கோயிலில் இவரும் மாவிட்டபுரம் இராசாவும், இணுவில் என். ஆர். கோவிந்தசாமியும் சேர்ந்து வாசித்த பல்லவி இன்னும் என்னுடைய காதில் ஒலிக்கிறது.

**இணுவில், திரு, உருத்திராபதி**

சிறிது குட்டையான தோற்றம், தலைமயிரை அள்ளிச் செருகியபடி காணப்படும் இவர் நாகசுரத் துக்கு ஓய்வு கொடுத்துவிட்டு வயலின் இசை கற்பித் துக்கொண்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் இசைக்கொடி நாட்டிய பழைய வித்வான்களுள் இவர் ஒருவர். இவரது பெயரை நிலைநாட்ட வயலின் கலைஞரான ராதாகிருஷ்ணனைக் கலையுலகிற்கு அளித்திருக்கிறார். அவர் இவரது மகன்.

**திரு. மீனாட்சி சுந்தரம்**

இணுவில், பெரிய பழனி என்னும் பழம்பெரும் லயஞானி தவில் வாசிக்க, நாகசுரம் வாசித்த இசை ஞானி இவர். சிலகாலம் தனது ஒன்றுவிட்ட மகனை என். ஆர். கோவிந்தசாமியுடன் சேர்ந்து நாகசுரம் வாசித்தவர் இவர்.



மனைவி: ஷேக்ஸ்பியர் எழுதிய ''ரோமியோ அன்ட் ஜுலியட்'' உண்மையில் சோக மானதுதான்.

கணவன்: நீ எழுதும் வீட்டுக்கணக்கு அதிலும் சோகமானது.

— அதிமதுரம்

**திரு. அப்புலிங்கம்**

பெருமைமிக்க பழைய வித்துவான்களுள் ஒருவர். சிவந்த மேனியும், சிரித்த முகமுங் கொண்ட இவர், பல்லு விழுந்தாலும் சிங்கம் சிங்கந்தான் என்று கூறு வது போல இன்னும் வாசித்துக்கொண்டிருக்கிறார். எமது இசையில் ''பிர்க்கா'' என்று ஒரு பிரயோகம் உண்டு. ''ஒரு இராகத்துக்குரிய பல ஸ்வரங்களை ஜெட் விமான வேகத்தில் ஒரே தொடர்ச்சியாக வாசிப்பது'' என்று இதற்கு விளக்கங் கொடுக்கலாம். இவர் அதில் ஒரு மேதை. இவரைப்போல் முருகையா என்று இன்னொரு மேதை இருந்தார். 30 வருடங் கட்கு முன்பு கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் அரை மணித்தியாலத்துக்கு மேல் இவர்கள் இருவரும் ரகம் ரகமான பிர்க்காப் பிரயோகங்களை மாறி மாறி வாசித்ததை நினைவுகூரும்போது ஒரு சர்வதேச விமான நிலையத்தையே கற்பனை செய்ய முடிகிறது.

**யாழ்ப்பாணம், திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை**

நாகசுரம் மாத்திரமல்ல. கடமும் வாசிக்கும் திறமை பெற்ற இவர் இன்று இலங்கையில் வாசித் துக் கொண்டிருக்கும் நாகசுரக் கலைஞர்களுள் அதிக கற்பனைவளத்துடன் வாசிப்பவர். இராகங்களிற் புதிய வடிவங்களைக் கேட்பதாயிருந்தால் இவரிடமே கேட்க வேண்டும். திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் வாசித்த பெருமையும் இவருக்குண்டு.

**அளவெட்டி, திரு. என். கே. பத்மநாதன்**

எடுப்பான தோற்றத்துடன் காட்சியளிக்கும் இவர் இன்றைய இளங் கலைஞர்களுள் மிகப் பிரபல்ய மானவர். இவரது தெளிவான பேச்சையும் அடக்கத்

● கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைத் தேடினுல் அது கானல் நீராகிவிடும். — காந்தியடிகள்

பல்வலியைப் போக்கும்
பல்லின் வலிமையைக் கூட்டும்
பல்லினை வெண்மையாக்கும்
எல்லோரும் விரும்புவது




ஏகவிநியோகஸ்தர்கள்:

எம். ஏ. ஆர். எஸ்.

# மனுவேல் நாடார் அன் கோ.

34, செட்டியார் தெரு,
கொழும்பு-11

## எதிர்பாராத புகழ்ச்சி!

பேரறிஞர் பெர்னுட்ஷா எழுதிய நாடகம் ஒன்றில் பிரபல நடிகை ஒருவர் நடித்தார் அதைப் பார்க்க ஷாவும் சென்றிருந்தார்.

நாடகம் முடிந்ததும் நடிகையைப் பார்த்து ''பிரமாதம்—அற்புதம்'' என்று புகழ்ந்தார் ஷா.

அதைக் கேட்ட நடிகை சந்தோஷமும் பூரிப்பும் அடைந்து அடக்கத்துடன் ''உங்களுடைய இந்தப் புகழ்ச்சிக்கு நான் தகுதியானவள் இல்லை'' என்ருள்.

''உண்மைதான். நான் நாடகத்தைத்தான் புகழ்ந்தேன்'' என்ருர் ஷா.

தையும் போல வாசிப்பும் அடக்கமாகவும் சத்தமாகவும் அமைந்திருக்கும். சென்னை இசைவிழாவில் வாசித்த இலங்கைக் கலைஞர்களுள் இவரும் ஒருவர். சிறந்த வித்வானுன காலஞ்சென்ற எஸ். பீ. எம். திருநாவுக்கரசு இவரது குரு. ஏற்கெனவே இலங்கையின் சிறந்த இளங் கலைஞராக மதிக்கப்படும் இவரைப்பற்றி அதிகம் கூறவேண்டிய தேவையேயில்லை.

### இணுவில், திரு. என். ஆர். கோவிந்தசாமி

உயர்ந்த, கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் இவர் இந்தியாவிலிருந்த நாதஸ்வரமேதை அபிராமசுந்தரம்பிள்ளையிடம் குருகுல முறையில் நாகசுரம் பயின்றவர். எதையும் வெளிப்படையாகவே கூறிவிடும் அவரது பண்பைப்போலவே எடுத்த எடுப்பில் மளமளவென்று இசையம்சங்களைக் கொட்டித் தள்ளிவிடும் இவர் சாஸ்திரீய இசை, மெல்லிசை இரண்டையுமே திறமையுடன் கையாளும் ஒருவர். இவரைப் போல ஜெட் வேகத்தில் வாசிக்கும் நாகசுரக் கலைஞர்கள் இங்கு இல்லையென்றே கூறலாம். சுருதியிலும் ஒரே கண்ணுக இருக்கும் இவர் மல்லாரி வாசிப்பதில் தனக்கேயுரிய தனித்திறமை பெற்றுள்ளார். இலைமறை காயாக வாழும் கலைஞர்களுள் இவரும் ஒருவர்.

### அளவெட்டி, திரு. எம். பீ. பாலகிருஷ்ணன்

எடுப்பான தோற்றம் கொண்ட இவர் திரு. என். கே. பத்மநாதனுடன் சேர்ந்து சிலகாலம் வாசித்தவர். தனக்கென ஒரு பாணியை வகுத்து வாசிக்கும் இவரிடம் இராகங்கள் தனிப்பொலிவு பெற்று வெளிவரும். நிறைந்த ஞானம் அவரது வாசிப்பில் தெற்றெனத் தெரிகிறது.

### சாவகச்சேரி, திரு. எஸ். பஞ்சாபிகேசன்

மெலிந்த உடலுடன் தோற்றமளிக்கும் இந்த நடுத்தர வயதுக் கலைஞர், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்கும் நடை, உடை, பாவனைகளைக் கொண்டவர். சுகமான வாசிப்பு இவருடையது.

### இணுவில், திரு. சுந்தரமூர்த்தி

ஓரிரு முறைகளே இவரது வாசிப்பைக் கேட்டுள்ளேன். விறுவிறுப்பு மிக்க இவரது வாசிப்பில் கீர்த்தனைகள் எல்லாம் புது மெருகும் அழகும் பெறுகின்றன.

### இணுவில், திரு. கந்தசாமி

மிக மெலிந்த தோற்றங் கொண்ட இவரின் வாசிப்பு இனிமையானது. ''பாவம்'' அப்படியே தொனிக்கும் இவரது வாசிப்பைப் பலகாலமாகக் கேட்கமுடியவில்லை. தூண்டுகோலில்லாத சுடர்விளக்குகளில் இவரும் ஒருவர்.

### கோண்டாவில், திரு. ஏ. பாலகிருஷ்ணன்

இளமையான தோற்றங் கொண்ட இவர் காலஞ்சென்ற வித்வான் முருகையா, தவில் வித்துவான் வலங்கைமான் சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரர். இவர் இந்தியாவில் இசை பயின்றவர். இராகம், பல்லவி எல்லாம் இவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. விறுவிறுப்பான வாசிப்பு இவருடையது.

### திரு. எம். எஸ். சண்முகநாதன்

நல்ல பல கலைஞர்கள் மறைவாகவே வாழ்கிருர்கள் என்பதற்கு இவரும் ஒரு உதாரணம். கீர்த்தனைகளையெல்லாம் புது மெருகுடன் வாசிக்கும் இவரின் இசையைப் பலகாலமாகக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.



வட்டிக்கடை முதலாளி: கமலம்... மருமகன் தேர்தலில் போட்டியிடுகிற யோசனைபோல... அப்படியாயின் நான் ஊருக்குக் கொடுத்த கடனும் போச்சு... வட்டியும் போச்சு!

**கோண்டாவில், திரு. இராம மூர்த்தி**

யாழ்ப்பாணத்து இரசிகர்களுக்குக் கிட்டாத இக்கலைஞரை மட்டக்களப்பு நன்கு பயன் படுத்துகிறது.

**திரு. இராசதுரை**

இவரைப் பல்லவி இராசதுரை என்று கூறுவார்கள். பல்லவியிலுள்ள நுணுக்கமான அம்சங்களையெல்லாம் வெகு லாவகமாக வாசிப்பார். இவரும் ஒரு குடத்திலிட்ட தீபமே.

**திரு. கானமூர்த்தி,**
**திரு. பஞ்சமூர்த்தி**

காலஞ்சென்ற நாகசுரமேதை இணுவில் கோதண்டபாணியின் புதல்வர்களான இவர்களிடம் திறமை வளர்கிறது.

**திரு. சுப்புசாமி**

இந்தியாவில் என். ஆர். கோவிந்தசாமியுடன் அதே குருவிடம் இசை பயின்ற இவர் நன்ருக வாசிக்கிருர். இவரைக் கலையுலகம் நன்கு பயன்படுத்தவேண்டும்.

**கொழும்பு, திரு. பி. கந்தசாமி**

நடுத்தர வயதினரான இவர் நன்கு வாசிக்கும் கலைஞர். இவரது வானொலிக் கச்சேரிகள் பல, நன்கு அமைவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

**திரு. கேதீஸ்வரன்**

திரு. என். கே. பத்மநாதனுடன்சேர்ந்து வாசிக்கும் இவருக்கு ஒரு நல்ல எதிர்காலமுண்டு.

**திரு. சின்னப்பழனி**

பெயர்பெற்ற பழைய தவில் கலைஞர். வயது சென்றாலும் சின்னவராகவே தோற்றமளிப்பது போல் இவரது வாசிப்பில் இன்னும் இளமை மணம் கமழ்கிறது.



இன்னும் இரண்டு வருஷத்திற்கு உங்களுக்குக் காலம் சரியில்லை... சுவீப் டிக்கட் எடுத்தால் ஆறுதல் பரிசுகூடக் கிடைக்காது.

தேர்தலில் நிற்கலாமென்று பார்த்தன்... கட்டுக் காசும் கிடைக்காது போல!

— மோகனம்

**நாச்சிமார்கோவிலடி,**
**திரு. எம். கே. கணேசன்**

தவில் வாத்தியத்தில் இன்று பிரபல்யமாயிருக்கும் கலைஞர்களுள் இவர் ஒருவர். கணேசப் பெருமானைப் போன்று சற்றே தொந்தியுடன் காணப்படும் இவரின் வாசிப்பு நிதானமானது. லயக் கட்டுப்பாடு நிரம்பவும் உண்டு. இவர் இந்தியாவில் பல கச்சேரிகளில் வாசித்துள்ளார். ஈழத்துக் கலைஞர்களுக்குப் பெருமை தேடித் தந்தவர்களுள் இவரும் ஒருவர்.

**இணுவில், திரு. என். ஆர் சின்னராசா**

பெயர்தான் சின்னராசா. ஆனல் அவர் தோற்றத்தில் பெரியராசா. சற்று விறுவிறுப்பான இவரது தவில் வாசிப்பில் கற்பனை நிரம்ப உண்டு. இவரும் இந்தியாவில் பல கச்சேரிகளில் வாசித்து ஈழத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர். நாகசுரக் கலைஞர் என். ஆர். கோவிந்தசாமியின் சகோதரர்.

**இணுவில், திரு. புண்ணிய மூர்த்தி**

இளைஞராயினும் புத்திசாலி. நிரம்பிய திறமைமிக்க தவில் கலைஞர் இவர். நாகசுரக் கலைஞர் சுந்தரமூர்த்தியின் சகோதரர்.

**திரு எஸ். வீ, பெரியசாமி**

மெலிந்த தேகமுடைய இத் தவில் கலைஞர் ஒரு பொல்லாத பேர்வழி. எந்த வித்வானுடனும் ஈடு கொடுத்து வாசிக்கும் திறமையுண்டு.

**கைதடி, திரு. பழனிமலை**

இவரும் ஒரு குடத்திலிட்ட தீபம். மிகத் திறமைமிக்க தவில் கலைஞராயிருப்பினும் அவருக்குச் சந்தர்ப்பங்கள் அளிக்காது விட்டது ரசிகர்களான எமக்குத்தான் நட்டம்.

**யாழ்ப்பாணம், திரு. பி.எஸ். ராஜகோபால்**

நாகசுர வித்வான் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளையின் சகோதரரான இவர் திறமையான தவில் வித்வான். இலைமறை காயாகவே வாழ்கிருர்.

**இணுவில், திரு. வீராச்சாமி**

இளைஞர். எடுத்துக்கொண்ட அம்சத்தை அப்படியே தத்ரூபமாக வாசிக்கும் திறமையுள்ளவர்.

ஓர் உண்மையான மக்கள் கலையான இந்நாகசுரக் கலையை மேலும் ஊக்குவித்து ஆதரவளிப்பது ஒவ்வொரு கலாரசிகனதும் கடமையாகும்.

*

---

உன்னுடைய சிறுகதைக்கு கரு எப்படிக் கிடைத்தது?

என் மனைவி சொன்ன இரகசியத்திலிருந்து!

---

# சத்தியத்தின் தரிசன வாயிலில்..

வ. இராமுவேல்

நீதிமன்றத்திலே கூட்டம் நிரம்பி வழிந்தது! மீரிபெத்தை தோட்டத்துத் தொழிலாளர்கள் மாத்திரமன்றி அதனைச் சூழ்ந்திருந்த ஏனைய தோட்டத்துத் தொழிலாளர்களும் நீதிமன்றத்தை முறறுக்கையிட்டிருந்தார்கள்.

முத்தையனுக்கு இன்றுதான் தீர்ப்பு. கடந்த மூன்று வருடங்களாகவே எதிர்பார்த்திருந்த தீர்ப்பு தவணை என்ற போர்வையில் இழுத்தடிக்கப்பட்டு இன்றுதான் முடிவாகப்போகின்றது.

முத்தையன் சாட்சிக்கூண்டில் நின்றவாறு தன்னைச் சூழக் குழுமியிருக்கும் மக்களை ஒருமுறை பார்க்கிறான். அவனுக்கு எல்லாமே புதுமையாகவும் வேடிக்கையாகவும்தோன்றுகின்றன. அவன் எதிர்பார்த்திருந்த தண்டனை தானே கிடைக்கப்போகிறது, பிறகு அதைப் பற்றிக் கவலைப் படுவானேன்?

ஓங்கிய பெருமூச்சு ஒன்று நெஞ்சை நிமிர்த்தி வெளிப்படுகிறது. நெஞ்சுக்கூடு இலேசாக வலிப்பதை உணர்ந்து, நெஞ்சைத் தொட்டுத் தடவிப் பார்க்கிறான்.

நேற்று அந்த ‘ஜெயில்கார்ட்’ அடித்த அடியும், உதைத்த உதையும் மறக்கமுடியாதுதான்! சும்மா சொல்லப்படாது. சோம்பித் தனிமையிலிருந்த முத்தையனை வலிய வம்புக்கிழுத்தது ஆயுள் கைதியான பிடரன்தான். எதையெல்லாமோ பிடரன் சொன்னான். முத்தையனும் பொறுத்துத்தான் பார்த்தான். ஆனால் தன் தாயின் பெயரை ஒரு அசிங்கமான வார்த்தையுடன் இணைத்துக் கூறியபோதுதான் அவனால் தாங்கமுடியவில்லை. பிடரனைப் பந்தாடியே விட்டான். காவலன் விடுவானா? நியாயத்தைக் கேட்பானா? சமயத்தைச் சாதகமாக்கி முத்தையனை நையப் புடைத்துவிட்டான்.

பெருமூச்சு ஓய்கிறது. குற்றவாளிக்கூண்டுக்குள் நின்றுகொண்டிருக்கும் முத்தையனால் தன்னை சுற்றபாளி என்று நினைக்கமுடியவில்லை. பணமிருந்தால் அவனால் அந்த நினைவோடு இருந்திருக்க முடியும். ஆனால் குணங்கெட்ட மனைவியால் இன்று குற்றவாளியாகிவிட்டோமே என்று வேதனை அடைவதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. வேதனை விழிகளை நனைக்கிறது.

குற்றவாளி...! குற்றவாளி என்றால் அவனும் மனிதன் தானே! என்னை மனித இனத்திலிருந்து விலக்கித்தானே பார்க்கிறார்கள். மனிதனாகப் ப்ார்த்தால் என்ன! மூன்று வருடங்களாக என்னை ஒரு மனிதன் என்பதை விடக் கீழான ஒரு மிருகமாகத்தானே நடத்தினார்கள். மனிதன் என்று சொல்லிக்கொள்ளும் மனிதத் தன்மையற்ற — மனித மிருகங்களால் கேவலமாக நடாத்தப்பட்டேன். ஏன்? காமவெறி கொண்ட ஒரு மிருகத்தை அசுரவெறி கொண்டு தாக்கினேன். அவன் இறந்து போனான். நான் ‘கொலைகாரன்’ எனப் பெயர் சூட்டப்பட்டேன்.

அதோ நிற்கிறாளே! அவள்தான் என்னுடைய மனைவி மீனாட்சி. ஆமாம்; சமூகம் தந்த கணிப்பின்படி என்னுடையமனைவிதான்! ஊரறிய திருமணம் என்ற போர்வையின்கீழ் கைபபிடித்துக் கணவன்-மனைவி என்ற கட்டுக் கோப்புக்குள் இன்பமாகத்தான் காலத்தைக் கழித்தோம். ஆனால் அவள் இப்படி என்னை ஏமாற்றுவாள் என்று கனவிலும் நினைக்கவில்லையே! பாவி என்னோடு எப்படிப் பேசி நடித்தாள்...!

கட்டிய கணவனிருக்க...... எவன் எவனோடையெல்லாம்......... ஐயோ... அதை எப்படி என்னால் சொல்லமுடியும்? செய்வதையும் செய்துவிட்டு இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கிறாள். நீ கண்ணீர் வடிக்கவேண்டியவள், வடித்துத்தான் தீரவேண்டும். கள்ளப் புருஷன் வைத்திருந்து கணவன் கண்டுவிட்டால் கண்ணீர் வடிக்கத்தான் வேண்டுமா? கணவனுக்குத் துரோகம செய்தவள் மனைவி என்ற ஸ்தானத்திலிருக்க அருகதையற்றவள். நான் கொஞ்சம் படித்தவன், தொழிலாளி ஆகிவிட்டதனால் சிந்தனை மழுங்கிவிடுமா? என்ன?

முத்தையன் நிமிர்ந்து தன் மனைவியைப் பார்க்கிறான். அவனால் அவளை ஒரு கணம் கூடப் பார்க்கமுடியவில்லை. அவள் கண்களில் கண்ணீர் முட்டிநிற்கிறது, அழுது வீங்கிய கன்னங்களும், வாடிய உடலுமாக நின்றிருக்கும் அவளுக்கும் அவனுக்கும் இடைவெளி நீண்டுவிட்டது. எவ்வளவுதான் திடமான இதயமிருந்தாலும் கொஞ்சமேனும் மனதை இளகச் செய்யும் தோற்றம் அவளுடையது. முத்தையனுக்குச் சிறிது தடுமாற்றம் ஏற்பட்டது. ஏனோ அவன் மனம் பின்னோக்கிச் சுழன்றது.

அதோ தெரிகிறதே கூட்டமாக லயங்கள். ஆமாம்; மேற்கும் பக்கமா தனித்து இருக்கிறதே ஒரு லயம். அதுதான் மேட்டு லயம். அங்குதான் தொங்கல் தொங்கல் காம்பராவில். இல்லை

சிரிப்பொலியினூடே
சிந்தனை அம்சங்களைத்
தூண்டிவிடும்
சித்திரச் சஞ்சிகை

சிரித்திரனின்
சீரியபணி மென்மேலும்
சிறக்க வாழ்த்துகிறோம்.

# கே. கே. எஸ். ஸ்ரோர்ஸ்

181, டாம் வீதி, — கொழும்பு-12.

தொலைபேசி: 42802

## வீராங்கனை
## இந்திரா காந்தி

"இரகசியமாகப் பயத்துடன் எதையும்செய்யாதே. இந்தியாவின் துணிச்சல் மிகுந்த வீராங்கனைகளில் நீ ஒருத்தியாக விளங்கவேண்டுமென்பதே என் ஆசை" இந்திரா காந்தியின் பதின்மூன்றுவது பிறந்தநாளுக்கு நயினி சிறைச்சாலையிலிருந்து ஜவஹர்லால் நேரு எழுதிய வாழ்த்துக் கடிதத்தின் ஒரு பகுதியே இது.

கலகங்களுக்கோ கலவரங்களுக்கோ இந்திராகாந்தி பயப்படுவதில்லை. சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் நடுடில்லியில் கலகம் ஏற்பட்ட சமயங்களில் தனியே அங்கே போய்ச் சமாளித்திருக்கிறார். நாகலாந்தில் மீஜோக்களின் கலகக் கூட்டங்களைத் தானே போய்ப் பார்த்து அடக்கியிருக்கிறார். பாகிஸ்தான் போரில் போர்முனைக்குப் போய் ராணுவத்தை உற்சாகப்படுத்தி வந்திருக்கிறார். 1971-ல் புவனேஸ்வர் தேர்தல் கூட்டத்தில் அவர் முகத்தில் கல்லடி பட்டபோது மூக்கால் இரத்தம் பெருக்கெடுக்க கைக்குட்டையால் மூடியபடி சிறிதும் கலங்காமல் "இதற்கெல்லாம் நான் அஞ்சமாட்டேன்" என வீர கர்ஜனை செய்தார்.

இன்று இந்திராகாந்தி தந்தையின் விருப்பப்படியே வீராங்கனையாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

தொங்கல் கொடாப்பில் முத்தையனும் மனைவி மீனாட்சியும் குடியிருந்தார்கள்,

பணிய லயத்தில் பெற்றோருடன் இருந்தவன், கல்யாணம் செய்துவிட்டதினால் துரையுடன் மன்றாடி வீடுகேட்டு, ராமசாமிக் கங்காணி ஊருக்கு—இந்தியாவிற்குச் சென்றதும் மேட்டு லயத்திற்கு வந்து குடியேறிவிட்டான். பெற்றோருடன் இருந்தமட்டில் அவனுக்குப் பொறுப்புகள் அதிகமில்லைத்தான். மனைவியின் தலையணை மந்திரத்திற்கு தலைசாய்த்து தனிவீடு, தனிக்குடித்தனம் என ஆரம்பித்ததும் தேவையில்லாத உறவுகள், பொறுப்புகள், பிரச்சினைகள் அதிகரித்தன,

திருமணம் செய்த புதிதில் வந்ததும் பின்னிரவில்தான் வேலை தொடங்குவார்கள். ஆட்கள் பற்றாத, ஆமாம் கொழுந்து அதிகமாக வளரும் நாட்களில் அதிகமாக இலை அடிப்பதற்கு ஆட்கள் தேவைப்படுவார்கள். அப்போதெல்லாம் காவற்காரன் வந்து ஆட்களை அழைத்துப்போவான். இரவெல்லாம்விழித்திருந்து வேலை செய்து பகலில்தான் வீடு திரும்புவான் முத்தையன். பகலிலும் நித்திரை செய்தாகவேண்டும். இரவிலும் வேலைக்குப்போகவேண்டும். அவள் பகல் வேளையில் கொழுந்து மலைக்குப் போய்விடுவாள். நிம்மதியில்லாத வாழ்க்கை வாழ்ந்த முத்தையனுக்கு மனைவியோடு இணைந்து இல்லற சுகத்தை அனுபவிக்க நேரம் கிடைக்கவில்லை என்பதும் உண்மைதான்!



யோவ்... ஏனய்யா அந்தப் பச்சைச் சாரி அணிந்த பெண்ணைக் கண்டிட்டு விசில் அடித்தீங்க?

மன்னிக்கணும்... நான் ஸ்டேசன் மாஸ்டர். பழக்க தோஷத்தில் அப்படிச் செய்திட்டன்.

— மோகனம்.

தனிமை தந்த சுகத்தால் மீனாட்சியும் ஒழுங்காகத்தான் குடும்பம் நடத்தினாள், பீலிக் கரையிலே பல கேலிக் கதைகளில் கொழுந்துக் காட்டிலே பல குமர்களின் சேர்க்கையில் இன்பமாகக் கூத்தும் கும்மாளமும் போட்டாள்.

முத்தையன் தொழிற்சாலையில் தான் வேலை செய்தான். உத்தியோகம் பார்க்கவில்லை. இரவில் தொழிற்சாலையில் படுத்திருந்து பச்சைக் கொழுந்திற்கு 'வாட்டம்' வந்ததும் கொழுந்தடிப்பது தான் அவன் வேலை. சக தொழிலாளர்களுடன் இரவு பத்து மணியளவில் ஸ்டோருக்குப் போய் விடுவான். சரியான 'வாட்டம்,

"இந்த வேலையை விட்டிட்டு வேற வேலையைக் கேளுங்க, உடம்புக்கு ஒத்துவராத வேலையை ஏன் செய்யுரீங்க?"—இதையே மீனாட்சியும் நாள் தவறாமல் கூறிப் பார்த்தாள். முத்தையனுக்கும் விருப்பமில்லாமல் இல்லை. ஆனால் அவன் கேட்டவுடன் துரையும் வேலையை மாற்றியா கொடுத்து விடுவார்? வசதிப்படவில்லை என்று வேலையை எப்படி விடமுடியும்? ஆனால் சில நாட்கள் மனைவியின் அன்புத் தொல்லைகளுக்காகவே அழைக்கவந்த காவற்காரனையும் அசட்டை செய்துவிட்டு, வேலைக்குப் போகாமலும் இருந்திருக்கிறான். அப்படி எத்தனை நாளைக்


● மூக்குக் கண்ணாடியைத் துடைக்க மறந்த நீ உலகம் அழுக்கானது என்று அலட்டாதே.

குத்தான் இருக்கமுடியும்? வருடங்கள் ஓடி மறைந்தன. தன் மனைவியிடமிருந்துஒன்றை அவன் எதிர் பார்த்தான். அவளில் இல்லாத மாற்றம் — குழந்தை இல்லாத ஏக்கம் அவனை வாட்டினலும் காட்டிக்கொள்ளாமல் வேலைக்குப் போய்க்கொண்டுதானிருந்தான்.

இன்பம் விழிக்கின்ற இரவு வேளைகளில், கரம் தொட்டுத் தாலி கட்டிய மனைவியைக் காம்பராவில் விட்டு வேலைக்குப் போய்க்கொண்டிருந்தவனல் விழித்துக்கொண்டிருக்கும் இளமைக் கனவுகளுக்கு இரைதேட முடியவில்லை. அவன் மட்டுமா......? அவனுக்குவாழ்க்கைப்பட்டஅவள் நிலை......! அவள்தான் என்ன செய்வாள். அவள் இளமை அவனைக் கேலி செய்தது.

ஒரு நாள்! முத்தையன் தோட்டத்திலுள்ள மாட்டுக் கொட்டிலில் நின்றுகொண்டிருந்தான். வேலியோரத்திலிருந்து வந்த பேச்சுக்குரல் அவன் காதுகளைக் கூர்மையாக்கின,

''பாக்கியம், கேட்டியாடி கதையை... அந்தத்தொங்கவூட்டு முத்தையாண்ணே இருக்கில்லே... அது ராவுல பொம்புளைய தனியா வச்சிட்டுப் போயிடுது. அவ என்



அரசியல்வாதி ஏனப்பா... இப்படியெல்லாம் பணத்தைக் குடியில் கொட்டுகிறீர்?

குடிகாரன்: உங்கள் அரசியலை மறந்திருக்க!

னடான்னு... ஐயோ... அவ பொம்பளையா? அந்த அக்கிரமத்தை ஏன்டி கேக்கிரே''

''என்னக்கா நடந்திடுச்சு மீனுட்சி நல்லாத்தானேஇருந்தா? பாவம்! கொழந்தை குட்டி இல்லாதவளாச்சே!''

''ஒனக்கென்னடி தெரியும்? இந்த லயமே கதையாக் கதைக்கிது. நான் அப்பவே நெனைச்சேன். அவ முழிக்கிற முழியே சரியில்லேண்ணு... அது சரியாத்தான் போச்சு''

''என்னக்கா நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறே... கதையைச் சொல்லாமே! என்னதான் நடந்திடுச்சுன்னு சொல்லேன்''

''இவ யாருடி ஒன்னும் வெளங்காதவ... நம்ப சந்தசாமி தான். அவன் கொஞ்சம் படிச்சவந்தானே? புத்தி இப்படியா போகணும்? அடிக்கடி அந்தப்பக்கம் போறுனும், சந்தேகப்படுற மாதிரி நடந்துக்கிறுனும். அண்ணைக்குக்கூட மாரித்தாத்தா ராவுல வெளியே எந்திரிச்சு வாரப்போ இவன் அந்த வூட்டுக்குள்ளேயிருந்து வெளியே வந்தானும். இதெல்லாம் நல்லதுக்கு இல்லே. காலங் கெட்டுக் கரைச்சான் காவடி எடுக்குதுபோலே!''

முத்தையன் இதைக் கேட்டதும் அவன் இரத்தம் கொதித்தது. உடல் வியர்த்தது. தசைநாரெல்லாம் கிளர்ந்தெழுந்தன. அடிப்பாவி... சும்மா கெடந்த வாயிக்கெல்லாம் வெத்திலே பாக்கையில்லையா கொடுத்துட்டாள். இது எங்கே போய் முடியுமோ? முத்தையன் சிந்தித்தான். சிந்தனையின் எல்லைக்கோட்டிலே அவனுக்கொரு எண்ணம் தலைப்பட்டது. அந்த முடிவான எண்ணத்

## கழுதையின் சிந்தனை!

**(ரஷ்யக் குட்டிக் கதை)**

முன்னொரு காலத்தில் காட்டு ராஜாவான சிங்கம், தன் ராஜ்யத்தைச் சுற்றிவந்தது. அப்பொழுது ஒரு நீரோடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஓடையைத் தாண்ட சிங்கம் விரும்பியது. ஆனல் ஓடை மிக அகலமாக இருந்தது. சிங்கத்திற்குக் கோபம் தாங்கமுடியவில்லை. அது கர்ஜனை செய்தது. அதைக் கேட்டு கரடி, கழுதை, எருமை, நரி, முயல், ஆடு, மான் முதலிய மிருகங்கள் எல்லாம் ஓடிவந்தன.

''இங்கு ஒரு பாலம் கட்டுங்கள்'' என்று சிங்கம் உத்தரவிட்டது.

''உடனே வேலையைத் தொடங்குங்கள். நரிதான் மேஸ்திரி. கரடி, கழுதை முதலிய நீங்கள் எல்லோரும் செங்கற்களையும், இரும்புத்தூண்களையும், பலகைகளையும் இழுத்துவர வேண்டும்.''

இவ்வாறு சிங்கம் உத்தரவிட்டபோதிலும் கழுதை அசையாமல் நின்றுகொண்டிருந்தது. அது சிந்தனையில் மூழ்கியிருந்தது.

''நீ ஏன் சும்மா நின்றுகொண்டிருக்கிறாய்?'' என்று சிங்கம் சீறியது.

''மகாராஜா! நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.''

''என்ன சிந்தனை?''

''இந்த ஓடைக்குக் குறுக்கே நாம் ஏன் பாலம் கட்டவேண்டும்? அதை ஒரு பக்கத்தில் கட்டினல், வேலை மிகச் சுலபமாக முடியுமல்லவா?''

தோடு வீட்டுக்குப் போய்விட்டான்.

அன்றிரவு எல்லோருடனும் சேர்ந்தே அவனும் இரவு வேலைக்குப் போனான். மனதில் நிம்மதியே இல்லை. ஏதோ ஒன்று சதா மனதை அரித்துக்கொண்டேயிருந்தது. ''யாரு வாயை மூடினாலும் ஊரு வாயை மூட முடியாதடி'' முணுமுணுத்தவாறு நிம்மதியின்றி அலைக்கழிந்தான். கரத்தாடிக் காம்பராவிலிருந்து வரும் இதமான சூடான காற்றில் தம்மை மறந்து இரவு வேலையாட்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஆள் வந்து எழுப்பும்வரை நிம்மதியாகத் தூங்கலாம்.

மணி பன்னிரெண்டென்பதை அங்கு தொங்கும் பெரிய இரும்புத்துண்டில் ''டாண்...... டாண்...'' என பன்னிரெண்டு முறை அடித்துப் பறை சாற்றிவிட்டு, காவற்காரன் போய்விட்டான், முத்தையன் புரண்டும் படுத்துப் பார்த்தான். தூக்கம் பிடிக்கவில்லை. இன்னும் கொழுந்திற்கு 'வாட்டம்' வரவில்லை. எழுந்து போர்வையைப் போர்த்திக்கொண்டு சில்லிட்ட குளிரில் வெளியே வந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டான். ஸ்டோரிலிருந்து சற்றேறக்குறைய அரை மைல் தூரத்தில்தான் அவனுடைய லயமிருந்தது.

லயக்கோடியில் வந்துநின்ற முத்தையன் லயத்தை ஒருமுறை சந்தேகக் கண்களுடன் பார்த்தான். ஆமாம்; அப்படிப் பார்க்கவேண்டிய ஒரு நிலை அவனுக்கேற்பட்டது. இந்த லயத்தில் இப்படியும் நடக்கின்றதா? இதை நினைத்தபோது முகம் கோபத்தால சிவந்தது. ஒரு முடிவுக்கு வந்தவனாய் வீட்டுக் கோடியில் அமர்ந்துவிட்டான். ''உள்ளே அவன் போயிருந்தால் நிச்சயம் வெளியே வரத்தானே வேண்டும், அப்போது பார்த்துக்கொள்ளலாம்.'' அவன் அமைதியாக வீற்றிருந்தான்.

முத்தையன் இருட்டில் அமர்ந்திருந்தான். நிசப்தமான அந்த இரவில் அவன் வெளிச்சத்தை எதிர்பார்க்கின்றானா? அவனுடைய நல்ல மனமும், பொறுமையான குணமும் அவர்களுடைய இன்பத்தைத் தடைசெய்ய விரும்பவில்லைப்போலும்! அவன் எதையோ எதிர்பார்த்தான். அது அவன் மனைவிமேல் அவன் வைத்திருந்த நம்பிக்கையாகவும் இருக்கலாம்.



எங்க மகன் ''பொடிகார்ட்'' உத்தியோகத்திற்குத்தான் லாயக்.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

நாலாம் வீட்டு நாகேஸ்வரியைப் பாடசாலைக்குக் கூட்டிக்கொண்டு போறானென்றும் பாடசாலை முடியக் கூட்டிக்கொண்டு வாறானென்றும் ஊர் பேசுது!

கதவு மெல்லத் திறந்தது. முத்தையன் உஷாரானான். சதவைத் திறந்துகொண்டு வெளியே வருவது யார்? ஆமாம்; அது கந்தசாமிதான்! சந்தேகமேயில்லை. மீனாட்சி அவனை அனுப்பிவிட்டு கதவைத் தாழிட்டாள். முத்தையனுக்கு மனம் கொதித்தது. தயாராக வைத்திருந்த பெரியதொரு இரும்புக் கம்பியால் கந்தசாமியின் பின்னால் சென்று தலையிலே அடித்தான். மாறி மாறி வெறி தீர. சினம் தீர அடித்தான். கந்தசாமியின் அலறலோடு அவன் கதை முடிந்தது. ஆனால் தூங்கிக்கொண்டிருந்த லயம் விழித்துக்கொண்டது.

•

நீதிபதியின் குரல் கேட்டு முத்தையன் நிமிர்ந்தான். அவனைப் பார்த்து நீதிமன்றமே சிரிப்பதுபோலிருந்தது. தீர்ப்பு வாசிக்கப்பட்டது. ''முத்தையன் தன்னுடைய மனைவி மீனாட்சிக்கும், கந்தசாமிக்குமிடையில் தவறான நட்பு இருப்பதாகச் சந்தேகித்து ஆத்திரத்தில் அவனைக் கொலை செய்திருக்கிறான். தகுந்த சாட்சியங்களின் மூலம் முத்தையன் குற்றவாளியாகக் கருதப்படுகிறான். எனவே முத்தையனுக்கு பத்து வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கிறேன்'' நீதிபதி எழுந்து போய்விட்டார். முத்தையன் சிலையாக நின்றான்.

சட்டத்தின் இரும்புக் கரங்களில் அவன் குற்றவாளி. சத்தியத்தின் தரிசன வாயிலில் குற்றவாளி யார்? அவனா? அவன் மனைவி மீனாட்சியா? அல்லது அவர்கள் இருவரும் இணைந்து இளமையைப் பகிர்ந்து ருசிக்க முடியாத அவல வாழ்க்கைக்காளாக்கிய சமூக அமைப்பா?

முத்தையனுக்குத் தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் மீனாட்சி வீறிட்டுக் கத்தினாள். அடுத்த கணம் மூர்ச்சித்து நெடுமரமாய்க் கீழே சாய்ந்தாள்.

(யாவும் கற்பனை)

WITH THE BEST COMPLIMENTS FROM

**MERCANTILE CORPORATION LIMITED**

Suppliers of

CONCENTRATED LATEX AND MAKERS OF
"SLEEP-EZE"
RUBBERISED FIBRE MATTRESSES AND CUSHIONS

No. 263, Sea Street,
P. O. BOX 440
COLOMBO-11.

Telephone; 31913-6

Telegrams- "PRODUCE"

SHOWROOM AT

**N. K. Kaliappa Pillai & Company**

No. 234, Main Street,
COLOMBO-11
Telephone; 25618

★ பரிசுபெற்ற சிறுகதை

# கறுத்தக் கொழும்பான் மகிமைதான் என்னே!

பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட அந்த மணிமண்டபம் மின்சார ஒளியால் துலங்கிக்கொண்டிருக்கின்றது. அம்மண்டபத்தின் இருபுறமும் தேவர்கள் நின்று துதிபாடிக்கொண்டிருக்கின்றார்கள். நேரம் செல்லச் செல்ல அவர்களின் கான இசை உச்சக்கட்டத்தைஅடைந்துகொண்டிருக்கின்றது. எல்லோரது பார்வையும் வழமையாகச் சிவன் அமர்ந்திருக்கும் பளிங்கு மண்டபத்தின் மீது படிந்திருந்தது. திடீரென ஓர் மின்னல் தோன்றி மறைந்தது. விஸ்வரூபத்துடன் சிவன் உமாதேவியாருடன் காட்சி தந்தார். அவ்வரிய காட்சியைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் புகழ்பாடி மகிழ்ந்துகொண்டிருந்தனர். இவ்வேளை அங்கே காட்சி தந்தார் நாரதர். அவரைக் கண்ட அனைவரும் திகைத்து நின்றனர். இங்கே ஓர் கலகம் நடைபெறப்போகின்றதே என அஞ்சினர்.

தான் கொண்டுவந்த ஓர் பழத்தைச் சிவனிடம் கொடுத்த நாரதர் ''இறைவா இப்பழத்தை முழுமையாக உண்டவருக்கு அழிவே கிடையாது. ஆகவே தங்களின் புத்திரர் ஒருவருக்கு இதைக் கொடுக்கவும்'' என்றபடி விஷமப் புன்னகையுடன் பிள்ளையாரையும் முருகனையும் மாறிமாறிப் பார்த்தார். நாரதரின் எண்ணத்தை உணர்ந்த சிவன்; தன் புத்திரர்கள் இருவரையும் அருகே அழைத்து ''உங்களில் யார் இந்த உலகை முதலில் சுற்றி வருகின்றீர்களோ அவர்களுக்கே இப்பழம் உரியது" என்று ஓர் நிபந்தனையை உருவாக்கினார்.

இதைக்கேட்ட முருகன் தனது மயில்வாகனத்தைப் பெருமையுடன் ஓர் தட்டு தட்டியபடி அதன்மேல் ஏறியமர்ந்துகொண்டு உலகை வலம் வரத் தொடங்கினார். பிள்ளையாரோ பாவம்... தானே ஓரளவு உருப்படியானவன். அதோடு தனது வாகனமான பெருச்சாளியோ பிரயாணத்திற்குத் தகுந்ததல்ல என்பதைச் சிந்தித்து உணர்ந்துகொண்டார். ஆனாலும் அப்பழத்தை எப்படியாவது பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தன் அறைக்குள் சென்று தனது சாக்குக் கட்டிலில் படுத்தபடி சிந்திக்கத் தொடங்கினார்.

சிவனால் கொடுக்சப்பட்ட கனியை முன் அறையில் இருந்த குளிர் சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு வெளியேறினார் உமாதேவியார். இதை மறைந்து நின்று கவனித்த பிள்ளையாரினது வாகனமான பெருச்சாளி மெதுவாகச் சென்று தன் பசியைப் போக்கிக்கொண்டது.

படுக்கையிலிருந்தவண்ணம் சிந்தித்த பிள்ளையார் திகைத்து எழுந்தார். அவருக்கு ஓர் வழி புலனாகியிருந்தது. ''உலகை உருள வைப்பவரும், மனிதர்களை உருவாக்குபவரும் எனது பெற்றோரே! ஆகவே அவர்களைச் சுற்றி வந்தால் உலகையே சுற்றியதற்குச் சமமல்லவா!'' என்ற எண்ணத்துடன் ஓடிச் சென்று தாய் தந்தையைச் சுற்றி வணங்கினார். தம்மை வணங்கும்படி கூறினால் கூட வணங்காத பிள்ளையார் இன்று ஓடியோடி வணங்குவதைக் கண்ட சிவன் மனமகிழ்ந்து அந்தப் பழத்தைப் பிள்ளையாரிடம் கொடுக்கும்படி பணித்தார்.

விரைந்துசென்ற உமாதேவியார் பதறிப்போனார். பழத்தைத் தான் பெருச்சாளி தின்றுவிட்டிருந்ததே! சிவனிடம் நிலையை விளக்கினார். இதைக்கேட்ட பிள்ளையார் கொதித்தெழுந்தார். தன்னை வஞ்சித்துவிட்டதாகப் பெற்றோர்கள் மீது வசை பாடினார். அழுது புலம்பினார். பழம் தரும் வரை பெற்றோர்கள் முன்னிலையில் வரப்போவதில்லை எனக் கூறி, தன் அறையில் சென்று கதவைப் பூட்டியபின் கட்டிலில் விழுந்து கதறியழுதார். பெருச்சாளி தானும் கவலையுடன் அழுதது. இதைக் கண்ட பிள்ளையாருக்குக் கோபம் பன்மடங்காகப் பெருகியது. ஓடிச்சென்று பெருச்சாளியை ஆத்திரம் தீருமட்டும் அடித்தார். ''நான் விரும்பிய பழத்தை எனக்கு முன் திட்டம் தீட்டி பறித்த வில்லன் நீ. இனி என் கண்முன்னே விழிக்காதே, உன்னை இன்றுமுதல் பதவியிலிருந்துநீக்குகின்றேன். போய்விடு" எனத் துரத்தியும் விட்டார். கவலையுடன் தள்ளாடியபடி பெருச்சாளி வெளியேறியது.

உலகிலேயுள்ள கூடிய மக்களின் ஆதரவைப் பெற்றவர் முரு

— சங்கையூர் ஜெகதீஸ்வரன் —

கன். தாய் தந்தையரின் கட்டளைப்படி உலகவலம் வந்துகொண்டிருக்கும்பொழுது எத்தனையோ பக்தர்கள் அவரைக் கண்ணுற்றார்கள், வணங்கினார்கள். பெற்றோர்களால் அவர்களாவது தன்னைப் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார்களே என்ற மகிழ்வுடன் உலகைச் சுற்றிய களைப்பைக் கைவிட்டுத் தந்தைமுன் வந்து சேர்ந்தார் முருகன். நடந்ததைத் தாய்மூலம் கேள்வியுற்றார். "வஞ்சனை எண்ணம் கொண்டவர்கள் நீங்கள். என்னை அனுப்பியபின் அண்ணருக்குப் பழம் கொடுக்க முற்பட்ட உங்கள்முன் நிற்கேன்"



பாட்டி: 10 ஏக்கர் தோட்டம், டிராக்டர் எல்லாம் உள்ள மாப்பிள்ளை... அவனை நீ கல்யாணம் செய்.

பேத்தி: டிராக்டரில் படம் பார்க்கப் போகேலாதே!

என்றபடி வெளியேறினார்.

இதைக் கண்ட சிவன் ஆத்திரமுற்றார். நாரதரின் வருகை நல்லபடி வேலை செய்கின்றதெனக் குமுறினார். அவன் போட்ட முடிச்சை அவனே அவிழ்க்கவேண்டுமெனக் கூறியபடி நாரதனை அழைத்தார். "நாரதா, எங்கு சென்றாவது முன் தந்த பழம் போல் வேறு ஓர் பழம் கொண்டு வா! பழமில்லாவிடில் இந்த வாசலை மிதியாதே. போ" சிவன் ஆத்திரத்தில் கூறியபடி சென்றுவிட்டார்.

பாவம் நாரதர். யாரோ ஒரு வழிப்போக்குக் கிழவியிடம்தானே இப்பழத்தைப் பெற்றிருந்தார். இந்தத் தேவலோகத்திலே இப்படிப் பழம் கிடைக்காதே, பிள்ளையார் பிடிக்கக் குரங்காகிய கதைபோலாகிவிட்டதே கலகத்தை நான் உண்டாக்க அது என்னையே கலக்கிவிட்டதே என்று கலங்கினார். தனக்கு இந்த நிலையை ஏற்படுத்திய பெருச்சாளியை மனதாரத் திட்டித் தீர்த்தார். நடந்துகொண்டே சிந்தித்த அவருக்கு படீர் என ஓர் யோசனை தோன்றியது, அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆனந்தத்துடன் விசில் அடித்தபடி ஓடித்திரிந்தார்.

யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தைப் பற்றி பெரிய மதிப்பாக எல்லா இடங்களிலும் கதைப்பது அவருக்கு நினைப்பு வந்தது. அமிர்தத்திற்கு அடுத்த சுவை யாழ் கறுத்தக்கொழும்பான் மாம்பழமேயென்று தன் நண்பர் ஒருவரே ஓர் விழாவில் பேசியது நாரதருக்கு நினைவுக்கு வந்தது விரைந்து சென்று இப்பழங்களை வாங்கிக் கொண்டு சென்று நிலைமையைச் சமாளிக்க முடிவு செய்தார். தனது தினக்குறிப்பை எடுத்து யாழ்ப்பாணத்திலிருக்கும் தனது நண்பர்களின் விலாசத்தைத் தேடினார்.

●

பலத்த இடியுடன் மழை பெய்து ஓய்ந்திருந்தது. அந்தப் பிரதான வீதியில் சன நடமாட்டம் குறைந்திருந்தது. மழைக்காக கட்டிடங்களுக்குள்ளும், கடைகளுக்குள்ளும் பதுங்கியிருந்தவர்கள் ஒவ்வொருவராக வீதியில் நடமாடத் தொடங்கினர். அவர்களின் மத்தியில் நாரதரும் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றார். பெரிய கடை சந்தையில் பழம் மலிவாக வாங்கலாம்

## வராத செய்தி!

கருத்தடைப் பிரச்சாரக் கூட்டத்திற்கு "சிசு" என்னும் புனை பெயராளன் தலைமை தாங்குவார்.

என்று நண்பன் கூறியதால் விரைந்து வந்து கொண்டிருக்கிறார். இப்போது தானா பாழாய்ப் போன மழை மறுபடியும் பெய்ய வேண்டும். முணு முணுத்துக் கொண்டே ஓடுகின்றார்.

பெரிய கடைக்கு அருகே இருக்கும் புதிய கட்டிடத்தில் தான் சிரித்திரனின் பத்திரிகைக் காரியாலயம் இருந்தது. அக் காரியாலயத்தின் முன் புற அறையில் அதன் ஆசிரியர் அமர்ந்திருந்து அடுத்த இதழ் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொண்டிருக்கின்றார் மழையின் கொடுமையைச் சகிக்க முடியாத நாரதர் அக் காரியாலயத்திற்குள் நுழைகின்றார். அரவம் கேட்டுத் தலை நிமிர்ந்தார் ஆசிரியர். நாரதரைக் கண்டதும் அவர் திகைத்து விட்டார். "இக் காரியாலய வாசலை எனிமேல் மிதிக்க்மாட்டேன்" என்று கூறிய நாரதரா வந்து நிற்கின்றார். ஓடிச் சென்று அவரை வரவேற்று உடுப்களை மாற்றியபின் அமரவைத்தார். "என்ன நண்பரே வரவேற்பு பலமாக இருக்கின்றதே" நாரதர் கேட்டுவைதார் "சத்தியத்தை நினைத்துப்பார்த்தேன் நாரதரே.... அதுதான்...." ஆசிரியர் முடிக்கவில்லை குறுக்கிட்ட நாரதர்" நான் வருவதில்லை என்று தான் எண்ணியிருந்தேன். வர்ண பகவான் என்னைத் தண்டித்து விட்டார். இப்போதும் நானாக வரவில்லையே! அதோடு வாசலில் மிதியாது பாய்ந்து தாவனே வந்தேன். நானாவது சபதத்தை மறப்பதாவது" என்றார் வழக்கமான பாணியில்.

"அதுசரி ஏது இந்தப் பக்கத்தால் வருகின்றீர்கள்?"

"என் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றபின் பழம் வாங்கச் செல்கின்றேன்" என்றார் வியப்புடன்.

"போச்செடா போ. நாரதரே! நீர்தான் கலகக்காரனாச்சுதே. இங்கே உமக்கு உதவக்கூடிய நண்பர்களின் நிம்மதியையும் கெடுத்துவிடாதேயும்" ஆசிரியர் விடவில்லை.

"மிஸ்ரர்! ஏது எப்போதும் என்மேல் சவாரி விடுகின்றீரே! முன்னரும் சிரித்திரன் பத்திரிகையில் நாரதர் சிண்டு முடிந்து விடுபவன் என்று எழுதி எனது மானத்தைக் கப்பலேற்றினீர், இப்போதும் இப்படிக் கூறுகிறீரே. என்னைப்பற்றி என்னதான் நினைத்துக்கொண்டிருக்கின்றீர்" கடுகடுப்புடன் நின்றுகொண்டிருந்தார்.

"நாரதரே! நான் எப்போதும் உண்மையையே எழுதுபவன். நான் அப்படி எழுதியிருந்தால் அது உண்மையாகவே இருக்கும். ஆகவே தவறு விடும் நீர்தான் திருந்தவேண்டும்."

"நண்பரே! இப்போதும் கேட்கின்றேன், அடுத்த புஸ்தகத்தில் எனது பெரிய படம் ஒன்றையும் பிரசுரித்து நாரதர் நல்லவர் என்று ஓர் கட்டுரை வரைந்துவிடும். உமக்கு எவ்வளவு பணம் தேவையானாலும் தருகின்றேன்." நாரதர் குழைந்தார்.

"நாரதரே! என்னை மன்னித்துவிடும். நீர் திருந்தும் பின்னர் நான் அப்படிச் செய்கின்றேன்' காசுக்காக எதையும் செய்பவன் நான் இல்லை. அதற்கு எத்தனையோ பேர்கள் இங்கு இருக்கின்றார்கள். நீர் இடம் மாறி வந்துவிட்டீர்" சிரித்தபடி கூறி வைத்தார்.

"நண்பரே! என்னோடா பகைக்கின்றீர்? இருந்து பாரும், உம்மை மன்னிப்புக் கேட்க வைக்கின்றேனா இல்லையா என்று" என்றபடி வெளியேறினார். அவர்



அம்மா...

ஏன்டா கண்ணா அழுகிறாய்?

அம்மா... அப்பாவிற்குப் பைத்தியம் பிடிச்சிட்டுது. பைத்திய ஆஸ்பத்திரிக்கு ஏற்றவேணும்

ஏன்டா... பைத்தியக்காரன் மாதிரி என்ன செய்கிறார்?

தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கும்பிடுகிறார்!

எட... அதுவா... தேர்தல் வருகுது... ஸ்டைலாக் கும்பிட்டுப் பழகிறார்.

— ஜோக்கிரட்டீஸ்

செல்வனையே பார்த்தவண்ணம் சிரித்தபடி நின்றார் ஆசிரியர். சிரிப்புக்கு சிரித்திரன் என்ற நிலையை ஏற்படுத்தியவரல்லவா அவர்.

●

பிள்ளையார் தன் அறையில் உள்ள சாய்வு நாற்காலியில் படுத்திருக்கின்றார். அழுது அழுது அவர் முகம் வீங்கியிருந்தது. கண்கள் கொவ்வைப் பழம்போல சிவந்து அனல் பரப்பிக்கொண்டிருக்கின்றது. இன்றைக்குக் கிடைத்த வேதனைபோல் அவர் என்றுமே துன்பப்படவில்லை. ஆசை காட்டி மோசம் செய்த தந்தை மேல் ஆத்திரமாத்திரமாக வந்தது அவருக்கு. அரவம் கேட்டு திரும்பிப் பார்த்தார் பிள்ளையார். அவருக்கு அந்தக் கவலையிலும சிரிப்பாக வந்தது. வாய்விட்டுச் சிரித்துவிட்டார்.

பூலோகத்து பானிடர் அணியும் சேட், டவுசர் சகிதம் உச்சிக் குடும்பியுடன் வேர்க்க விறுவிறுக்க சோர்வுற்றபடி நாரதர் நின்றுகொண்டிருந்தார். அவர் கையில் ஓர் பாசல் இருந்தது. அதைக் கீழே வைத்த நாரதர் அதிலிருந்து ஓர் மாம்பழத்தை எடுத்துப் பிள்ளையாரிடம் கொடுத்தார். வெந்து சினத்திருந்த பிள்ளையார் மகிழ்ச்சியால் உந்தப் பெற்றார். ஓடிச்சென்று நாரதரைத் தூக்கிக்கொண்டு நடனம் ஆடத் தொடங்கினார். என்ன நடக்குமோ? ஏது கிடைக்குமோ? என்று அஞ்சி நடுநடுங்கிய நாரதர் இதைக்கண்டு பூரித்துவிட்டார். அவரும் பிள்ளையாருடன் சேர்ந்து ஆடத் தொடங்கினார்.

ஆகா! மாம்பழத்தின் மகிமைதான் என்னே? அதுவும் யாழ்ப்பாண மாம்பழத்தின் மகிமையைக் கூற வார்த்தைகளே இல்லையே! எந்தக் கடினமான வேலைகளையும் ஒரு பெட்டி மாம்பழத்தைக் கொடுத்தே சாதித்துவிடலாமே. உத்தியோகம் பெறவும், இடமாற்றத்தைத் தடுக்கவும். உத்தியோக உயர்வைப் பெறவும் உதவும் மாம்பழமே நீ வாழ்க! எத்தனையோ பெரியவர்களுக்கு வாழ்வுகொடுக்கும் யாழ்ப்பாண மாம்பழமே உன் புகழ் வளர்க!!

நாரதர் கொடுத்த பழத்தை உண்ட பிள்ளையார் ஆனந்தசாகரத்தில் மிதந்தார். "நாரதரே! என் ஏமாற்றத்தைத் தவிர்த்து எனக்குப் பழம் அளித்து மகிழ்வித்த உமக்கு என்ன வேண்டும்? கேளும்" பிள்ளையாரின் நன்றி உணர்வு வெளிப்பட்டது.

"என்னைத் தவறாக எண்ணாதீர்கள். சிரித்திரன் பத்திரிகையில் என்னைக் கலகக்காரன் என்று எழுதிவிட்டார் அதன் ஆகிரியர். ஆகவே அவரைக் கொண்டு அடுத்த புஸ்தகத்தில் மன்னிப்புக் கேட்க வைக்கவேண்டும்" சந்தர்ப்

இன்சுவைப் பிரியர்களுக்கோர்
இன்சுவைச் செய்தி!

சுவையான

கேக், புடிங், ஜெலி

தயாரித்து உண்பதற்கு
உங்கள் வியாபாரிகளிடம்
நீங்கள்
கேட்டு வாங்கவேண்டியது

## பேட் (BIRD) தயாரிப்புகளான

★ பேட் (BIRD) கோன் பிளவர்
★ பேட் (BIRD) கஸ்ராட் பவுடர்
★ பேட் (BIRD) ஜெலி
★ பேட் (BIRD) பேக்கிங் பவுடர்

ஆகியவைகளே.

தயாரிப்பாளர்களும்-விநியோகஸ்தர்களும்:

# பேட் (BIRD) இண்டஸ்றீஸ்

294, யோச் ஆர். டி. சில்வா மாவத்தை, கொழும்பு-13.

● வியாபாரிகளுக்கு விசேட சலுகை உண்டு. ●

பத்தை எதிர்பார்த்த நாரதர் வெளியிட்டார்.

இதைக்கேட்ட பிள்ளையார் வீரப்பாவின் சிரிப்பொன்றை உதிர்த்தார். நாரதர் வெலவெலத்துப்போனார்.

''ப்பூ இவ்வளவுதானா? எங்கே அந்தப் புஸ்தகத்தைத் தாரும். உடனே சென்று அவரைப் பணித்துவிட்டுத் திரும்புகின்றேன்.'' என்ற வண்ணம் பிள்ளையார் பூலோக விஜயத்திற்குத் தயாராகின்றார், (வாகனம் பதவி விலக்கப்பட்டதால் ஒட்டமும் நடையுமாக விரைகின்றார்.)

●

பிள்ளையார் பூலோகத்தில் அடியெடுத்து வைக்கும்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. முத்தவெளியில் இறங்கியவர் பிரமித்துவிட்டார். மின்சார பல்புகளாலும் ஒலிபெருக்கிகளாலும் சூழப்பட்டிருந்த யாழ் திறந்தவெளியரங்கை நோக்கினார். எங்கும் ஒரே சனத்திரளாகக் காட்சியளித்தது. இவ்வளவு மக்கள் கூடும் நிகழ்ச்சிகளும் இங்கே நடைபெறுவதுண்டா? இவ்வளவு மக்களையும் கவரும் அந்த நிகழ்ச்சிதான் என்னே? சிந்தித்தபடி முன்னேறினார். மைதானத்தை அண்மித்தவுடன் ரசிகர்களின் சிரிப்பொலியையும் கரகோசத்தையும் கேட்டு மகிழ்ந்தார். ''துன்பத்திலும் சிரித்திரு" என்று பெரியோர்கள் உபதேசம் செய்தது தெரியும். ஆனால் அதைக் கடைப்பிடித்து இவ்விழா மூலம் மக்களைச் சிரிப்பிலாழ்த்தும் உத்தமர்கள் யார்? அறிய நாலு பக்கமும் பார்வையைச் செலுத்தினார். நாடகம் ஆரம்பித்தபடியால் வெளி மின்சார பல்புகள் அணைக்கப்பட்டிருந்தது. இதனால் ஒன்றையும் அவதானிக்கமுடியவில்லை.

நாடகத்தைப் பார்த்த அவர் வயிறு குலுங்கச் சிரித்தார். சிரிக்கச் சிரிக்க அவரிடமிருந்த கோபம் கவலை யாவும் பறந்துபோயின. இந்த நிகழ்ச்சியை விட்டு வெளியே செல்ல மனமில்லாமல் மக்கள் மத்தியில் சென்று அமர்ந்தார். அப்போது பிள்ளையாரைப் போல உருவம் கொண்ட ஒருவர் அந்நாடகத்தில் காட்சியளித்தார். இதைக் கண்ட பிள்ளையார் தீயை மிதித்தவர் போலானார்.

அடே! யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் பலே பேர்வழிகள் தான். என் உருவத்தைக் கற்பனை பண்ணி என்போல் ஓர் உருவத்தைச் சிருஷ்டித்து விட்டனரே. எவ்வளவு சாதுரியமாக சமூக ஊழல்களை நகைச்சுவை மூலம் மக்கள் மண்டையில் செலுத்துகின்றார்கள். உண்மையை எடுத்துக் கூறி மேற்கொண்டும் பிழை விடாது தடுப்பதில் இவர்கள் கை தேர்ந்த பேர்வழிகள் போல் தெரிகின்றதே, சமூகக் குறைபாடுகளை ஒழிக்க நகைச்சுவையை ஓர் காரணியாக அமைத்த இவர்கள் மகா திறமைசாலிகள் தான். சிந்தித்துக்கொண்டிருந்த பிள்ளையாரை பார்த்து பக்கத்திலிருந்தவர்கள் சிரித்தார்கள். தன்னை அடையாளம் கண்டுவிட்டார்கள் என நினைத்து கீழே குனிந்தார்.

''எழுந்திரு அண்ணே. பிள்ளையாரை மேடையில் கண்டதும் விழுந்து கும்பிடுகிறீரே'' என்றபடி பிள்ளையாரை ஒருவன் தூக்கினான். தூக்கியவன் திகைத்துவிட்டான். ''டேய்! பிள்ளையாரைப் பிள்ளையார் கும்பிடுகிறாரெடா'' என்றான் பலமாக. தன் மடமைத்தனத்தை நினைத்த அவர் விர்ரென எழுந்து இருளுக்குள் சென்று நின்றவர்களுடன் சேர்ந்து நின்றார். இவ்வேளை நாடகம் முடிவுற்றது.

நாடக நடிகர்களை அறிமுகம் செய்துகொண்டிருந்தார்கள். ''இதுவரை சிரித்திரன் பத்திரிகையில் வந்த நகைச்சுவைகளைத் தொகுத்து சிரித்திரன் காரியாலய நண்பர்கள் தயாரித்தளித்த இந்த நாடகத்தைக் கண்டுகளித்தீர்கள்'' மேலே விளம்பரம் தொடர்ந்தது. பிள்ளையார் பிரமைபிடித்தவர் போலானார், நிமிர்ந்த அவர் திகைப்புற்றார். ''சிரித்திரன் ஆண்டு நிறைவு விழா" என்று பொறிக்கப்பட்டிருந்தது.

மக்கள் மத்தியில் இத்தனை செல்வாக்கு உடையவரா சிரித்திரன் ஆசிரியர்? அப்படியானால் அவர் ஓர் லட்சியவாதியாகத்தான் இருக்கவேண்டும். சமூக ஊழல்களையும், அதைச் செய்பவர்களையும் நகைச்சுவை மூலம் பொதுமக்கள் முன் கொண்டு வந்து விடுகின்றாரே. இவரிடம் போய் நான் நாரதரைப் பற்றிக் கூறினால்.........! அடுத்த பத்திரிகையில் என் நிலை.........!! வேண்டாம், வேண்டவே வேண்டாம். நான் தப்பினால் போதும்.

நாரதர் என்ன நல்லவரா? கலகக்காரர்தானே? அதனால் தானே நான், என் தாய், தந்தை, தம்பி, என் வாகனம் ஆகியோர்களைப் பிரிந்து மானிடர்போல அலைந்து கொண்டிருக்கின்றேனே. என்றுமே எனது வாகனத்தை விட்டுப் பிரியாத நான் இன்று நடந்து திரியும் நிலை பெற்றதும் அந்த நாரதரால்தானே! ஆகவே அவரைக் கலகக்காரன் என்று கூறுவதில் தவறில்லைத்தானே. சீ... சீ... மாம்பழத்திற்காக என் மனச்சாட்சியை அடைவு வைக்கப் பார்த்தேனே. நல்லநேரத்தில் என் மனக்கண்ணைத் திறந்துவிட்ட சிரித்திரன் ஆசிரியரே நீர் வாழ்க! உமது சிரித்திரன் பத்திரிகை பல்லாண்டு வாழ்க!! — கூறியபடி பிள்ளையார் தேவலோகத்தை நோக்கித் தெளிந்த உள்ளத்துடனும்' திடமான முடிவுடனும் சென்றுகொண்டிருக்கின்றார். ★



நம்ம மகன் யாரோ ஒரு பெண்ணிற்கு காதல் கடிதம் எழுதுகிறானாம்.

அவன் எழுத்து சுத்த மோசம்... இனி எழுத்துத் திருந்திவிடும்!

அழகிய அச்சு வேலைகட்கும்
கண்கவர் வர்ணப் பதிப்புகட்கும்
சேட் பெட்டிகள் தயாரிப்பதற்கும்

உகந்த உயர்ந்த இடம்

விஜயா இன்டஸ்றீஸ்
236, பழைய சோனக தெரு, கொழும்பு-12

மகுடி ஊதி எம்மை
மகிழ்விக்கும் மகுடியார்க்கு

எமது நல்வாழ்த்துக்கள்.

மேனகை ஜூவலறி
475-2-ம் டிவிஷன்,
மருதானை, கொழும்பு.

# சிரியுங்கள்! நன்றாய்ச் சிரியுங்கள்!!

மாத்தளை, அருணேசர்

சிரிப்பு உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கக்கூடிய சிறந்த மருந்தாகும். இதனைப்பற்றி ஆராய்ந்த பல உடல்நூல் தத்துவ மேதைகளும், மேல்நாட்டு வைத்தியர்களும் இதன் நன்மைகளை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஒரு வைத்திய நிபுணர் கூறுகிறார். ''தேகாப்பியாசங்களிலெல்லாம் தலைசிறந்த அப்பியாசம் சிரிப்பு, அது மிகவும் ஆரோக்கியமான அப்பியாசம், தேகத்திற்குப் புத்துயிர் அளிக்கிறது பசிதீபனத்தையும், சீரண சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது. இரத்த ஓட்டத்திற்கு உத்வேகமும், கண்ணுக்கு ஒளியும், முகத்திற்குக் களையும் கொடுக்கிறது. மனமகிழ்ச்சியுள்ள மனிதன் நன்றாக வேலை செய்யவும், பொதுவாக வாழ்க்கையை அனுபவித்துச் சுவைக்கவும் முடியும்''

இன்னொரு பிரபல டாக்டர் கூறுகிறார். ''உலகத்திலுள்ள எல்லாரும் நல்ல நகைச்சுவையுடையவர்களாகவும், அதிகம் சிரிப்பவர்களாகவும் இருப்பார்களானால் பல் வைத்தியசாலைகளை மூடிவிடவேண்டிவரும். டாக்டர்களிலும் பலருக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஏன். போர்கள்கூட ஒழிந்துவிடும்.''

மனிதர்கள் நோயற்ற வாழ்வு வாழவேண்டுமானால், பிராணவாயு அத்தியாவசியம். இந்தப் பிராணவாயுவை சிரிப்பின் மூலம் எளிதாக அடையமுடியும். தேகாப்பியாசம் செய்யும் சிரமம் எதுவுமின்றி சிரிப்பின் மூலம் இரத்தத்திற்குப் புத்துயிர் ஊட்டலாம். சிரிப்பு தேகத்திற்கு மட்டுமன்றி மனதுக்கும் சுகம் அளிக்கிறது.

''வயதானவர்களும், எப்போதும் நாற்காலியில் உட்கார்ந்தபடியே வேலை செய்கிறவர்களும் சிரிப்புக் கலையை அவசியம் பயிலவேண்டும். ஏனெனில் இவர்களுக்குச் சிரிப்பு ஒரு சிறந்த அப்பியாசமாகும். பலமாகச் சிரிக்கும்பொழுது ஈரல் தாங்கியானது மூன்று அல்லது நான்கு அங்குல உயரம் ஏறி இறங்குகிறது. இது இருதயத்தைப் பிடித்துவிடுவதுபோலிருக்கிறது. சிரிப்பு இரைப்பையையும் குடல்களையும் குலுக்குவது ஒரு மருந்துப் போத்தலைக் குலுக்குவதற்குச் சமமானது', என்று மற்றோர் வைத்திய நிபுணர் கூறுகின்றார்.

பிரிட்டனில் மிகப்பெரிய வைத்திய மேதையாக விளங்கிய ஹார்டர் பிரபு என்பவர், தம்மிடம் வரும் நோயாளிகளை நோக்கி, ''நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறீர்கள் என்பதுதான் முக்கியம், கவலைப்படுகிறவர்களுக்கு நீண்ட ஆயுள் இராது. அவர்கள் கவலைப்பட்டே குறைவயதில் இறந்துவிடுவார்கள்" என்று கூறுவாராம்.

இன்முகம் அல்லது மலர்ந்தமுகம் என்கிறோமல்லவா? அதுதான் எவரையும் வசீகரிக்கக்கூடிய புன்முறுவல் பூத்த முகம் என்பது. மகிழ்ச்சியான மனமே புன்முறுவலைத் தரும். இப்படிப்பட்ட மலர்ச்சியான சிரித்த முகத்தையுடையவர்களுக்கு சிறந்த நண்பர்களும் சேருவர்.

புன்சிரிப்பு சிரிப்பதற்கு 26 தசைநார்களும்' முகத்தைச் சுளிப்பதற்கு 66 தசைநார்களும் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். புன்சிரிப்பைவிட வாய்விட்டுக் கலகலப்பாக வயிறு குலுங்கச் சிரிப்பது மேலும் நன்மையானது. இதனால் உடலிலுள்ள தசைநார்கள் நன்கு விரிந்து கொடுத்து இரத்த ஓட்டத்தையும் சீர்படுத்துகிறது.

''சிரிப்பு கடவுளுடைய மருந்து. அதை எல்லாரும் அருந்தவேண்டும்" என்று கூறுகிறார்; டாக்டர் ஒலிவர் வெண்டல் ஹோம்.

சிரிப்பிலே பலவிதமான சிரிப்புகள் இருக்கின்றன. அவற்றிலெல்லாம் இன்பகரமான சிரிப்பு குழந்தைகள் விளையாடும்பொழுது சிரிக்கும் ஆனந்தச் சிரிப்புத்தான். சிரிப்பு இயற்கையாக எழுவதாயிருக்கவேண்டும்.

கோபச் சிரிப்பு, பயங்கரச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, பொறாமைச் சிரிப்பு, பொய்ச் சிரிப்பு இவைகளெல்லாம் பயனற்றன. சிரிப்பின் தன்மை உள்ளத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க எழக்கூடியதாயிருக்கவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன் டாக்டர் பாஸ்கண்டு, டாக்டர் பாவ்லோவ், டாக்டர் கெனன் முதலிய வைத்திய நிபுணர்கள் தங்கள் ஆய்வுக்கூடத்தில் செய்த 150 சோதனைகளின் மூலம், சிரிப்பு தசைநார்களுடைய விறைப்பைக் குறைத்து, அவற்றுக்குச் சமனமளிக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். ஆனால் முகத்தைச் சுளிப்பது தசைநார்களின் விறைப்பை அதிகரிக்கச் செய்கிறது, அப்படியே கவலை, பயம், கோபம் முதலியனவும் களைப்பையும் பலக்குறைவையும் உண்டாக்குகின்றன என்பதனையும் கண்டுபிடித்தார்கள். ''மனக்கவலை பலக்குறைவு" என்ற தமிழ்ப் பழமொழி இதனை உறுதிப்படுத்துகிறதல்லவா?

ஆகவே, நாமெல்லோரும் ''சிரித்திரனை''ப் படித்துச் சிரிப்பை உண்டாக்கிச் சிந்தை மகிழ்ந்து வாழ்வோமாக.

சமயம்
தத்துவம்
வைத்தியம்
இலக்கியம்

மற்றும்
பாடசாலைப் புத்தகங்களுட்பட
நுண்ணறிவு தரும்
நூல் வகைகளுக்கும்

பாடசாலை அலுவலக
பாவனைப் பொருட்கள்
உபகரணங்கள்
சகலவற்றிற்கும்

தலைநகரில் சிறந்த புத்தகப்பண்ணை

**ரகுநாதன் பதிப்பகம்**

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின்
மொத்த வியாபாரிகள்)

303, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: *26946*

கிளை:
இல. 3, நவீன மத்திய சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: *7678*

இன்றைய நாகரீகத்தின்
இணையற்றதேர்வுகளான

சகலவிதமான
**பிடவைவகைகளுக்கும்**
விஜயம் செய்யுங்கள்.

**என்கேடெக்ஸ்**

140, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு-13.

உரிமையாளர்: என். குலசேகரம்

தொலைபேசி எண்: *31892 — 32988*

● சிறுகதை

# ஊருக்குப் போகுமுன் ...

— சாந்தாராஜ்


சிறைக் கம்பிகளைப் பிடித்த படி நின்றிருந்த கருப்பனின் கண்களிலிருந்து கண்ணீர் அவன் முகத்தில் படிந்திருந்த அழுக்கோடு சேர்ந்து பரிதாபமாக வழிந்தோடியது.

''அழுவாத மாமா! ஒம்மவளுக்கு எதுனாச்சு நடந்தா நா பாத்துக்க மாட்டேனா? ஒங்கவலையே அதுக்குப் பெரிய வெசாதியாப் போச்சி. வேற ஒண்ணுமில்ல. சுருக்கா சொகமாயிரு. நீ இப்பிடி அழுதழுது இங்கேயே செத்துத் தொலஞ்சிடப் போற. சொன்னா கேளு மாமா. இன்னோ ஒரே மாசந்தானே?'' ராமாயி தன்னால் இயன்றளவு ஆறுதல் சொல்லித் தேற்றினாள்.

''என்னமோ ராமாயி நீயாச்சு வந்து எனக்கு மனசாராப்பலஏதாச்சு சொல்லுறியே. இருந்தாலு நா ஏ மவள பாத்து மூனுமாசொ ஆவுதே. அதுக்காவதானே நா இப்பிடி வந்து அனாதயா அடஞ்சி கெடக்கிறே. ஒரே புள்ள. அதுக்கு ஒன்னு ஆச்சினா... அந்தப் பாவிங்க என்னா மனசில வச்சிருக்கானுங்களோ, அதுதா ராமாயி வெசனமா இருக்கு'' மூக்கைச் சிந்திவிட்டான் கருப்பன்.

''ஐயோ! நீ பேசாம இரு மாமா. அப்பிடி ஒன்னு நடக்காது'' ஒரே வார்த்தையால் அடக்கிவிட்டு கையில் கொண்டிருந்தப் பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தாள் ராமாயி.

''ஓ மவதா ஒனக்கு ஆசயா வட வாங்கிக்கிட்டுப் போவச் சொல்லிச்சு. சரி நா போயிட்டு வாரே. இன்னொ ஒரு மாசத்துல வந்துருவ. அதுகாட்டியு காயலா கெடந்தவள இழுத்தடிக்கப் படாது. அழுவாத இரு மாமா. நாளக்கி மச்சா ஒன்ன பாக்க வரு'' ஆறுதலாகச் சொல்லிவிட்டுச் சிறைக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்த ராமாயி தோட்டத்துக்குப் போகும் பஸ் நிற்கும் இடத்துப் பக்கமாக நடந்தாள். ராமாயி கருப்பனை உரிமையோடு மாமா மாமா என்றழைப்பதற்கென்ன அவர்களுக்குள் எந்த விதமான சொந்தமோ பந்தமோ கிடையாது. பக்கத்துக் காம்பிராவும் பழகின தோஷமுந்தான். கருப்பன் மகள் சொக்கம்மாவும் ராமாயியும் சின்ன வயது முதல் அக்கா தங்கை போல அன்பாகப் பழகியவர்கள். தாயில்லாப்பெண் ராமாயியைச் சொக்கியின் தாய் தான் கவனித்து வந்தாள். இப்போது ராமாயிக்குத் தந்தையுமில்லை. சொக்கியின் தாயும் செத்துவிட்டாள். ராமாயி மருதனைக் கலியாணம் பண்ணி வருஷம் மூன்றாகிறது. இன்னும் குழந்தைப் பேற்றைக் காணவில்லை. சொக்கியைத் தாய் நாட்டுக்குப் போய்க் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் கருப்பனின் அடங்காத ஆசையாக இருந்தது. சொக்கியை அடுத்தடுத்துப் பிறந்த நான்குப் பிள்ளைகளும் நிலைத்திருக்கவில்லை. ஒரே மகள் சொக்கியைத் தவிர உடன் பிறந்தார் யாரும் இலங்கையில் கருப்பனுக்கில்லை. முன்பாகவே எல்லோரும் தாயகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள். சொக்கியின் தாய் வழிவந்தவர்கள் இலங்கையிலே இருக்கவே அவளின் விருப்பத்துக்காகத்தான் இத்தனை நாள் கருப்பனும் இலங்கையில் தங்கி விட்டான். மனைவியும் போய் விடவேதான் மகளை அழைத்துக் கொண்டு சீக்கிரமே இந்தியா போய்விட வேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தான். அதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தான். ஆனால் அதற்குள் விதி அவனை சிறை வாழ்வையும் அனுபவிக்க வைத்து விட்டது.



ஆசிரியர்: அதிஷ்ட லாபச் சீட்டில் முதற்பரிசு கிடைத்தால் என்ன செய்வாய்?

மாணவன்: தியேட்டர் எல்லாவற்றிற்கும் மூட்டைப் பூச்சி மருந்து இலவசமாகச் சப்ளை செய்வேன்.

— மோகனம்

மகளைப் பாசத்தைக் கொட்டி வளர்த்தானென்பதை சொக்கியைப் பார்த்த மாத்திரத்திலேயே சொல்லி விடலாம். தளதளவென மாநிற மேனி மின்ன மலையக அழகியாகத் தோற்றமளித்தாள். தோட்டத்துப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்புவரை படித்தாள். பெரியவளானதும் இதரப் பெண்களுடன் சேர்ந்து கொழுந்து பறிக்கப் போய்க் கொண்டிருந்தாள். அந்தத் தோட்டத்துச் சின்னத் துரையின் கழுகுக் கண்களில் ஒரு



விமர்சகர்: கவிதைகளில் கனம் காணாது.

கவிஞர்: இனிமேல் நான் கவிதை இரும்புத் தகட்டில் தான் எழுத வேணும்.

நாள் பட்டும் விட்டாள். எளியவர்களுக்கு உதவுவதாக அவன் மறைமுகமாக நடத்திய திருவிளையாடல்கள் அனந்தம். இப்படியான பருவப் பெண்கள் அவன் கண்களில் தற்செயலாகப் பட்டுவிட்டால் அவர்கள் குடும்பத்துக்கே எதிர்பாராத பல வகையான சலுகைகள் கிட்டும். அற்ப விஷயங்களுக்காக ஆசைப்பட்டு அழிபவர்களும் தொழிலாளர் வர்க்கத்தில் இருக்கத்தானே செய்கிறார்கள். அவர்களுக்கு ஆசை காட்டிவிட்டு அனுபவிப்பதெல்லாம் அந்தத்துரையே என்பதை உணர்ந்த பின்னும் அந்தப் பாதகச் செயலைக் கண்டிக்கவோ துண்டிக்கவோ அந்தத் தோட்டத்தில் துரைக்கு இருந்து வந்த அதிகாரம் தடுத்தது. தொழிற் சங்கங்களை நாடலாம். ஆனால் தங்கள் சொந்த வாழ்வை நடத்திச் செல்வதற்காகவென்றே நடந்துகொண்டிருக்கும் சங்கங்கள் எத்தனையோ? ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் மேடையேறிப் பேசி மாலை சூடிக் கொள்ள வேண்டும்; அடுத்த நாள் பேச்சுடன் போட்டோவும் பத்திரிகை தோறும் வெளிவரவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள தலைவர்கள் எத்தனைப் பேர்? தொழிலாளர் பெயரில் சங்கம் நடந்தாலும் அவர்களின் அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கவே இயலாதவர்கள் அந்த எளிய குடும்பங்கள் அனுபவிக்கும் அவலத்தை ஆராய்ந்தா அதை ஆற்றி வைக்கப் போகிறார்கள்? தோட்டத்து சில கட்சித் தலைவர்களே துரையின் கையாளாக இருப்பான். ஒரு நாள் கருப்பனுக்குத் திடீரென சின்னத்துரையிடமிருந்து அழைப்பு வந்தது. கருப்பனுக்குப் பகீர் என்றது.

''கருப்பன்! நாளையிலேயிருந்து நீ நம்பத் தோட்டத்தைக் கவனிக்கும் வேலைக்கு வரலாம். முப்பது நாள் பேர் கூட சம்பளமும் போட்டுத் தருவேன். என்ன சந்தோஷம்தானே?'' ஏதோ காரியம் ஆகவேண்டுமென்பதை அவன் பச்சை சிரிப்பே எடுத்துக் காட்டியது.

''வேணுங்க தொர, இப்ப செய்ற வேலயே எனக்குப் போதுங்க''

''என்ன கருப்பன் பெரிய ஆள் மாதிரி பேசுற. நான் சொன்ன நீ செய்யவேண்டுமில்லையா'' அதிகாரம் பேசியது.

''இல்லிங்க தொர, எனக்குத் தோட்ட வேலயில பழக்கொ கெடயாதுங்க. செய்ற வேலய வுட்டா வேற வேல எனக்கு ஓடாதுங்க'' பணிவாகத் துணிவாகக் கண்டிப்பாக விட்டுக்கொடுக்காமல் பேசினான் கருப்பன். துரை முகத்தைப் பார்க்கவேண்டுமே.

''சரி சரி நான் நல்லதுக்குத்தான் சொன்னே. நீ கேக்கல. சரி நீ போ. மத்ததை நான் பார்த்துக்கிறேன்'' ஏதோ தீர்மானித்த தொனியில் சொன்ன துரையின் வார்த்தைகள் கருப்பனைப் பீதி கொள்ளத்தான் செய்தன. தன்மான மிக்கவன் கருப்பன். தெரிந்தே படுகுழியில் விழுவதா? தலையைக் கவிழ்த்தவாறு யோசனையுடன் லயத்தை அடைந்தான் கருப்பன்.

''ஏம்பா! இவ்ளோ நேரோ எங்கப்போன?'' வரவேற்ற மகளைப் பார்க்க வேதனையாக இருந்தது கருப்பனுக்கு. ''ஏ தங்கத்த நல்ல மொறயில ஊருக்குக் கொண்டுப்போயி சேக்கனுன்டா ஆண்டவா'' ஆண்டவனை மனமுருக வேண்டிக் கொண்டான். ஆனால் தொழிலாளரின் கதறல்கள்தான் ஆண்டவன் திருச்செவிகளை எட்டுவதே இல்லையே. அதைத்தான் பயன் படுத்திக் கொண்டான் சின்னத்துரையும்.

## பாலுணர்வு

அது -
மானமுள்ள பூனை
பாலில் ஆடையில்லாததால்
கண்களை மூடி -
பாலைச் சுவைத்தது.


— வர்மன்



## பொறுமை

ஆலய உண்டியலில்
விழுகின்ற -
நாணயங்களின் ஒலி
அந்தப் -
பிச்சைக்காரனின்
காதுகளில்
நாராசமாய் ஒலித்தது.

— தீபப்பிரியன்



என்ன முதலாளி உங்க கடைக்கு முன்னால் நின்று கொண்டு கடை தெரியாது தடுமாறுகிறீர்கள்.

'கண்கடை தெரியாமல் குடித்திட்டன்.

உண்மையாக உழைக்கும் தொழிலாளர் மத்தியிலே கூட உலவும் சில குள்ள நரிகள் துணையுடன் பல காரணங்கள் காட்டி திருட்டுப் பட்டங் கட்டிக் கருப்பனைக் கம்பி எண்ண வைத்தேவிட்டான் அந்தப் பாவி. ஆனால் அவன் இந்தச் சம்பவத்துக்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாதென்ற பாவனையில் சொக்கியிடம் அனுதாபம் காட்டுவதே போல் மெல்லத் தன் காமக்கண்களையும் அவள்மீது செலுத்தினான். தந்தையின் தன்மானத்தையும் மிஞ்சுபவளான மகளோ அவனைச் சிறிதேனும் சட்டைப் பண்ணவில்லை. தகப்பன் துணையில்லாத சொக்கியைத் தன் எண்ணத்துக்கு இணங்க வைக்க முடியாது தோற்ற துரையின் ஆத்திரம் வெறியாக வெளிப்பட்டு சொக்கியின் மானத்தைப் பறித்தது. அவன் செய்கைக்கு யாரால் ஆதாரம் காட்ட முடியும்? ராமாயி இல்லாவிட்டால் சொக்கியின் வாழ்வே முடிந்தக் கதையாகி இருக்கும்.

சொக்கி மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு மூன்று மாதங்கள் வரை தந்தையைச் சென்று பார்த்து வந்தாள். அதற்குமேல் இயற்கை தன்னைக் காட்டிக் கொடுத்து தந்தையின் உயிரையும் சிறையிலேயே தள்ளிவிடுமே என்ற பீதியால் சுகயீனம் என்ற பெயரில் தன்னைத்தானே மறைத்து முடங்கிக் கிடக்கத் தலைப்பட்டாள்.. கருப்பனின் சிறை வாழ்வும் முடியப்போகிறது. அப்பனைக் காணவேண்டுமென்ற ஆவல் அவள் முகத்தில் சிறிதேனும் தலைகாட்டவில்லை. ஆனால் அவள் வயிறோ பொங்கிப் பூரித்து அவள் நிலையைத் தெளிவாகக் காட்டிக்கொண்டிருந்தது. அப்பாவை எதிர்கொண்டழைக்கும் அந்தத் துன்ப விநாடியைச் சமாளிக்க முழுக்க முழுக்க ராமாயியையே நம்பிக்கொண்டிருந்தாள் சொக்கி. கருப்பன் ஓடோடி வந்தான் மகளைப் பார்க்க; மகளுக்கோ ஓடோடி வர முடியவில்லை. கருப்பனின் கால்களைப் பிடித்துக் கதறினாள். கருப்பன் மனதில் விபரீத தவறான எண்ணங்கள் எழுவதற்கு இடங்கொடாமல் ராமாயி நடந்து முடிந்த பாதகச் செயலை மனமுருகச் சொன்னாள். வெகுண்டெழுந்தவனையும் அடக்கினாள்.

''மாமா கொஞ்சொ பொறு. நா சொல்றத கேளு. இந்த நெலமயில எது செஞ்சாலு அது ஒ உசிருக்குத்தா ஆவத்தா வரு. அந்தப் பாவிங்க எதுவு செய்வானுங்க. நம்ம நெலமய யாரு எடுத்து சொல்லுவா? நீ சாவ போறியா சொல்லு மாமா? ஒ மவ கதிய நெனச்சிப் பாத்தியா? இன்னு நாலே மாசத்தில ஊருக்குப் போவப்போற. நானு புள்ள இல்லாதவதானே. சொக்கி புள்ளய நா எடுத்துக்கிறே. நீ பேசாம அவள ஊருக்கு அழச்சி போயி ஒ மனசு போல ஒரு கலியாணத்த பண்ணி வையி. ஒ கயிடமு தீந்தாப்புல இருக்கு மாமா'' ராமாயியின் உருக்கமான பேச்சு அந்த நிலையில் கருப்பனுக்கு ஒரு புதுத் தெம்பை அளித்தது.

''ராமாயி! அன்னிக்கு இன்னிக்கு நீதாமா எனக்கு கைகொடுத்த தெய்வோ'' நன்றிப் பெருக்கால் கண்கலங்கக் கூறினான் கருப்பன்.

ஆச்சு மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. சொக்கி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆனால்... சொக்கியின் நலிந்துபோன உடலும் உள்ளமும் அவளை மேலே வாழவிடவில்லை. கருப்பன் இடிந்துபோய் விட்டான். தன்னையும் மகளையும் வஞ்சித்த பாவிகளைப் பலிவாங்கத் துடித்தெழுந்தான். ராமாயியும் அவள் புருஷனும் வெகுபாடுபட்டு அவனைத் தடுத்து விட்டனர். சங்கத்தாரிடம் இந்த அவலக் கதையை எடுத்துச் சொல்ல முடியுமா?

''மகளை ஒழுங்கா வளர்த்திருக்கணுமய்யா. பேசாம ஊருக்குப் போய் சேர்'' என்ற இரக்கமற்ற பதிலைத்தான் எதிர்பார்க்கலாம். எந்த மனசுடன் இனி ஊருக்குள் காலடி எடுத்து வைப்பது? வேதனையால் பாயில் சுருண்டு கிடந்தான் கருப்பன். அயராது உழைத்தும் அயர்வைக் காணாத அந்த உழைப்பாளியின் உடல் இன்று செயலிழந்து துவண்டு கிடக்கிறது.

''மாமா! ஏ மாமா! இந்தா எழும்பி இந்த கஞ்சிய குடி. இப்படியே கெடந்தா எப்பிடி மாமா? ஊருக்குப் போவ உத்தரவு வந்திரிச்சி. சொக்கியு ஒன்ன தனியா வுட்டுட்டு போவலயே. எழுந்திரிச்சி நடக்க வேண்டியத கவனி மாமா''

''என்னு சொல்ற ராமாயி?'' ஒன்றும் புரியாமல் தீனக் குரலில் கேட்டான் கருப்பன்.

''ஆமா மாமா! நானு மச்சானு ராத்திரி பூரா ஒன்ன பத்திதா பேசிக்கிட்டிருந்தோ; நீ எலங்கையிலே இருக்கிறதுனா ஒன்ன நானே பாத்துக்குவே மாமா. ஊருக்குப் போனா என்ன செய்வ? இப்பிடியே அழுதழுது செத்துதா போவ. ஒம்பேரன ஒங்கூட ஊருக்கு அழச்சுக்கிட்டுப் போ. அப்பறோ நடந்ததெல்லாத்தையு மறந்துடு. இவே ஒமவ வயித்தில பொறந்தவங்கிறத மட்டு நெனப்பில வச்சி அவன ஆளாக்கிடு. அது போது மாமா ஒனக்கு''

''ராமாயி! அப்ப ஒனக்கு?''

''எனக்கு ஆண்டவே வழி பண்ணுவா. நீ அத பத்தி கவல படாத மாமா. பேரன பத்தி காயிதோ போட்டுக்கிட்டே இருந்தா அதே எனக்கு மனசு நெறஞ்சாப்பல'' நீர் வழியும் கண்களைத் துடைத்துக் கொண்டேயெழுந்தாள் ராமாயி.

இறைவா! தொழிலாளர் அத்தனை பேருக்குமே இந்த ஒப்பற்ற மனசு இருந்து விட்டால் அவர்களுக்கென்றே இன்று கிட்டியிருக்கும் அவல வாழ்வுதான் ஏன்? அவர்கள் பெயரைச் சொல்லியே வாழ்க்கை ஓட்டிச் செல்லும் நூற்றுக் கணக்கான சங்கங்கள்தான் எதற்கு?

## ஜனநாயகம்

சிவனே பெரிது,
இடதுபாகம் வீற்றிருக்கும்
சக்தியல்ல... என
வாதம் செய்தவரின்
இடதுபாகம் -
பாரிச வாதத்தால்
வழங்காதபோது ...
இடதுபாகம், வீற்றிருந்த
சக்தியை ...
விளங்கிக்கொண்டார்.

— வர்மன்

# கலையும் காதலும்

— செல்வி, பிரியதர்சினி சச்சிதானந்தன்

ஓவியக் கலையில் ராஜாவாக விளங்கியவர் ராஜா ரவிவர்மா. அவருடைய பெயருக்கேற்ப அவர் ஒரு ராஜபரம்பரையையும் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அழகிய பெண்களின் ஓவியங்கள் வரைவதில் ரவிவர்மா பெயர் பெற்றவர். ஒரு பெண்ணின் அழகைப் புகழ்வதாயின் ''ரவிவர்மாவின் ஓவியத்தைப் போல'' என்று குறிப்பிடுமளவுக்கு அழகான ஓவியங்களை வரைந்தார் அவர்.

வட இந்தியாவிலிருந்த மகாராஜா ஒருவர் தனது குடும்பத்தினரின் உருவப் படங்களை வரையுமாறு ரவிவர்மாவைத் தனது அரண்மனைக்கு அழைத்திருந்தார். அக் குடும்பத்தினருள் மகாராஜாவின் மருமகள் ஒருத்தியும் இருந்தாள். அவள் மதிமயக்கும் அழகுடையவள். அவளைப் பார்த்ததும் கிருஷ்ணனின் வருகைக்காக ஏங்கி நிற்கும் ராதையைப் பிரதிபலிக்கும் ஓவியம் ஒன்றை வரைவதற்கு அவளையே மாதிரியுருவாக அமைத்துக் கொள்ள வேண்டுமென முடிவு செய்தார் ரவிவர்மா. இதற்காக வேண்டிய அனுமதியை அவர் மகாராஜாவிடம் பெற்றார். அரண்மனைப் பூந்தோட்டத்தில் அமைக்கப்பெற்ற ஒரு செயற்கை நீர் வீழ்ச்சிக்கருகில் அவளை இருக்கவைத்து அவளின் உருவத்தை வரையத் தொடங்கினார் ரவிவர்மா.

உற்சாகத்துடன் வரையத்தொடங்கிய அவர், அவளின் முகத்தில், கிருஷ்ணனை நினைத்து ஏங்கி நிற்கும் ராதையின் காதல் ஏக்கத்தை வரவழைக்க முடியாது திண்டாடினார். அந்த ஏக்கந்தான் அவரது ஓவியத்துக்கு உயிர் நாடியென அவர் உணர்ந்தார். இப்படியே சில நாட்கள் சென்றதும் அந்தப் பெண்ணுக்கு ரவிவர்மா மீது காதலேற்படத் தொடங்கியது. இவ் விஷயம் மகாராஜாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தெரிய வந்ததும், ரவிவர்மாவுக்கே அப் பெண்ணை மணமுடித்து வைக்க அவர்கள் விரும்பினார்கள். தங்களது விருப்பத்தை அவர்கள் ரவிவர்மாவுக்குத் தெரியப்படுத்தியதும் அவர் திகைத்துப்போனார். காரணம், அந்தப் பெண் அவரைக் காதலித்தாளாயினும், ரவிவர்மா அவளது அழகை ரசித்தாரேயன்றி அவளிடம் காதல் கொள்ளவில்லை.

நிலைமையை உணர்ந்துகொண்டாலும், ஆரம்பித்த ஓவியத்தைப் பூரணப்படுத்த ரவிவர்மாவுக்கு அனுமதியளித்தார் மகாராஜா. அப் பெண்ணோ எதையும் அறிந்து கொள்ளாதவளாகத் தொடர்ந்து ரவிவர்மாவின் காதலுக்காக ஏங்கிக் கொண்டிருந்தாள்.

இந்த மனோநிலையிலிருந்த அப்பெண்ணின் முகத்தில், தான் இதுவரை தேடிக்கொண்டிருந்த காதல் ஏக்கத்தைக் கண்டார் ரவிவர்மா. அவரது ஓவியம் உண்மையான உயிர்ப்பொலிவுடன் பூரணம் பெற்றது.

கிருஷ்ணனுக்காக ஏங்கும் ராதையை அங்கு தத்ரூபமாக வரைந்துவிட்டார் ரவிவர்மா.

★ ★ ★

# வெட்கம் கெட்ட பிறப்புக்கள்....!

செங்கதிர்

றெயில்வே ஸ்டேசனில் இருந்து மேற்காகச் செல்லும் அந்தத் தார் ரோட்டு நேரே மணிக்கூட்டுக் கோபுரத்தடிக்குத்தான் பாதை அமைத்துக் கொடுக்கிறது. அந்த ரோட்டில் இரு மருங்கிலும் பாரிய மரங்கள் வரிசை வரிசையாக வளர்ந்து நின்று நிழல் தருகின்றன.

தெருவுக்கு வடக்குப் புறமாக உள்ள கடைகளின் சுவர்களில் சினிமாப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுக்கிடக்கின்றன.

கதாநாயகியிடம் நாணம் இல்லை. கதாநாயகனிடம் கட்டுப்பாடில்லை. பணத்தைக் கொடுத்து அவர்களை நெருக்கமாக்கிவிட்டு மறைந்து நிற்கிறான் தயாரிப்பாளர் - கள்ளன்!

அவர்கள்தான் நெருக்கமாக நிற்கிறார்களென்றால் அந்தத் தெருவில் செல்வோர்க்கு என்ன நினைவு?

வெறும் போஸ்டரில் உள்ள படம் அவர்களைச் சுண்டி இழுக்கிற அளவுக்கு '' அம்மோய் ... அம்மோய் .... பசிக்குது ....'' என்று அழுகின்ற அந்தக் குழந்தையின் குரல் அவர்களை ஈர்க்காததன் காரணம் என்னவாம்?

அந்தக் குழந்தை -? மனித உரிமைகள் எத்தனையோ அத்தனையும் மறுக்கப்பட்டு ஈவிரக்கமின்றி சுரண்டப்பட்ட ஒரு பரம்பரையின் இளைய தலைமுறை அது!

அதற்கு எட்டு வயது. உருவத்தைக் கொண்டு ஆறு வயது மதிக்கலாம்.

மண் தின்று காமாளை நோய் பிடித்த அதன் வயிறு காற்றாதிய மஞ்சள் பலூனைப் பெருத்துக்கிடக்கிறது. புழுதி படிந்த அதன் கேசங்கள் வாரி விடப்படாததால் சிக்கல் அடித்த நூல் பந்தாக வேணுமென்றே கிடக்கிறது.

அது என்ன குழந்தை -? பார்க்கப் புரியுதே அது பெண் குழந்தை தானென்று!

''நேக்கு ரொட்டி தா...''

''ரொட்டி வேணுமாம் ரொட்டி... மூதேசி! சனியன்! வாடி இங்கிட்டு-'' பெற்றதாய் குழந்தையைச் செல்லமாக அழைக்கிறாள்.

சிங்கள ஹோட்டல், முஸ்லீம் ஹோட்டல், சைவ ஹோட்டல் எல்லாவற்றிலும் பேதமின்றி வஞ்சகமில்லாமல் வழித்தெடுத்த எச்சில்கள் பெட்டியொன்றினுள் கிடந்து நாறுகின்றன.

அந்தத் தாய்க்கும் அவளைச் சார்ந்தவர்களுக்கும் வாய்க்கு இதமான சாப்பாடா தேவை? உண்ணுவதற்கு ஏதாவது ஒன்று. அவ்வளவுதான்.

அந்த ஏதாவது ஒன்று கல்லும் மண்ணுமாக இல்லாவிட்டால் சரிதான். கல்லும் மண்ணும் கலந்திருந்தால் பாதகமில்லை.

காலை ஆறுமணிக்கெல்லாம் தன்னைச் சேர்ந்த கூட்டத்தோடு போட்டி போட்டுப் பறித்தெடுத்த பழசுகளை அவள் பிரித்து வைக்கிறாள்.

சம்பல், கடிக்கப்பட்ட ரொட்டித்துண்டு, வடை, எலும்புத் துண்டுகள்...

''இந்தாடீ... எடியேய்... இந்தா ரொட்டீ...'' சினிமாப் போஸ்டர் பக்கமாக நின்று வாய்பார்த்த காமாளைக்குஞ்சை அவள் பலமாக அழைக்கிறாள்.

எட்டு வயதுப் பெண் குழந்தை. இன்னும் நான்கு வருடங்களுக்குள் பெரியவளாகி அடுத்த தலைமுறையைத் தாங்கப் போவபள். அம்மணமாகத் தாயை நோக்கி ஓடுகிறாள்.


அந்தக்கூட்டம் மட்டும் அப்படித்தான் வாழவேண்டுமென்று ஆண்டவன் எழுதி வைத்திருக்கிறானா, என்ன? ஆண்டவன்தான் எழுதி வைத்திருக்கிறான் என்று அவர்கள் இன்னும் நம்புகிறார்கள். அவர்களைப்பற்றி — அப்படித்தான் வாழவேண்டுமென்று நிர்ணயிப்பவர்களைப்பற்றி எவன் எழுதுகிறான்?

''நேக்கு ரொட்டியைத் தா...'' தாயின் முன்பு வந்து நின்று ரொட்டித் துண்டைக் கேட்ட சேய்மீது அன்னையின் பார்வை மொய்த்தது. குழந்தையின் நிர்வாணக் கோலம் அவளை என்னவோ செய்தது.

தாவணிச் சேலையைக் கழற்றி மகளின் அரைக்குக்கீழே சுற்றிவிட்டு ரொட்டித்துண்டைப் பிய்த்துப் பிய்த்து அந்தக் காமாளைக் குஞ்சின் வாய்க்குள் திணித்தாள். திணிக்கும் வேலையை அவள் அவசரமாகச் செய்யவேண்டி இருந்தது.

''இன்னைக்கு உனெக்கு ஒரு சட்டை வாங்கணும்'' அவளின் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

அதே நேரம் இடது பக்கக் கைமுட்டுச் சட்டையினூடு சில



தம்பி... உன்னுடைய அப்பா என்ன வேலை?

மந்திரி...

தம்பி... சாக்லேட் சாப்பிடுகிறீங்களா? அல்லது ஜெலி போட்ட ஐஸ்கிரீம் சாப்பிடுகிறீங்களா...? தம்பியின் அப்பா என்ன மந்திரி?

நாடகங்களில் மந்திரி 'ரோல்'

நாலு முதுகிலே வைத்த னெண்டால்... தள்ளி வழிவிடடா கழுதை.

— ஜோக்கிரட்டீஸ்

லென்ற குளிர் காற்றுப் பாய்ந்து அவளின் மேற்சட்டையும் கிழியக்கூடாத இடங்களிலெல்லாம் கிழிந்துவிட்டதை மெல்ல உணர்த்தியது,

ஆறுமாத காலத்துக்கு முன்பாக ஒரு வீட்டில் இரந்து பெற்ற அந்த அளவில்லாத மேற்சட்டை உடலின் அங்கங்களைப் பலகாலமாக ஓயாமல் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தமையால் இற்றுப் போய்விட்டது. மேற்சட்டையின் அடிப் பக்கத்தை மட்டும் இறுக இழுத்து முடிந்துவிட்டிருந்தாள் அவள்:

சினிமாக் கதாநாயகிகளும், நாகரிகக் குஞ்சுகளும், எதை எதை வலிந்து காட்ட முனையுதுகளோ அதையேதான் அந்தத் தாயும் அம்பலமாகக் காட்டிக் கொண்டிருக்கிறாள்.

முன்னவர்கள் செய்வது 'பாஷன்' ! பின்னையவள் செய்தது பிச்சைத் தனத்தால் !

அவள் அந்த நிலைமையில் இருக்கவேண்டியதன் வெளிப்படைக் காரணம் அளவுள்ள ஒரு சட்டை இல்லாததுதான் ! மாற்றி உடுக்க அவளுக்கு வசதி இல்லாமல் போனதன் காரணம் - ?

அவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்ற எவனொருவனாவது உண்மைக் காரணத்தைச் சொல்லித் தந்தாங்களா? பச்சைக் கள்ளர் !

கைமூட்டில் கிழிந்த சட்டையை இலேசாகத் தடவிக் கொண்டவள் புதுவிதமாகத் தன்னைத்தானே நோட்டம் விட்டுக்கொண்டாள்.

உணவின்மையால் இடை மெலிந்திருந்த அவள் கொடி உடம்பில் அழகாக - அழவான இரண்டு யொட்டுக்கள் அமைந்திருக்க வேண்டிய காரணம் அவளையே ஆச்சரியப்பட வைத்தது. ''அப்பாடீ... இம்புட்டு வடிவா நான் -?'' அவள் மனதுக்குள் எண்ணி முறுவலித்துக்கொண்டாள்.

றெயில்வே ஸ்டேசனுல் தாஜ்மகால் தியேட்டருக்குச் செல்லும் றோட்டில் வாழுபவர்கள் — சாக்கடைத் தண்ணீர் ஓடுகின்ற 'கானுக்கு' அருகே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் - 'பாங்க் ஒவ் சிலோன்' பக்கமாக வாழ்பவர்கள் - சென்ற் தோமஸ் கல்லூரிக்கருகே பஸ் ஸ்ரான்ட் அடியில் இரவு நேரங்களில் கூடுபவர்கள் எல்லாருமே அத்தனை அழகானவர்களா, என்ன ?

அவர்கள் மட்டும் எந்த ஒரு இரவில் வானில் உதித்திருக்கின்ற நட்சத்திரங்களை எண்ணுமல் விட்டிருப்பார்களா?

அந்த நாற்பது வயது 'இளசு'கள் எல்லாருமே ஒவ்வொரு இரவும் பச்சைத்தாளும் சிவப்புத்தாளும் உழைத்துக் கொள்ளும்போது இவள் மட்டும் ஏன் கடைகடையாய் ஒரு சதத்திற்கும் இரண்டு சதத்திற்கும் கையேந்துகிறாள்?

அவள் கண் முன்னே பச்சைத் தாளும் சிவப்புத்தாளும் வாங்குபவர்களின் முகங்கள் ஒவ்வொன்றும் நிழலாடின.

மீண்டுமொருமுறை குனிந்து தன் உடம்பை உற்று நோக்கிக் கொண்டவளின் கண்களில் நீல நிறத்தாள் ஒன்று அசைவது போலத் தெரிந்தது.

பெருமூச்சு ஒன்றைப் பெரிதாக விட்டபோது அரையில் இருந்த தாயின் தாவணிச்சேலையைக் கழற்றிவிட்டுவிட்டு தொந்தி வயிற்றைத் தடவியவாறு பழைய ரொட்டித் துண்டுகளை விழுங்கிக் கொண்ட அந்த நோஞ்சல் நிர்வாணமாகச் சினிமாப் போஸ்டர் பக்கமாக தலை தெறிக்க ஓடியது.

கண்மண் தெரியாமல் தலை தெறிக்க ஓடிய அந்தக் காமாலைக் குஞ்சு கண்டிக்குச் செல்லும் புகையிரதத்தைப் பிடிக்க அவசரமாகச் சென்று கொண்டிருந்த பெரிய இடத்துப் பிள்ளை ஒன்றோடா மோதவேணும்?

வாய்ப்பான இடங்களில் இதமாக மோதி பின் 'சொரி' சொல்லும் பல நங்கைகளில் ஒரு நங்கையான 'அது' முகத்தைச் சுழித்துக்கொண்டது.

இருபது வயது மதிக்கத்தக்க அந்த மங்கை, கண்ணில் பளிங்காகத் தெரியும் வளவளப்பான தொடைகளை லேஞ்சியால் மெதுவாகத் துடைத்துக் கொண்டாள்.

மார்புப் பகுதிச் சட்டையில் வேணுமென்றே இருதய

வடிவமாக எதற்காகவோ வெட்டப்பட்ட துவாரத்தினூடும் வேணுமென்றே இலேஞ்சியை ஒருதடவை வைத்து எடுத்துக் கொண்டாள்.

இந்தச் செய்கைகளெல்லாம் ஒருவித நாகரிகத்தின் அறிகுறிகள்! இவ்வளவுக்கும் அந்தக் காமாளைக் குஞ்சு மோதிக் கொண்டது அவளின் அரையோடுதான்!

''வெட்கம் கெட்டதுகள்! நாஸ்ரிக் பெலோஸ்!'' டீசன்ற்றான வார்த்தைகளால் நாகரிகமாகத் திட்டிக் கொண்ட 'அது' ப்பூ—! என்று துப்பித்தன் எரிச்சலை வெளிக்காட்டிவிட்டு விரைந்து நடந்தது!

இவ்வளவையும் கவனித்துக் கொண்டு தாவணிச் சேலையைச் சரி செய்துகொண்டிருந்தவளின் இதயத்தை 'வெட்கம் கெட்டதுகள்' என்ற சொற்கள் வெகுவாகச் சுண்டி இழுத்துக்கொண்டது.

'வெட்கம் கெட்டதுகள்!' அவள் வாய்மட்டும் இலேசாக முணுமுணுத்துக் கொண்ட போது அவள் இதயம் மட்டும் மௌனமாக அழுதுகொண்டது.

எட்டு வயது மகளுக்கு இன்னும் ஒரு முழம் சீலை எடுத்துத் தர முடியாததால் மட்டுமா அவள் வெட்கம் கெட்டுப் போனாள்?

எட்டு வருடங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியை எண்ணிக் கொண்டதும் அவள் மேனி சிலிர்த்துக்கொண்டது. கண்கள் கலங்கிவிட்டன.

°° °° °°

அவளுக்கு அப்போது வயது இருபது. வேலைக்குத் தக்க சம்பளம் அன்றும் வழங்காவிட்டாலும்கூட ஒருவேளை உணவாவது நிறைவாக உண்ணக்கூடிய வசதி இருந்தது ஏதோ உண்மைதான். மலைநாட்டுச் சூழல் - இளமைப் பருவம் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவளைக் கவர்ச்சிகரமாக்கிக் கொண்டதில் வியப்பில்லைத்தான்.

கொழுந்து கொய்யும்போது இயந்திரமாக இயங்கும் அவள் நீண்ட கைகள் கொழுந்தைக் கூடையில் அவசரமாகப் போடும்போது பக்கத்தில் நிற்பவர்கள் அவளை ஆசையாகப் பார்த்துப் பொறுமைப்பட்டுக் கொள்வார்கள்.

அவர்களைக் கண்காணிக்கின்ற கங்காணி ஐயாகூட மற்றவர்களின் குறையைச் சாடும்போது அவளின் நிறைவைச் சொல்லிக்காட்டுவார்.

''அந்தப் புள்ளை மட்டும் எம்மட்டு கொழுந்து பறிக்குது?'' சொல்லிவிட்டு ஓரக் கண்ணால் பார்த்துக்கொள்வார். நாற்பத்தெட்டு வயது முடிந்துவிட்ட அவர் ஹிட்லர் மீசையையும் ஒரு தடவை இலேசாகத் தடவிக்கொள்ள மறக்க மாட்டார்.

ஹிட்லர் மீசையில்கூட நரை விழுந்துவிட்டாலும் அவளின் நெளிப்பு - சுழிப்பு - சிரிப்பெல்லாவற்றையும் ஒன்றாக அடக்கிக் கன்னக்குழியில் வெளிக்காட்டும் அழகு - இன்னும் என்னென்னவோ...! அவரை என்னென்னவோ செய்யும்.

அன்று —

வேலை முடிகின்ற நேரம்.

குளிர்காற்று வேகமாக வீசியது. அவ்வளவுதான் மின்னவும் இல்லை, முழங்கவும் இல்லை மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அது மழையா?

சரிவான மலையின் சகதி நிறைந்த பாதையில் தொழிலாளிகள் மடுவத்தை நோக்கி மெல்ல ஊர்ந்துகொண்டிருந்தார்கள்.

தெப்பமாக நனைந்துவிட்ட தொழிலாளர்கள் மத்தியில் காமாளைக் குஞ்சின் தாய் கதாநாயகியாக நின்றாள்.

ஹிட்லர் மீசை வைத்துக் கொண்ட கங்காணி ஐயா அவசரமாக யாழ்ப்பாணச் சுருட்டொன்றை பற்ற வைத்துக் கொண்டார்.

அவரின் கால்கள் வெடவெடவென நடுங்கின. குளிரால் அல்ல!

சுருட்டுப் புகைவதுபோல அவர் இதயமும் புகைந்து கொண்டிருந்தது.

கொழுந்து நிறுத்த பின்னர் லயத்தை நோக்கித் தொழிலாளர்கள் விரைந்துகொண்டிருந்தார்கள்.

வானம் சற்றே ஓய்ந்து கிடந்தது. ஆனால் மேகங்கள் சூல்கொண்டிருந்தது. பிரசவம் சற்று நேரத்தில் நடக்குமென்ற ஐயத்தில் அவர்கள் விரைவாக நடந்துகொண்டார்கள்.

---

கணவன்: நீ மாலை கட்டப் பழகினால் நல்லது.

மனைவி; ஏன் இருந்தாப்போல மாலை எண்ணம்?

கணவன்: தேர்தலில் போட்டியிடலாமென்று பார்க்கிறேன். மாலையை யாரிடமாவது கொடுத்துப் போடவைக்கலாம்.

—மோகனம்



## சந்தி சிரிக்கிறது

நீண்ட நாட்களாக
நாற்சந்தி நடுவில்
நடப்பட்டிருந்த - அந்த
வழிகாட்டி -
மைல் கல்லில்
எழுதப்பட்டிருந்த
'தூஷண' வார்த்தைகள்
அந்த ஊர் மக்களின்
பாதையை
துலக்கமாகக் காட்டியது.

— மௌரியன்

அவர்களை முன்னேவிட்டு கங்காணி ஐயாவும் மெதுவாக நடந்து சென்றார். அவர் இதயத்தை யாரிடமோ பறிகொடுத்திருந்தார்.

அவர் இதயமற்ற மனிதனாக - ஓ! மிருகமாக — சகதி நிறைந்த பாதையில் தடுமாறிக் கொண்டு சென்றார்.

மழைக்குளிர் ஒரு புறம் — கொதித்தெழும் இரத்தத்தின் இளஞ்சூடு மறுபுறம்! இரண்டும் சேர்ந்து அவரின் உடலை ஒரு இதமான சூட்டில் வைத்திருக்க இரை தேடும் புலியாக பதுங்கிப் பதுங்கி நடந்துகொண்டிருந்தார்.

லயத்துக்கு வந்துவிட்ட காமாளைக் குஞ்சின் தாய் உடலை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த சேலையை அவிழ்த்து மறு சேலையைக் கட்டிவிட்டு மேற் சட்டையின் முடிந்திருந்த முடிச்சுக்களை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

தாய் லயத்துக்கு வரப் பொழுது செல்லும் என்ற எண்ணம் அவள் மனதில் நிறைந்திருந்ததால் இருபது வயதுப் பெண் ஆறுதலாக உடை மாற்றிக்கொண்டிருந்தாள். அதில் கூட அந்த வயதினர்க்கு ஒரு வித ரசனை!

களவெடுக்கச் செல்லும் பூனை கதவைத் தட்டிவிட்டுத் தான் செல்லும் என்று எண்ணுவது மடமைத்தனம்.

இரை தேடும் புலி இரைந்து கொண்டுதான் வரும் என்று எண்ணுவது அறியாமை.

திறந்திருந்த கதவில் நின்று 'உள்ளே வரலாமா?' எனக் கேட்டுவிட்டு கங்காணி ஐயா நுழைந்து கொள்ளாதது நாகரிகமற்ற நடவடிக்கை என்ற ஒரு முடிவுக்கு வருவது கங்காணியும் நாகரிகமானவர் என்று எண்ணியவளின் தப்பபிப்பிராயமே தவிர அவர் பிழையாகுமா?

கங்காணியின் கண்கள் இரண்டும் நிலைகுத்தி நின்றுவிட்டன.

அவள் நடுங்கிக்கொண்டாள். சத்தம் வைக்கக்கூடிய எண்ணம் கூட அவளுக்குத் தோன்றவில்லை. அவள் விக்கித்துப் போனதற்குக் காரணம் கங்காணியின் எதிர்பாராத வருகை மட்டுமா; அவள் நின்ற கோலமும் வேறொரு காரணம்தான்!

விரைவாக இரண்டு நீண்ட கைகளையும் நெஞ்சுக்குக் குறுக்காக மடித்து வைத்துக்கொண்டாள்.

நாற்பத்தைந்து வயதுக் கங்காணி ஒரு கணத்தில் இருபத்தெட்டு வயதை ஏப்பம் விட்டுக்கொண்டார்.

வெளியே மழை மெதுவாகத் தூறிக்கொண்டிருந்தது. தூற்றலில் நனைந்தபடியே ஏழெட்டுச் சின்னஞ்சிறிசுகள் லயத்துக்கு முன்னேயுள்ள புற்றரையில் கும்மாளம் இட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

சிறுமி ஒருத்தியின் உடலில் சில நிமிஷங்களுக்கு முன் ஏறிக்கொண்ட மலை அட்டை ஒன்று அவளின் இரத்தத்தைத் துளித் துளியாக உறிஞ்சி இன்பம் கண்டுகொண்டிருந்தது. தனது இரத்தவெறி அடங்கு மட்டும் சுவைத்துக்கொண்ட அந்த 'மலை அட்டை' மெதுவாகக் கழன்று கொண்டது. ஆனால் கடிவாயில் இருந்து இரத்தம் வழிந்தோடுவதை உணராமல் உணர்ச்சியற்று நின்ற சிறுமி அந்தப் புது அனுபவத்தை உணர்ந்து கொண்டபோது ''ஓ'' வெனக் கதறி அழுதுகொண்டாள்.

அந்த ''மலை அட்டை'' -? தப்பிவிட்டது.

கண்களில் வழிந்தோடிய கண்ணீர்த் துளிகளை அழுத்தித் துடைத்துக்கொண்ட காமாளைக் குஞ்சின் தாய் பழைய நினைவுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

* * *

ஹோட்டல் குப்பைத் தொட்டிக்குள் கிடந்து நாறும் எச்சில் இலைகளைப் பொறுக்கும் எண்ணம் அவளுக்கு இன்று தோன்றவில்லை.

றெயில்வே ஸ்டேசன் பக்கமாக உள்ள வீடுகளுக்குச் சென்றால் தன் மகளுக்கு — வெட்கம் கெட்டுப் பிறந்தவளுக்கு — ஒரு பழைய சட்டையாவது கிடைக்குமென்ற நம்பிக்கை அவள் மனதில் வியாபித்து வளர்ந்தது.

அதனால் றெயில்வே ஸ்டேசன் பக்கமாக உள்ள வீடுகளுக்

குத் தன் டியூட்டியை மாற்றிக் கொண்டாள்.

வழக்கமாக எங்கு சென்றாலும் 'ஐயா, அம்மா ஏதாவது போடுங்க' என்று இரந்து கொள்பவள் அன்று மட்டும் தன் குழந்தையின் நிர்வாணக் கோலத்தைக் காட்டி ஏதாவது பாவித்த அளவில்லாத சட்டை ஒன்று தரும்படி இரந்து கொண்டாள்.

பத்து வயதுப் பெண் குழந்தையணிகின்ற சட்டையைப் பருவம் அடைந்ததுகள் அணிகின்ற காலத்தில் அளவில்லாத சட்டை என்று ஒன்றும் இருக்கிறதா?

ஒவ்வொரு வீடா அவள் படி ஏறி இறங்கியது தான் மிச்சம். ஒருவனுக்கு, சீ... வேண்டாம் ஒருத்திக்கு, மனம் இளகியதா?

அவள் கடைசியாகப் படியேறிய வீட்டுக்காரிக்கு மனம் இளகாவிட்டாலும் கூட சட்டையொன்று வாங்குவதற்கான வழியையாவது சொல்லிக் கொடுத்தாளே!

° ° °

மணிக் கூட்டுக் கோபுரத்தடியில் அவள் நின்றாள். தாவணிச் சேலையைக் கழற்றி அரையில் கட்டிக் கொண்டாள். கிழிந்துபோன சட்டையின் கீழ்ப் பகுதியை மட்டும் இறுக இழுத்து முடிந்து விட்டிருந்தாள். கேசங்களை அவிழ்த்து அநாதரவாக்கி இருந்தாள்.

மெல்லென வீசும் பனிக் காற்றில் பற்றற்று அவள் கேசங்கள் பறந்து கொண்டிருந்தன. அழுது கொண்டிருக்கும் தெரு விளக்கை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு நாலுபக்க றோட்டையும் இடையிடையே நோட்டம் விட்டுக் கொண்டாள்.

காலையில் காமாளைக் குஞ்சு புத்தம் புது ரெடிமெட் சட்டையோடு நிற்கவேண்டுமென்ற வெறி அவள் உள்ளத்தில் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

இரவு பன்னிரண்டு மணி—

அவளுக்கு அது புதுவழி. புது அனுபவம். சென்ற் தோமஸ் கல்லூரி றோட்டால் ஒருவன் நடந்து வருவது அவளுக்குத் தெரிந்தது.

அந்த இரையை விட்டால் அவள் எண்ணம் நாளைக்கும் நிறைவேறாது. அவன் நெருங்கி விட்டான். அவள் மெதுவாக முறுவலித்தாள்.

இரவு பன்னிரண்டு மணியில் ஒரு பெண் ஆணைப் பார்த்து முறுவலிக்கின்ற அளவுக்கு நிலைமை ஒன்று உருவாக வேண்டிய காரணம் என்ன? கற்பைப் பற்றி வாய்கிழியப் பேசுவதிலும் எழுதுவதிலும் அர்த்தம் என்ன இருக்கிறது.

''என்ன அப்பிடிப் பார்க்கிறே?'' அவள்தான் இரகசியமாகக் கேட்டாள்.

''இல்லை...புள்ளை...'' அவன் நெருங்கிக் கொண்டான்.

நாலு கால்கள் சற்றுத் தள்ளித்தள்ளி 'பாங்க் ஒவ் சிலோன்' பக்கமாக நடக்கத் தொடங்கின.

சென்ற் தோமஸ் கல்லூரி, பஸ் ஸ்ரான்ட்... ஒவ்வொன்றும் பின்னேறிக் கொண்டிருந்தன.

தூரத்தில் இருவர் மிக நெருக்கமாக அவர்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பது புதுவழியில் இறங்கிப் புது அனுபவத்துக்குத் தயாராகப்போகும் நிலையிலுள்ள நோஞ்சலின் தாய்க்கு மங்கிய தெரு விளக்கில் மங்கலாகப் புலனாகியது.

'பெல்பொட்டம்' அணிந்து கொண்டவனுக்குப் பக்கமாக ஒருத்தி நெருங்கி வந்து கொண்டிருந்தாள். அவளின் தலை மட்டும் அவனின் மார்பில் சாய்ந்திருந்தது. அவனது கைகள் அவ

## மழைகளில் பலரகம் அவற்றில் சிலரகம்

★ **மீன் மழை**

1924ஆம் ஆண்டு மார்ச் மாதம், அவுஸ்திரேலியாவிலுள்ள லாங்கிரிச் எனும் நகரத்தில் மீன்மழை பெய்தது.

★ **இரத்த மழை**

29-6-1928 அன்று மங்கோலியாவில் இரத்த மழை பெய்தது.

★ **கறுப்பு மழை**

14-5-1849 அன்று அயர்லாந்தில் கறுப்பு மழை பெய்தது.

★ **சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களில் மழை**

14-6-1880 அன்று ரஷ்யாவில் சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களில் மழை பெய்தது.

★ **நெருப்பு மழை**

அண்மையில் ஆனையிறவில் நெருப்பு மழை பெய்தது. (தடை முகாமிற்கு அருகில்)

தொகுப்பு: வை. சந்திரகுமார்

ளின் கழுத்துக்குச் சற்றுக் கீழிறங்கி அசைய மறுத்தது. நின்றபடியே இயங்கிக் கொண்டிருந்தது. இடது கை அவளது அரையோடு பின்னிக்கிடந்தது.

தெரு விளக்கின் வெளிச்சத்தில் பெல்பொட்டம் அணிந்திருந்தவனின் மார்பில் தலை சாய்த்து இருந்தவளின் முகத்தைப் புதுவழி தேடியவள் உற்றுப் பார்த்தாள்.

அவளுக்குப் 'பக்'கென்றது. அவன்...?

காலையில் கண்டிப் புகையிரதத்தைப் பிடிக்க அவசரமாகச் சென்று காமாளைக் குஞ்சோடு மோதிய நாகரிகக்குஞ்சேதான்!

''சீ... வெட்கம் கெட்டதுகள்... என்ன குறைஞ்சுபோய் இப்படி நடக்குதுகள்...'' அருவருத்துக் கொண்டவள் அவசரமாக அரையில் கட்டி இருந்த தாவணிச் சேலையைக் கழற்றித் தாவணியாகப் போட்டுக் கொண்டாள்.

''உஸ்... பத்துரூபா கடனுத் தாறியோ? புள்ளைக்குச் சட்டை வாங்க வேணும்...'' தன்னை வெறிநாயாக நெருங்கிக் கொண்டு வருபவனிடம் அவள் இரந்தாள்.

''கடனு, என்ன கடன்? உனக்குப் பத்தென்ன ஐம்பதே தாறன்'' உனக்கு என்ற சொல் அழுத்தமாக ஒலித்தது.

''என்னுலெ ஏலாது! என் மானத்தை வித்துத்தான் எம் புள்ளையின்ர மானம் மறைக்க வேணுமெண்டா அவுக மானத்தை மறையாமலே வாழட்டும். உப்பிடி வெட்கம் கெட்டுத்தான் புழைக்கணும்னு அந்தப் புழைப்பு எனக்கும் வேணும். அந்தக்காசு என்ரெய் புள்ளைக்கு உதவவும் வேண்டாம்'' வெம்பி வந்த அழுகையை மறைத்துக் கொண்டே பதில் தந்தவள் உலக நினைவற்று நடந்து செல்லும் அந்த 'இரண்டை'யும் ஒரு ஈனப் பிறவியைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு வேகமாக நடந்தாள்.

அவள் கால்கள் பாங்க் ஒவ் சிலோன் ரோட்டால் விரைந்து திருகோணமலை ரோட்டிலுள்ள பள்ளிவாசல், பொலிஸ் ஸ்டேசன் கடந்து றெயில்வே ஸ்டேசன் ரோட்டுக்கு விரைந்து கொண்டிருந்தது.

அவள் வாய் மட்டும் 'அந்த இரண்டும்' செல்லும் திசையை நோக்கித் 'தூ' எனத் துப்பிக் கொண்டது.

காமாளைக் குஞ்சின் தாய் வழங்கிய பரிசு — அணிவித்த அணிகலன் எத்தனை பெறுமதியுடையது.


ஜனரஞ்சகமான
ஜவுளித் தினிசுகளுக்கு

யாழ்நகரில்
நம்பகமான இடம்

**ரஞ்சனஸ்**
**ஜவுளி மாளிகை**
17 - 18, மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



உயர்தரமே
எமது தராதரம்

உயர்தரமான
புடவை வகைகளின்
உன்னதமான
தெரிவுக்கு

**த. குமாரசாமி**
**ரெக்ஸ்ரைஸ்ஸ்**
42 - 44, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**For your Printing Works of**

MEMORANDUM
SOUVENIER
COMMERCIAL PRINTINGS
INDUSTRIAL PACKINGS

in

**ENGLISH - TAMIL & SINHALESE**

Contact

# M. G. M. Printing Industries

**COMMERCIAL & INDUSTRIAL PRINTERS.**

No. 102/2, Wolfendhal Street, – Colombo-13

☎ 31964

கற்பூரத் தீப வழிபாட்டின்
உண்மையான - தத்துவ மகிமையைப் பெறச்
சிறந்த கற்பூரம்

# வேல்முருகன் பிராண்ட் கற்பூரம்

தயாரிப்பாளர்கள் : குமரன் இன்டஸ்றீஸ்

46, குமாரசாமி வீதி,

**கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.**

*For Everything Electrical*

- ★ HOUSEHOLD WIRING
- ★ ELECTRICAL ACCESSORIES
- ★ ELECTRICAL CABLES... Etc...Etc.

Also Available

JOHNSON OUT BOARD
MOTOR SPARES.

EASTER CYCLES.

For your requdirements
Call or Write to

உங்களின் சகலவிதமான மின்சாரத் தேவைகளுக்கு ...

# Sundaram Trading Company

163, Main Street, Point - Pedro.

or

**81 2/5, & 2/18, Prince Street,**
**Naga Building,**
**Colombo-11.**

Cable : JEYRAJ  Phone : 22044



★ என் மனைவியைச் சந்தோஷப்படுத்த மகாபலி புரம் கூட்டிச்சென்றேன் ஊஹூம்... தாஜ்மஹால் காட்டினேன்... ஊஹூம்... காஷ்மீர், பெனாரஸ் காஞ்சிபுரம் என்று புடவையாய் வாங்கிக் குவித் தேன்... ஊஹூம்...

● பிறகு எப்படியப்பா உன் மனைவியைச்சந்தோஷப் படுத்தினாய்?

★ கடைசியாக ஹரன் ஜுவல்லர்ஸுக்கு அழைத்துச் சென்றேன்.

★

இல்லத்தரசிகள்
உள்ளம் மகிழ

நாடுங்கள்.

↓

# ஹரன் ஜுவல்லர்ஸ்

**50, கன்னாதிட்டி வீதி, R. G. பில்டிங், யாழ்ப்பாணம்.**

தந்தி: இரத்தினம்ஸ் போன்: 444

உங்களின் அன்புக்குரியவர்களுக்கு நீங்கள்
அளிக்க விரும்பும் அருமையான
பரிசுகளின் உயர்தர தெரிவுக்கு

விதம் விதமான விளையாட்டுப் பொருட்கள்
மற்றும் இரும்பு-உருக்கு-எனுமல்-கண்ணுடி
பாவனைப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள் யாவற்றிற்கும்
யாழ்நகரில் சிறந்த ஒரே இடம்.

# N. M. சுல்தான் முகிதீன்
# ஹாஜியார் அண்ட் பிறதர்ஸ்

123-125-143, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை. 2, புதிய நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 531 கிறாம்ஸ்: என்னெம்ஸ்

கலைவாணரின் நகைச்சுவை
தனித்துவமானது.

''கலைவாணி''யின் நகைகளும்
தனிச்சிறப்பானதே....

# கலைவாணி
## நகை மாளிகை

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கோலாகலமான வைபவங்களில் கலந்துகொள்வதற்கு கவர்ச்சிமிகு சாரிகள் தேவை.

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய
புதுப்புது டிசைன்களில் கண்கவர்
வர்ணங்களில் வகைவகையான
சாரிகள் எம்மிடம் உண்டு.

●

# நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

58, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

---

★ நோயாளிகள் நிலையறிவார் டாக்டர்
★ நாட்டின் நிலையறிவார் அரசியலாளர்.
★ விவசாயிகள் நிலையறிவார்

அக்றே றேட்ஸ்

இன்று கிளிநொச்சியில் விவசாய உரங்களுக்கும் கிருமிநாசினிகட்கும்
நம்பிக்கையான ஒரே இடம்.

## அக்றே றேட்ஸ்

பிரதான வீதி, கிளிநொச்சி.
உரிமையாளர்; ப. வை. ஜெயபாலன்
கிளை: விசுவமடு.

---

ஆடவர்க்கு, அரிவையர்க்கு, திருமணத்தை எதிர்பார்க்கும் நங்கையர்க்கு, தோழர்கட்கு

■ சேர்ட்டிங் ■ சூட்டிங் ■ சாறிகள்

பெறுவதற்கு நம்பிக்கையான
ஒரு புடவை மாளிகை

## நியூட்டோன் ரெக்ஸ்ரைல்ஸ்

பிரதான வீதி, கிளிநொச்சி.

ராஜாவின் பார்வை
ராணியின் பக்கம்

ஆம்.... அவர் தனது
இல்லத்தரசியின்
இதயத்தை மகிழ்விக்க
உயரிய தங்க வைர
நகைகள் வாங்கப்போகிறார்.

**தரம் விரும்புபவர்கள்
நாடுவது**

## ராணி ஆபரண மாளிகை

R. G. பில்டிங்,
கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7544



**Dont Read**

உங்கள் தேவைகள்
எதுவானாலென்ன?
இன்றே விஜயம்செய்யுங்கள்

யாழ்நகரில் சகலவிதமான
**சாய்ப்புச் சாமான்களும்**
மலிவாகவும் உத்தரவாதத்துடனும்
கிடைக்கும் ஒரே இடம்.

## றாஜா ஸ்ரோர்ஸ்

67-69, கஸ்தூரியார் வீதி:
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 372 தந்தி: ''றாஜா''